திறந்த வானம்

எபிரெயர் நிருபத்திலிருந்து
பகுப்பாய்வுச் செய்திகள்

R.ஸ்டான்லி

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

திறந்த வானம்

(முந்திய தலைப்பு : **இயேசு போதுமே!**)

R . ஸ்டான்லி, B.E., M.TECH.,
மிஷனரி
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

வெளியிடுவோர்:
ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
அஞ்சல் பை 609, வேலூர் 632 006
தொலைபேசி : 0416-242943, 248943
E-Mail: bym@vsnl.com

OPEN HEAVEN (Tamil)
Formerly titled, JESUS IS SUFFICIENT!

Copyright 1988 R. STANLEY

First Edition : June 1988
Second Edition : February 1992
This Edition : September 2001

Printed at
Bapuji Printers, Chennai 600 002.

முன்னுரை

திறந்த வானம்

வேதத்தின் புத்தகங்களில் அதிகமாய் வாசிக்கப்படாததும், அதனால் தெளிவாய் விளங்கப்படாததுமானது எபிரெயர் நிருபமாகும். ஆனால் இறையியல் ரீதியில் இந்நிருபத்தை ஒரு தங்கச் சுரங்கம் எனலாம். அது கிறிஸ்துவின் நிகரின்மையை நிலைநாட்டுகிறது; பழைய, புதிய உடன் படிக்கைகளை ஒப்பிடுகிறது; ஆசாரியத்துவம் மற்றும் பலிகளை விளக்கு கிறது; கிறிஸ்துவின் மானிடத்தை உறுதிப்படுத்துகிறது; விசுவாசத்தின் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் பறைசாற்றுகிறது.

உலகத்தாரின் சடங்காச்சார மார்க்க அமைப்புகளை விட்டுவிட்டு "*பரலோகத்திலிருந்து* பேசுகிறவருக்குச்" செவிசாய்த்து, "*வானங்களின்* வழியாய்க் கடந்துசென்று... *வானங்களுக்கு* உயர்ந்தவராய்... *பரலோகத் திற்குள்* நுழைந்து... *பரலோகத்திலுள்ள* மகத்துவ ஆசனத்தின் வலப்புறத்தில் உட்கார்ந்திருக்கிறவரான" கிறிஸ்துவை விசுவாசிப்பவர்களுக்கு இந் நிருபத்தில் வானம் திறக்கப்படும் (எபி 12:25; 4:14; 7:26; 9:24; 8:1). இவ்வித விசுவாசிகள் "*பரலோகத்தில்* பெயரெழுதப்பட்டவர்கள்" (12:23). அவர்கள் "*பரம* ஈவை" ருசிபார்க்கிறார்கள் (6:4). அவர்கள் "*பரம* அழைப்பிற்குப் பங்குள்ளவர்கள்" என அழைக்கப்படுகிறார்கள் (3:1).

அவர்கள் "*பரலோகத்தில்* உள்ளவைகளின்" பொருளாகிய ஆசீர்வாதங்களை இங்கு பூவுலகிலேயே அனுபவிக்கிறார்கள் (8:5; 9:23). மட்டுமல்ல, அவர்களுக்குப் "*பரலோகத்தில்* அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம்" உண்டு (10:34). "*பரம* எருசலேமைத்" தலைநகராய்க் கொண்டுள்ள "மேன்மையான *பரம* நாட்டை" நாடிச் செல்லும் வழிபோக்கர் அவர்கள் (11:16; 12:22).

இப்புத்தகத்திலுள்ள செய்திகளை 1984 ஜனவரி முதல் ஆகஸ்டு வரை வேலூரிலுள்ள ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் தலைமையகத்தில் ஒரு கூட்ட விசுவாசிகளுடன் பகிர்ந்துகொண்டேன். "மேன்மையான" காரியங்களைக் குறித்துப் பேசும் இந்நிருபத்தின் ஆராய்ச்சி (1:4; 6:9; 7:7,19,22; 8:6; 9:23; 10:34; 11:16,35,40; 12:24) "பூரணராகும்படி" வாஞ்சிக்கும் மேன்மையான கிறிஸ்தவர் பலரை உருவாக்கிற்று (6:1). அருமை வாசக நண்பரே, இந்தச் செய்திகளுக்கு உங்கள் இருதயத்தை நீங்கள் திறந்து வைக்கும்போது திறந்த வானத்தின் அதே ஆசீர்வாதங்கள் உங்கள்மீதும் பொழியட்டும் என ஜெபத்துடன் வாழ்த்துகிறேன்.

பொருளடக்கம்

1.	கிறிஸ்து மூலம் சுதந்தரிப்பு	...	7
2.	இரட்சிப்பு பெரியது — ஏன் ?	...	16
3.	பரம அழைப்பை நிறைவேற்றுவது எப்படி ?	...	25
4.	தேவன் தரும் இளைப்பாறுதல்	...	34
5.	விசுவாசிகளின் குருத்துவ ஊழியம்	...	43
6.	பின்மாற்றத்திற்கு மாற்றுமருந்து	...	52
7.	மெல்கிசேதேக்கும் கிறிஸ்துவும்	...	61
8.	புது உடன்பாட்டின் ஆசிகள்	...	69
9.	ஆசரிப்புக் கூடாரம்	...	77
10.	விசுவாசம் - நம்பிக்கை - அன்பு	...	86
11.	தேவனை மகிழ்விக்கும் விசுவாசம்	...	96
12.	கிறிஸ்தவ ஓட்டப்பந்தயம்	...	107
13.	சகோதர அன்பு	...	118

குறிப்பு:

இப்புத்தகத்தின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் வாசிக்குமுன் அதற்குரிய நிருப அத்தியாயத்தையும் ஒரு முறையாவது கட்டாயம் வாசித்துவிடுங்கள்.

கிறிஸ்து மூலம் சுதந்தரிப்பு

எபிரெய நிருப ஆசிரியர் இன்னாரென்று அந்நிருபத்தில் தெளிவாயில்லை. பவுல், அப்பொல்லோ, பர்னபா என்று யூகங்கள் உண்டு. எனினும் நமது ஆராய்ச்சி முழுவதிலும் "எபிரெய நிருப ஆசிரியர்" என்றே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

கிறிஸ்து மூலம் நாம் பெறும் சுதந்தரிப்பைக் குறித்து முதல் அத்தியாயம் விவரிக்கிறது. வசனங்கள் 2,4,14இல் இம்மையக்கருத்தைக் காணலாம். "குமாரனை... சர்வத்துக்கும் **சுதந்தரவாளியாக** நியமித்தார்" "இவர் தேவ தூதரைவிட சிறப்பான நாமத்தைச் **சுதந்தரித்துக்கொண்டார்**" "இரட்சிப்பைச் **சுதந்தரிக்கப்** போகிறவர்களுக்காக ஊழியஞ்செய்யும்படிக்கு." கிறிஸ்து மூலமாக நாம் எய்தும் நான்குவித சுதந்தர வீதத்தை இந்த அத்தியாயத்தில் காண்கிறோம். ஒவ்வொன்றும் ஓர் ஒப்புமை அல்லது வேற்றுமையின் பின்னணியோடு விளக்கப்பட்டுள்ளது.

1. தேவ வசனம்

வச 1,2, "பூர்வ காலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களோடு பேசிய தேவன் இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நம்முடன் **பேசினார்**."

இங்கே தீர்க்கதரிசிகளுக்கும் இயேசு கிறிஸ்துவுக்குமுள்ள வேறுபாடு கையாளப்பட்டுள்ளது.

இறைவன் பேசக் கேட்பது இணையற்ற ஆசீர்வாதம். இதைக் குறித்து மோசே மக்களிடம் உரைப்பதைக் கேளுங்கள்: "தேவன் மனிதனைப் பூமியில் படைத்த நாள்முதல், உனக்குமுன் இருந்த பூர்வ நாட்களில், வானத்தின் ஒருமுனை முதல் அதன் மறுமுனைவரை எங்காகிலும் இத்தகைய பெரிய காரியம் நடந்ததுண்டோ, இப்படிப்பட்ட காரியம் கேள்விப்பட்டதுண்டோ? நெருப்பின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய சத்தத்தை நீ கேட்டது போல, யாதொரு மக்களினமாவது கேட்டதும் உயிரோடிருந்ததும் உண்டோ?... உனக்குக் கற்றுக்கொடுக்கும்படி அவர் வானத்திலிருந்து தமது சத்தத்தை நீ கேட்கப்பண்ணி, பூமியிலே தமது பெரிய நெருப்பை உனக்குக் காண்பித்தார்; நெருப்பின் நடுவிலிருந்து உண்டான அவருடைய வார்த்தைகளைக் கேட்டாய். இந்நாளில் நான் உங்களுக்குத் தந்துள்ள இந்த நியாயப்பிரமாணம் முழுவதையும் போன்ற இவ்வளவு நியமங்களையும் முறைகளையும் பெற்றிருக்கிற வேறே பெரிய இனம் ஏது?" (உபா 4:32,33,36,8).

தேவனது வார்த்தை இல்லாத இடத்தை இருள் மூடிக்கொள்ளும். 1 சாமுவேல் 3:1-3இலுள்ள ஏலியின் சரித்திரத்தில் இதை வருணனையாய்க் காணலாம். "அந்நாட்களிலே கர்த்தருடைய வசனம் அபூர்வமாயிருந்தது" என்ற வாக்கியத்தைத் தொடர்ந்து வரும் கதையைக் கவனியுங்கள். "ஒரு நாள் ஏலி தன்னுடைய உறைவிடத்தில் படுத்துக்கொண்டிருந்தான்; அவன் பார்க்கக்கூடாதபடிக்கு அவனுடைய கண்கள் இருளடைந்திருந்தன... தேவனுடைய விளக்கு அணைந்துபோகுமுன்னே..." ஆம், தேவன் பேசாத இடத்தில் நிலவுவது இருள்தான். சபைச் சரித்திரத்தில் இருண்ட காலங்களைக் (Dark Ages) குறித்து வாசிக்கிறோம். அது என்ன? வாசிக்கவும் தியானிக்கவும் வேதம் மக்கள் கையில் கிட்டவில்லை. அது சங்கிலியால் கட்டப்பட்டுப் பிரசங்க பீடத்திலிருந்தது. வேதம் சாதா மக்கள் வாசித்து விளங்க எட்டாத அளவு புனிதமானது எனப் பாதிரிகள் சொல்லிவிடுவர். விளைவு? இருள்! தேவனது உன்னத பரிசாகிய அவரது வார்த்தையை நாம் இவ்விதம் இழந்துவிடவே முடியாது.

பழைய உடன்பாட்டுக் காலத்தில் தேவன் பேசுவதற்குத் தெரிந்துகொண்ட பொதுவான முறை தீர்க்கதரிசிகள்தான். அவர்களே அவரது வாயாய் இருந்தார்கள். பின்வரும் வசனங்களிலிருந்து தீர்க்கதரிசிகளின் ஊழியத்தைப் புரிந்துகொள்ளலாம். எண் 12:6, "அப்போது அவர்: என் வார்த்தைகளைக் கேளுங்கள்; உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாய் இருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு

வெளிப்படுத்தி, சொப்பனத்தில் அவனோடே பேசுவேன்." ஆமோஸ் 3:7, "கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக் காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத் தையும் செய்யார்."

ஆனாலும் தேவனது வார்த்தை தீர்க்கதரிசிகளுக்குப் பகுதி பகுதி யாகவே வந்தது " இங்கே கொஞ்சமும் அங்கே கொஞ்சமும்!" "பங்கு பங்காக" (வச 1). "தனித்தனியான வெளிப்பாடாக—ஒவ்வொன்றும் ஒரு பகுதி சத்தியத்தை அறிவிப்பதாக—வெவ்வேறு விதங்களில்" என்று விரிவாக்க மொழியாக்கம் அர்த்தப்படுத்தியுள்ளது. ஆனால் கிறிஸ்து மூலமாக தேவனது வார்த்தை எல்லா முழுமையோடும் நிறைவோடும் வந்தது. "ஆதியிலே வார்த்தை இருந்தது; அந்த வார்த்தை தேவனா யிருந்தது... அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம்பண்ணினார்" (யோ 1:1,14). தேவனோடு வாசமாயிருந்த வார்த்தையானவர் சகல பரிபூரணத்தோடும் நம் நடுவில் வாழ இறங்கி வந்தார். ஆம், கிறிஸ்துவே தேவனது வார்த்தையை எல்லா நிறைவோடும் நமக்களித்தார். "தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நம்மோடு **பேசினார்.**"

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதலை மறுபிறப்பு என்று வேதம் கூறுகிறது. "அழியக்கூடிய விதையினால் அல்ல, என்றும் நிற்கிறதும் உயிருள்ளதுமான தேவ **வசனமாகிய** அழிவில்லாத விதையினாலே மறுபிறப்பு அடைந்துள் ளீர்கள்" என்று பேதுரு எழுதுகிறான் (1 பேது 1:23). ஆம், ஒரு பாவி கிறிஸ்துவிடம் திரும்பும்போது அவன் முதன்முதலாகப் பெற்றுக்கொள்ளும் ஆசி அல்லது சுதந்தரம், பாவத்திலும் மீறுதலிலுமிருந்து அவனை உயிரோடெழுப்பின ஜீவ வார்த்தையாகிய வசனமே. எபேசு மூப்பருக்குப் பிரிவுரை கூறும்போது பவுல், "நீங்கள் பக்திவிருத்தியடையவும், பரிசுத்த மாக்கப்பட்ட அனைவருக்குள்ளும் உங்களுக்குச் சுதந்தரத்தைக் கொடுக் கவும் வல்லவராயிருக்கிற தேவனுக்கும் அவருடைய கிருபையுள்ள **வசனத் திற்கும்** உங்களை ஒப்புக்கொடுக்கிறேன்" என்கிறான் (அப் 20:32).

2. தேவ சிங்காசனம்

வச 3,8,13, "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலேதாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமான வருடைய வலதுபாரிசத்திலே உட்கார்ந்தார். குமாரனை நோக்கி, தேவனே உம்முடைய **சிங்காசனம்** என்றென்றைக்குமுள்ளது, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது... மேலும், நான் உம்முடைய

சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும் நீர் என்னுடைய வலது பக்கத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டா?"

பரிசுத்தப்படுத்துதல், பராக்கிரமம் அருளுதல் ஆகிய இரண்டு ஊழியங்களும் சிங்காசனத்திலிருந்து இயக்கப்படுகின்றன என்பது இவ்வசனங்களிலிருந்து தெளிவாகிறது. சிங்காசன வாழ்வின் இவ்விரண்டு தன்மைகளுக்கும் வேதத்தில் எடுத்துக்காட்டுகள் ஏராளம் உண்டு. சங் 110:3, "உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய மக்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள்." இயேசு கிறிஸ்து தேவனுடைய வலது பக்கத்தில் அமர்ந்திருப்பதினால், தேவ மக்கள் அவரது பராக்கிரமத்திற்கும் பரிசுத்தத்திற்கும் பாத்திரமுள்ளவர்களாகிறார்கள். நாம் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே எல்லா ஆன்மீக ஆசிகளாலும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோமே (எபே 1:3). மட்டுமல்ல, "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினார்." (வெளி 1:6). ஆசாரியத்துவம் சுத்திகரிக்கும் ஊழியம்—மக்களின் பாவங்களுக்காகப் பலிசெலுத்துதல்; இராஜாங்கம் வல்லமையும் அதிகாரமுமுடைய ஊழியம். கிறிஸ்துவால் நாம் இராஜாக்களும் ஆசாரியருமாயிருக்கிறோம்! பேதுரு தேவ மக்களைப் "பரிசுத்த ஆசாரியக் கூட்டம்" என்றும் "இராஜரீகமான ஆசாரியக் கூட்டம்" என்றும் அழைக்கிறான் (1 பேது 2:5,9). பரிசுத்தம்! பராக்கிரமம்!

கிறிஸ்துவின் பரிசுத்தம் நமக்கே. இயேசு தம் பிதாவிடம், "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களாகும்படி அவர்களுக்காக நான் என்னைத்தானே பரிசுத்தமாக்குகிறேன்" என்று ஜெபித்தார் (யோ 17:19). பவுலும் 1 கொரி 1:30இல் இதே சத்தியத்தை விவரிக்கிறான்: "அந்தப்படி நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள்... அவரே தேவனால் நமக்கு ஞானமும் நீதியும் பரிசுத்தமும் மீட்புமானார்." கிறிஸ்துவே என் நீதி! அவரே என் பரிசுத்தம்! "எனது" நீதி யாவும் அவருக்கு முன் அழுக்கான கந்தை. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டபோதோ அவர் என் நீதியாகிறார். எத்தனை அருமை! இதைத்தான் பரிசுத்த அலங்காரம் என்று வேதம் வருணிக்கிறது. "எனது" நீதியிலும் பரிசுத்தத்திலும் அலங்காரம் ஏது? ஆனால் என்னை அணைத்துக்கொண்ட கிறிஸ்து எனக்கு நீதியின் சித்திரத் தையலாடையாயிருக்கிறார்.

கிறிஸ்துவின் வல்லமையும் நம்முடையதே. யோ 16:33, "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன்கொள்ளுங்கள்; நான்

உலகத்தை வென்றேன் என்றார்." அவரது வெற்றி என் வெற்றி. அவர் வென்றபடியால் என்னை எவரும் வெல்ல முடியாது. நான் மகிழ்ச்சியோடே புறப்பட்டுப் போவேன். "பிள்ளைகளே, நீங்கள் தேவனால் உண்டாயிருந்து, அவர்களை வென்றீர்கள்; ஏனெனில் உலகத்திலிருக்கிறவனிலும் உங்க ளிலிருக்கிறவர் பெரியவர்" என்றெழுதுகிறான் யோவான் (1 யோ 4:4).

கிறிஸ்துவோடு சிங்காசனத்தில் வீற்றிருப்பதால் இவ்விரண்டு ஆசிகளும் நமக்கே உரியதானாலும் நடைமுறையில் இவற்றை அனுபவிக்க இம் மகிமையான சுதந்தரவீதத்தை அடிக்கடி நினைவூட்டிக்கொள்வதோடு விசுவாசத்தினால் அதைப் பற்றிக்கொண்டு இவ்வுலகின் அசுசியான கவர்ச்சிகளைத் தள்ளிவிடவேண்டும். "நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்த துண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலப்புறத்தில் அமர்ந்திருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்" (கொலோ 3:1-4).

3. தேவ ஆவியானவர்

வச 9, "நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர்; ஆதலால்: தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் **அபிஷேகம்** பண்ணினார்."

இங்கே கிறிஸ்துவுக்கும் அவரது தோழருக்குமுள்ள வேறுபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் அபிஷேகிக்கப்பட்ட ஊழியங்கள் மூன்று: தீர்க்கதரிசி, ஆசாரியன், இராஜா. கிறிஸ்து என்றால் அபிஷேகிக் கப்பட்டவர் என்று பொருள். அவரில் இம்மூன்று ஊழியங்களும் ஒருங்கே நிறைவேறின. ஒன்றில் மூன்று! எனவே கிறிஸ்துவுக்குமுன் அவரது ஊழியத்தை நிழல்படுத்தின தீர்க்கதரிசிகள், ஆசாரியர், இராஜாக்களான அவரது தோழரைக் காட்டிலும் அவர்மேல் தங்கியிருந்த அபிஷேகம் அதிகமாயிருந்தது.

யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவைக் குறித்து இவ்வாறு சாட்சி பகர்ந்தான்: "தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார்; தேவன் அவருக்குத் தமது ஆவியை **அளவில்லாமல்** கொடுத் திருக்கிறார். பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார், குமாரனிடத்தில் விசுவாசமா யிருக்கிறவன் நித்திய வாழ்வை உடையவனாயிருக்கிறான்" (யோ 3:34-36).

இதை நன்கு கவனித்துப் பாருங்கள். முதலாவது பிதாவானவர் தமது ஆவியை குமாரனுக்கு அளவில்லாமல் அளிக்கிறார். அவருக்கு எல்லாவற்றையும் அன்பினால் அளிக்கிறார். அதோடு நின்றுவிட்டால் நமக்கு என்ன லாபம்? ஆனால் அடுத்த வசனம் குமாரன் தாம் தமது தந்தையிடம் பெற்றுக்கொண்ட எல்லாவற்றையும் தம்மை விசுவாசிப்பவர்களுக்குக் கடத்துகிறார் என்று கூறுகிறது! அல்லேலூயா! ஆம், இயேசு வெறுமனே ரசிக்கப்படத்தக்கவரல்ல, அவர் ருசிக்கப்படத்தக்கவர்! குமாரன் மூலமாய் தேவ ஆவியானவர் அளவில்லாமல் நமக்குக் கிடைக்கிறார்.

யோர்தான் நதிக்கரையோரம் யோவான் ஸ்நானகன் இதையே கூறினான். "நான் தண்ணீரினால் உங்களுக்குத் திருமுழுக்கு கொடுத்தேன்; அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்குத் திருமுழுக்கு கொடுப்பார்" (மாற் 1:8). ஆவியின் தெளிப்பு அல்ல, ஆவியில் குளிப்பு! முழுக்கு, தோய்ப்பு, நிறைவு, வழிவு! அளவில்லாமல் ஆவி! பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு இதைப் புரிந்தே பேசினான்: "அவர் தேவனுடைய வலது கரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியைப் பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப் பொழிந்தருளினார்" (அப் 2:33). இது ஓர் பொழிவு! கிறிஸ்து பிதாவிடம் பெற்றுக்கொள்வதெல்லாம் நமக்குத் தாராளமாய்த் தரப்படும்! கிறிஸ்துவில் நம் சுதந்தரம்தான் என்னே! அவர் தமக்குத்தானே எதையும் வைத்துக் கொள்வதில்லை. மூன்று பராக்கிரமசாலிகள் தங்கள் உயிரையும் துச்சமாய் எண்ணி பெத்லகேமின் தெளிநீரைத் தாவீதிற்குக் கொணர்ந்தனர். தாவீதோ கர்த்தருக்கென்று அதை ஊற்றிப்போட்டான். தாவீதின் குமாரன் குறைவாய்ச் செய்வாரோ?

குற்றவுணர்வடைந்த யூதர் பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, "சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும்?" என்று வினவியபொழுது, பேதுரு, "நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்போது பரிசுத்த ஆவியின் வரத்தைப் **பெறுவீர்கள்**" என்றான் (அப் 2:37,38). நீங்கள் **பெறவேண்டும்** என்றல்ல, **பெறுவீர்கள்** என்றே உரைத்தான்! ஆம் அருமையானவரே, கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவின் ஆளுகைக்குள் நாம் வரும்போது பரிசுத்தாவியின் ஈவு நமது பிறப்புரிமையாகிறது.

இச்சத்தியத்தின் ஓர் எழில்மிகு வருணனையை சங்கீதம் 133:1,2இல் காணலாம். "இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது! அது ஆரோனுடைய சிரசின்மேல்

ஊற்றப்பட்டு, அவனுடைய தாடியிலே வடிகிறதும், அவனுடைய அங்கி களின்மேல் இறங்குகிறதுமான நல்ல தைலத்துக்கும்... ஒப்பாயிருக் கிறது." கிறிஸ்துவாகிய தலையிலிருந்து வழிந்து ஓடி சபையாகிய அவரது உடலை—ஒருமித்த சகோதரரை—நனைக்கும் தேவனது ஆவியேயல்லாமல் இது வேறென்ன ?

4. தேவ தூதர்

வச 5, "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மைப் பெற் றெடுத்தேன் என்று அவர் **தூதர்களில்** யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டோ ?"

இங்கே கிறிஸ்து தூதரிலிருந்து வேறுபடுத்தப்பட்டுள்ளார். தூதரை இரண்டு கோணங்களில் காணலாம்—முதலாவது நமது குமாரத்துவத்தை ஒட்டியும் பின்பு நமது ஆட்சியை ஒட்டியும்.

நாம் கிறிஸ்துவின் நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டபொழுது அவரது குமாரராகும் **உரிமை** பெற்றோம். இது தூதரும் பெறாத சிலாக்கியம். *இங்கு* நாமும் தூதராயில்லையே என ஏங்கும் நாம் *அங்கு* நமது நிலைக்காய்த் தேவனைத் துதிப்போம்!

எபி 2:14-19, "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசா சானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், வாழ்நாளெல் லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவ ரையும் விடுதலை பண்ணும்படிக்கும் அப்படியானார். ஆதலால், அவர் தேவ தூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்" (எபி 2:14-16).

கிறிஸ்துவின் மூலமாய் ஆபிரகாமின் வழித்தோன்றல்களாகிய நாமே தேவனுக்குச் சிறப்பானவர்கள்! தூதருக்குத் தராததை அவர் நமக்குத் தந்தார். நாமே அவரது மனமகிழ்ச்சி. முதற்பேறானவர் கிறிஸ்து. அவர் உலகில் உதித்தபோது தூதர் தேவனைத் தொழுதனர். "தமது முதற் பேறானவரை உலகத்தில் நுழையச் செய்தபோது: தேவதூதர் யாவரும் அவரைத் தொழுதுகொள்ளக்கடவர்கள் என்றார்" (வச 6). நாம் கிறிஸ்து வின் உடன் பிறப்புக்கள். நமது மறுபிறப்பிலும் தூதர் அகமகிழ்ந்து தேவனைத் தொழுகின்றனர்! "மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்குமுன் மகிழ்ச்சியுண்டாயிருக்கிறது" (லூக் 15:10).

இவ்விதம், நமது புத்திரசுவிகாரத்திற்காகத் தேவதூதரும் நம்மைக் காண ஆவலோடிருக்கிறார்கள். "உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்து தீர்க்கதரிசனம் சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக் குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனை பண்ணினார்கள்... இவை களை உற்றுப்பார்க்கத் தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்" (1 பேது 1:10,12). கிறிஸ்துவில் நமது சுதந்தரவீதம் இத்தனை மகிமையாயி ருப்பதினால் தேவனது மகிமையைக் கண்ணாரக் கண்ட தூதரும் நமது பார்வையாளராயிருக்கப் பறக்கிறார்கள். தூதரை ரசிகராய்க் கொண்ட நம் பாக்கியமே பாக்கியம்!

அடுத்து நம் **ஆளுகை.** வச 13,14, "நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப்போடும் வரைக்கும் நீர் என்னுடைய வலது பக்கத்தில் உட்காரும் என்று தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் அவர் சொன்னதுண்டோ? இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களினி மித்தமாக ஊழியஞ்செய்யும்படிக்கு அவர்களெல்லாரும் அனுப்பப்படும் பணிவிடை ஆவிகளாயிருக்கிறார்களல்லவா?"

மீட்கப்பட்டோரின் பரலோகப் பாடல், "தேவரீர் புத்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் தகுதியுள்ளவராயிருக்கிறீர். ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல குலத்தினர், மொழியினர், நாட்டினர், மக்களினங் களிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர், நாங்கள் பூமியிலே அரசாளுவோம்" என்பதே. ஆனால் தூதரின் பாடல் கர்த்தரைத் துதிப்பது மட்டும்தான். அவரது ஆளுகையில் அவர்கள் இணைவது இல்லை (வெளி 5:9-12). 1 கொரி 6:3இல் பவுல், "தேவ தூதர்களையும் நியாயந்தீர்ப்போமென்று அறி யீர்களா?" என்று கேட்கிறான்.

கிறிஸ்துவில் நாம் **குமாரத்துவத்தைச்** சுதந்தரிப்பதினால் தூதர் நமது ரசிகராகின்றனர்; கிறிஸ்துவில் நாம் **ஆளுகையைச்** சுதந்தரிப்பதினால் தூதர் நமது பணியாளராகின்றனர். இவ்விதம் கிறிஸ்துவினிமித்தம் தூதர் நம்முடையவராகின்றனர்!

முடிவுரை

தேவ வசனம், தேவ சிங்காசனம், தேவ ஆவியானவர், தேவ தூதர் ஆகிய நான்கு சுதந்தரவீதங்கள் தேவனது இரட்சிப்பை முழுமையாய் ருசிக்க நமக்கு ஏதுக்களாகின்றன. பாவத்தின் தண்டனையினின்று

மீட்கப்பட்டோம்; பாவத்தின் வல்லமையினின்று **மீட்கப்படுகிறோம்**; பாவத்தின் பிரசன்னத்திலிருந்தே **மீட்கப்படுவோம்**. தேவ வசனத்தால் மறுபிறப்பு; சிங்காசன வாழ்வினால் பரிசுத்தமடைதலும் வெற்றி வாழ்வும்; தேவ ஆவியினால் அவரது சாயலுக்கொப்ப மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபமாகுதல்; தேவனது பரிசுத்த தூதர் சூழ கிறிஸ்துவோடு ஆளுகை. ஆஹா, என்னே சுதந்தரிப்பு!

எபிரெயர் அத்தியாயம் இரண்டு

இரட்சிப்பு ஏன் பெரியது?

இவ்வத்தியாயத்தின் கருப்பொருளே தேவனது இரட்சிப்புதான். "இவ்வளவு பெரிதான இரட்சிப்பு" (வச 4) என்றும், "இரட்சிப்பின் அதிபதி" (வச 10) என்றும் இங்கு வாசிக்கிறோம். முந்திய அத்தியாயத்தின் இறுதி வசனம் "இரட்சிப்பைச் சுதந்தரிக்கப்போகிறவர்களைக்" குறிப்பிடுகிறது. தேவனது இரட்சிப்பு பெரியது. அது மகிமையானது. இந்த அத்தியாயம் இதற்கு ஐந்து காரணங்களைத் தருகிறது.

1. தேவத்துவத்தின் சாட்சி

வச 3,4, "முதலாவது **கர்த்தர்** மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த **ஆவியின்** வரங்களினாலும், **தேவன்** தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பு."

இரட்சிப்பைக் குறித்து பிதாவாகிய தேவனும், குமாரனாகிய தேவனும், பரிசுத்த ஆவியாகிய தேவனும் இணைந்து சாட்சி பகர்தல் இப்பகுதியில்

மின்னலெனத் தெளிவாயுள்ளது. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவையே முதல் சுவிசேஷகராகச் சந்திக்கிறோம். யோவான் ஸ்நானகன் கிறிஸ்துவுக்குமுன் பிரசங்கித்தது உண்மையெனினும் அவனது செய்தியில் ''மனந்திரும்புதலுக் கான'' அழைப்பு மட்டுமே இருந்தது. ஆனால் ''விசுவாசத்தின்'' சாராம் சமாகிய இரட்சிப்பின் நற்செய்தியை முதலில் அறிவித்தது கிறிஸ்துவே. ''மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்'' என்றார் அவர் (மாற் 1:15). பிதாவாகிய தேவன் இயேசுவோடு இருந்து அடையாளங்களினா லும் அற்புதங்களினாலும் அவரது வார்த்தையை உறுதிப்படுத்தினார். ''இயேசுவைத் தேவன்... அபிஷேகம்பண்ணினார்; தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மை செய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார்'' (அப் 10:38). இயேசுவின் ஊழியத்தில் அற்புதங்களைக் கண்டோர் அப்படிப்பட்ட வல்லமையை அவருக்கு அளித்த தேவனை மகிமைப்படுத்தினர். அப்போஸ்தலர் முழங்கின இரட்சிப்பின் நற்செய்தியை எவரும் மறுக்க இயலா வகையில் அற்புதங்களினால் தேவன் உறுதிப்படுத்தினார் (அப் 4:21,22; 15:12; 19:11). மூன்றாம் சாட்சி ஆவியானவர். கொர்நேலியு வீட்டாருக்குப் பேதுரு நற்செய்தி அறிவிக்கையில் பரிசுத்த ஆவியானவர் இறங்கியது இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. ''இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக் கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்'' (அப் 10:44). அப்படியே எபேசு சீடர்கள் பவுல் மூலம் கேட்ட நற்செய்தியை விசுவாசித்தபோது ''பரிசுத்த ஆவி அவர்கள்மேல் வந்தார்'' (அப் 19:4-6). இவ்விரண்டு சம்பவங்களிலும் ஆவியின் வரங்கள் வெளிப்பட்டன. இவ்விதம் திரித் துவத்தின் மூவரும் அருளும் முப்புரி சாட்சி இரட்சிப்பின் மேன்மையை விளக்குகிறது.

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரின் கூட்டு சாட்சிக்கு மூன்று எடுத்துக்காட்டுகள் உண்டு. அவை பெந்தெகொஸ்தேக்கு முன்பாக ஒன்றும், ஒட்டி ஒன்றும், அடுத்து ஒன்றுமாக வருவது கவனிக்கத்தக்கது. (1) இயேசுவின் ஞானஸ்நானக் காட்சி முதலாவது. இயேசு கரை யேறுகிறார்; ஆவியானவர் அவர்மேல் இறங்குகிறார்; பிதா குமாரனைப் பாராட்டுகிறார் (மத் 3:16,17). (2) இயேசு உயிர்த்தெழுந்து பிதாவின் வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டபோது பரிசுத்தாவியானவர் பொழிந் தருளப்பட்டதைக் குறித்துப் பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் பேசுகிறான் (அப் 2:32,33). (3) பெந்தெகொஸ்தேயை அடுத்து: குமாரனின் நாமத்தில் அற்புதங்களும் தைரியமும் அடையும்படியாக அப்போஸ்தலர் பிதாவிடம் விண்ணப்பிக்கின்றனர்; பரிசுத்த ஆவி அவர்களை நிரப்பி, விண்ணப்பம் உடனடி விடைபெறுகிறது (அப் 4:20-31). இயேசுவின் ஞானஸ்நானம்

அவரது ஊழியத் துவக்கத்தைக் குறிக்கிறது. பெந்தெகொஸ்தே நாள் சபையின் ஊழியத்தை, அதாவது நற்செய்தி அறிவிப்புப் பணியைத் துவக்கி வைத்தது. மூன்றாம் நிகழ்ச்சி நாம் இரட்சிப்பின் நற்செய்தியை "தைரியத்தோடு" அறிவிக்க வேண்டிய இன்றைய யுகத்தைக் குறிக்கிறது.

"எல்லாக் காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் உறுதிப்படும்" (2 கொரி 13:1; உபா 19:15). இந்த வேதத் தத்துவம் இரட்சிப்பின் நற்செய்தியிலும் அழகாக நிறைவேறுகிறது. எனவே இரட்சிப்பு உறுதிப்படுத்தப்பட்ட சத்தியம்.

இரட்சிப்பு பெரியது — ஏனெனில், அது உண்மையானது!

2. படைப்பின்மீது ஆளுகை

வச 5-7, "இனிவரும் உலகத்தைக் குறித்துப் பேசுகிறோமே. அதை அவர் தூதர்களுக்குக் கீழ்ப்படுத்தவில்லை. ஓரிடத்தில் ஒருவன் சாட்சியாக: மனிதனை நீர் நினைக்கிறதற்கும், மனுக்குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம்? அவனைத் தேவ தூதரிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்; மகிமையினாலும் கனத்தினாலும் அவனுக்கு முடிசூட்டி, உம்முடைய கரத்தின் செயல்களின்மேல் அவனை அதிகாரியாக வைத்து, எல்லாவற்றையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர் என்று சொன்னான்."

எபிரெய நிருப ஆக்கியோன் இப்பகுதியை சங்கீதம் எட்டிலிருந்து எடுத்துரைக்கிறான். தேவனது பெரும் படைப்பிற்குமுன் மனிதன் எத்தனை சிறியவன் என்று சங்கீதக்காரன் வியக்கிறான். நாம் தூசுதான். தேவ தூதரைக்காட்டிலும் சிறியவர்—தூதர் ஆவியாயிருப்பதினால் எங்கும் செல்லலாம். அவர்கள் மரிப்பது இல்லை. மனிதரோ ஒருதரம் மரிக்க நியமிக்கப்பட்டுள்ளனர். மனிதன் இடத்திற்கும் காலத்திற்கும் கட்டுப்பட்டவன். வான மண்டலங்களை நோக்குங்கால் மனிதன் அற்பமானவனாயிருந்தாலும், தூதருக்கும் சிறியவனாக படைக்கப்பட்டிருந்தும் மண்ணுலகுமீது அவனைத் தேவன் அதிகாரியாக்கினார் (ஆதி 1:28). ஆனால் மனிதன் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் பாவம் செய்ததினால் தன் ஆதிக்கத்தை இழந்து பயமும் குற்றவுணர்வும் நிறைந்தவனானான். தேவனோ அப்படியே அவனை விட்டுவிடாமல் தமது குமாரன் மூலமாக அவனுக்கு இரட்சிப்பை அருளுகிறார். இந்த இரட்சிப்பு அவன் இழந்த "மகிமையையும் கனத்தையும்" திரும்பப் பெறுதலாகும்.

கெட்ட குமாரனின் கதை இச்சத்தியத்தைத் தெளிவாக்குகிறது. மகன் வீடு திரும்புகிறான். அப்பொழுது தந்தை தன் வேலைக்காரரைப் பார்த்து, ''நீங்கள் உயர்ந்த ஆடையைக் கொண்டுவந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்குக் காலணிகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடியுங்கள். நாம் புசித்து சந்தோஷமாயிருப்போம்'' என்கிறான் (லூக் 15:22,24). முழுமையும் திரும்பப் பெறுதல்—ஐக்கியம், ஆளுகை, மதிப்பு, மகிழ்ச்சி ஆகிய யாவும்! வேலைக்காரனாய் அண்டிக்கொள்ள வந்த மகனுக்கு மோதிரத்தை அணிவித்ததால் தன்னோடு வீட்டில் அதிகாரியாகும் நிலையில் அவனைத் திரும்ப இருத்தினார். இதுவே இரட்சிப்பு. ஆண்டியை அரசனாக்குதல்!

நாம் திரும்பப் பெற்ற அதிகாரத்தில் நிகழ்கால மற்றும் வருங்கால கூறுகள் உண்டு. ''விண்ணிலும் மண்ணிலும் எல்லா அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய்... இதோ, யுகத்தின் முடிவுவரை எல்லா நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' என்றார் இயேசு (மத் 28:18-20). பிசாசுகள் தங்களுக்குக் கீழ்ப்படிந்ததினால் மகிழ்ந்த சீடருக்கு அது அவர்களது பரலோகக் குடி மதிப்பினால்தான் கிட்டிய சிலாக்கியம் என்று அவர் விளக்கினார் (லூக் 10:17-20). மனிதருக்கும் நமது ஆத்துமாக்களுக்கும் விரோதமாகப் போரிடும் அந்தகார சக்திகளின்மேல் இதே அதிகாரத்தை நாம் இன்றும் செலுத்தலாம். உலகிலிருப்பவனைக் காட்டிலும் நம்மிலிருப்பவர் பெரியவராகையால் நாம் நிச்சயம் மேற்கொள்ளுவோம். எனினும் திரும்பப் பெறுதல் எதிர்காலத்தில்தான் முற்றுப்பெறும். எனவேதான் ''இன்னும் அவனுக்குச் சகலமும் கீழ்ப்பட்டிருக்கக் காணோம்'' என்று வாசிக்கிறோம் (வச 8).

''பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட தேவரீர் குழந்தைகள் பாலகர் வாயினால் வலிமை உண்டுபண்ணினீர்'' எனச் சங்கீதம் 8:2இல் வாசிக்கிறோம். பகைஞன் இன்று அடங்கியா இருக்கிறான்? சீறிக்கொண்டல்லவா அலைகிறான்? ஆனால் ஒருநாள் வரும், அன்று ஈசாயின் அடிமரமானவர் தமது மக்களுக்கு வெற்றிக் கொடியாவார். அப்பொழுது, ''பால் குடிக்கும் குழந்தை விரியன் பாம்பு வளையின் மேல் விளையாடும், பால் மறந்த பிள்ளை கட்டுவிரியன் புற்றிலே தன் கையை வைக்கும்'' (ஏசா 11:8). அந்நாளில் பழிகாரன் வாயடைக்கப்பட்டுக் கீழே தள்ளப்படுவதால் அவரது புனித மலையெங்கும் தீங்குசெய்வார் இருக்கமாட்டார்; பூவுலகு கர்த்தரை அறிகிற அறிவினால் (மட்டும்) நிறைந்திருக்கும் (ஏசா 11:9).

இரட்சிப்பு பெரியது — ஏனெனில், அது திரும்பப் பெறுவது!

3. உபத்திரவத்தினால் மகிமை

வச 9-11, "தேவனுடைய கிருபையினால் ஒவ்வொருவருக்காகவும், மரணத்தை ருசிபார்க்கும்படிக்கு தேவ தூதரிலும் சற்று சிறியவராக்கப் பட்டிருந்த இயேசு மரணத்தைத் தழுவியதால் மகிமையினாலும் கனத் தினாலும் முடிசூட்டப்பட்டதைக் காண்கிறோம். ஏனென்றால் தமக்காகவும், தம்மாலேயும் எல்லாவற்றையும் உண்டாக்கினவர், ஏராளமான பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்க்கையில் அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவங்களினாலே பூரணப்படுத்துகிறது அவருக்கேற்ற தாயிருந்து. எப்படியெனில், பரிசுத்தம் செய்கிறவரும் பரிசுத்தம் செய்யப் படுகிறவர்களுமாகிய யாவரும் ஒருவராலே உண்டாயிருக்கிறார்கள்."

நமது இரட்சிப்பின் அதிபதியை உபத்திரவம் பூரணப்படுத்திற்று. அப்படியே இரட்சிப்பின் சுதந்தரவாளிகளாகிய நம்மையும் உபத்திரவம் பூரணப்படுத்துகிறது. ரோமர் 8:35-39, "கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றி லேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே வெற்றியையும் மிஞ்சுகிற வர்களாயிருக்கிறோமே." பாடுகளே, வருக வருக! பாடுகள்தான் இறை வனது சீடத்துவப் பள்ளி, கண்டிக்கும் பிரம்பு, சுத்திகரிக்கும் உலைக்களம், பலப்படுத்தும் உடற்பயிற்சி. பரிசுத்தவான் ஒருவனும் உபத்திரவத்தைச் சுற்றி விலகிச்செல்ல முடியாது. வேறு வழியேயில்லை. துன்பம் துர்ப் பாக்கியரான சிலருக்கு மட்டுமல்ல. நாம் யாவரும் "அநேக" உபத்திரவங் களின் வழியாய் இறையரசில் நுழைய வேண்டும் (அப் 14:22).

இரட்சிப்பின் பாதை சிலுவைப் பாதை. ஆனால் அதின் முடிவு அமோக வெற்றி. இயேசு நம்மைத் "தினமும்" சிலுவையைச் சுமக்கச் சொன்னார். இறையரசிற்குள் நாம் பிறந்த நாளிலிருந்து விண்ணரசிற்குள் நுழையும் நாள்வரை சிலுவை சுமந்தேயாக வேண்டும். கிறிஸ்தவர் என்றாலே சிலுவை சுமப்பவர்தான். இரட்சிப்பின் திட்டத்தில் உபத்திரவமும் உள்ளடங்கியது என்பதைக் கிறிஸ்தவன் துவக்கத்திலேயே அறிவானானால் பின்னர் அதிருப்தியும் அதிர்ச்சியும் அடையமாட்டான். அப்படியானால் துன்பம் இரட்சிப்பைப் பெரிதாக்குவது எங்ஙனம்?

துன்பச் சூழலில்தான் இரட்சிக்கப்பட்டவன் வேதனையைத் தாங்கி வெற்றிவீரனாய் வெளியேற தேவனது சகல ஏதுக்களையும் அனுபவிக் கிறான். துன்பப்படும்போது தேவன் நம்மைத் தாங்குகிறார்— "கிருபை யினால்" (வச 9). பரிசுத்தவான்கள் புடமிடப்படும்பொழுது தனிக்கிருபை

பெறுகின்றனர். நாம் ஆறுதலின், மனதுருக்கத்தின் தேவனைச் சேவிக்கிறோம். நமது வாழ்வின் ஒவ்வொரு "முள்ளிற்கும்" அவரது "போதிய கிருபை" ஆயத்தமாய் உள்ளது. மட்டுமல்ல, நம்மை அவர் மேய்த்து நடத்துகிறார்— "கொண்டுவந்து சேர்க்கிறார்" (வச 10). தகப்பன் சொந்தக் குமாரனைக் கானகப் பாதையில் கரம் பிடித்து நடத்துவதுபோல மரண இருளின் பள்ளத்தாக்கில் மாபெரும் ஆறுதல் அவரது "கோலும் தடியும்," நீங்கா பிரசன்னமுமே. மேலும் உபத்திரவத்தில் அவர் நம்மைச் சுத்திகரிக்கிறார். இதுவே அவரது குறிக்கோள் (வச 10,11).

முக்கால இரட்சிப்பை இவ்விதம் புரிந்துகொள்ளலாம்: நீதிமானாக்கப்படுதல், சுத்திகரிக்கப்படுதல், மகிமைப்படுதல். இக்காலப் பாடுகள் இனி வரும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவையல்ல. இரட்சிப்பில் நிலையான, உறுதியான பாதுகாப்பு உண்டு. நாம் உபத்திரவத்தில் பயந்து பதறத் தேவையில்லை. "தமது மூலம் தேவனிடத்தில் வருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்" (எபி 7:15). மூலையிலிருந்து முடிவுவரை!

இரட்சிப்பு பெரியது — ஏனெனில், அது பலன் நிறைந்தது!

4. தேவ குடும்பத்தில் அங்கவகிப்பு

வச 11-16, "அவர்களைச் சகோதரரென்று சொல்ல அவர் வெட்கப்படாமல்: உமது பெயரை என் சகோதரருக்கு அறிவித்து, சபை நடுவில் உம்மைத் துதித்துப் பாடுவேன் என்றும்; நான் அவரிடத்தில் நம்பிக்கையாயிருப்பேன் என்றும்; இதோ நானும், தேவன் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் என்றும் சொல்லியிருக்கிறார். ஆதலால், அவர் தூதருக்கு உதவியாகக் கைகொடாமல், ஆபிரகாமின் சந்ததிக்கு உதவியாகக் கைகொடுத்தார்."

இரட்சிப்பினால் தேவ குடும்பத்தில் நமக்குக் கிடைக்கும் நிலைதான் என்னே! நாம் இயேசு கிறிஸ்துவின் சகோதரர்! தேவ சபையின் முழு அங்கத்தினர்! தேவனது சொந்தப் பிள்ளைகள்! ஆபிரகாமின் வழித்தோன்றல்! உயிர்த்தெழுந்த இரட்சகர் மரியாளிடம், "நீ என் சகோதரரிடத்திற்குப் போய், நான் என் பிதாவிடமும் உங்கள் பிதாவிடமும், என் தேவனிடமும் உங்கள் தேவனிடமும் ஏறிப் போகிறேன் என்று அவர்களுக்குச் சொல்லு" என்றது நினைவுக்கு வருகிறதா? (யோ 20:17).

இரட்சிப்பினால் தேவக் குடும்பத்தில் இயேசு கிறிஸ்துவுக்கு இணையாக அடையாளப் படுத்தப்படுகிறோம். இயேசு பிதாவிற்கு எப்படியோ, பிதாவோடு எப்படியோ, அப்படியே நாமும் இரட்சிப்பினால் பரம தந்தையோடு உறவு பெறுகிறோம். இதைவிடப் பெரிய சிலாக்கியம் உண்டோ?

என் பாவங்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்தன; இரட்சிப்போ அவரை என் சொந்தச் சகோதரனாக்கிற்று. தன்னிச்சையாய் தேவனற்று நம்பிக்கையற்றுத் திரிந்தேன்; இரட்சிப்போ தேவனது பரிசுத்தர் கூட்டத்தில் என்னையும் சேர்த்தது. விசுவாசத்தினால் இரட்சிப்பின் ஈவை நான் தழுவிக்கொண்டபோது ஆபிரகாமின் சந்ததியாகிய வாக்குத்தத்தத்தின் சந்ததியானேன். "ஆண்டவரே, என் ஆத்துமாவை இரட்சித்தீரே, உமக்கு நன்றி!" பாவமற்ற, குற்றமற்ற, அப்பழுக்கற்ற தேவக்குமாரன் நம்மைத் தம் சகோதரரென்றழைப்பது எத்தனைத் தியாகம்! பரிசுத்த பிதா, உன்னத தேவன் நம்மைப் பிள்ளைகளென்றழைப்பது எத்தனை அன்பு! இதுதான் இரட்சிப்பின் மேன்மை!

இயேசு, "அறிவிப்பேன்" என்கிறார் — பெருமிதம்! "பாடுவேன்" என்கிறார் —பரவசம்! "நம்பிக்கையாயிருப்பேன்" என்கிறார்—பாதுகாப்பு! உசித ஆசிகள்! "தேவன் என் அப்பா. இயேசு என் அண்ணா. ஆவியானவர் என் ஆலோசகர். எனக்குப் பயமேன்?" என்று ஆர்ப்பரிப்போமா? 14,15ஆம் வசனங்களைக் கவனியுங்கள்: "பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், வாழ்நாளெல்லாம் மரண பயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்." பயம் ஒரு மகிழ்ச்சிக் கொல்லி. பயத்திலிருந்து விடுதலையோ ஆரவாரம்.

சங் 23:4-6இல் தாவீது தேவனது வீட்டின் மகிழ்வாழ்வை இவ்விதம் வருணிக்கிறான்: "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன்; தேவரீர் என்னோடுகூட இருக்கிறீர்"... என் சத்துருக்களுக்கு முன்பாக நீர் எனக்கு ஒரு பந்தியை ஆயத்தப்படுத்தி, என் தலையை எண்ணெயால் அபிஷேகம்பண்ணுகிறீர்; என் பாத்திரம் நிரம்பி வழிகிறது. என் உயிருள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்; நான் கர்த்தருடைய வீட்டிலே என்றென்றும் வாழ்ந்திருப்பேன்."

இரட்சிப்பு பெரியது — ஏனெனில், அது மகிழ்ச்சியானது!

வச 17,18, "அவர் மக்களின் **பாவங்களை** நிவிர்த்தி செய்வதற் கேதுவாக, தேவ காரியங்களைக் குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோ தரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் **சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய** வல்லவராயிருக்கிறார்."

இரட்சிக்கப்பட்டுவிடுவதால் நாம் வாழ்வின் சோதனைகளுக்குத் தப்பிக் கொள்வதில்லை. யுத்தமின்றி வெற்றியேது ? கடந்தகால இரட்சிப்பு பாவத் தின் தண்டனையிலிருந்தும், எதிர்கால இரட்சிப்பு பாவத்தின் பிரசன்னத்தி லிருந்தும் விடுவிக்குமானால், நிகழ்கால இரட்சிப்பு நம்மைப் பாவத்தின் வல்லமையிலிருந்து விடுவிக்கிறது. இன்று நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல், கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவம் நம்மை மேற்கொள்ள மாட்டாது.

இவ்வத்தியாயத்தில் இயேசு நமது இரட்சிப்பின் அதிபதியென அழைக்கப் படுகிறார். யோசுவா தேவமக்களை வெற்றிகரமாய்க் கானானுக்குள் நடத்தினான். யோசுவா என்றால் யேகோவா என் இரட்சகர் என்று பொருள். புதிய ஏற்பாட்டு யோசுவாவாகிய நம் இயேசு "இரக்கமுள்ளவர்" — நமது பலவீனங்களையும் திக்குமுக்காடல்களையும் புரிந்துகொள்ள ஈரமுள்ளவர். அவர் "உண்மையுள்ளவர்"—வெற்றிகாண அவரது வாக்குத்தத்தங்கள் தவறுவதில்லை—அதுவும் இருள் சூழும் வேளையில்! அவர் "பிரதான ஆசாரியர்"—நமது தோல்வியிலும் தடுமாற்றத்திலும் தேவ கிருபையை வாங்கித்தந்து ஆபத்தில் கைகொடுப்பவர். அவர் "வல்லவர்"—அவரது வல்லமையும் பலமும் நமது பலவீனத்தில் பூரணமாய் விளங்கும். இஸ்ர வேலை இளைப்பாறுதலின் நாடாகிய கானானுக்குள் நடத்திய யோசுவா போல இயேசு நம்மை இளைப்பாறுதலான வாழ்விற்குள் நடத்துகிறார். யுத்தமில்லாதிருப்பது அல்ல இளைப்பாறுதல். அது அமரிக்கையும் நம்பிக்கையுமாம்—எப்படி ? தோல்வியே கண்டிராத நமது எல்லாம் வல்ல அதிபதியினாலே! வருத்தப்பட்டுப் பாரம் சுமக்கிறவர்களை இளைப் பாறும்படி இயேசு தம்மிடம் அழைத்தார். அதுவே சார்பு, நம்பிக்கை, நிச்சயம், அமரிக்கை என்பது.

இரட்சிப்பு பெரியது — ஏனெனில், அது இளைப்பாறுதலானது!

இரட்சிப்பு உண்மையானது, திரும்பப் பெறுவது, பலன் நிறைந்தது, மகிழ்ச்சியானது, இளைப்பாறுதலானது; எனவே அது பெரியது. "இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்வோம்?" இரட்சிப்பைக் குறித்து கவலையற்றிருப்பதென்பது என்ன? நாம் அதைப் பெற்றுக்கொள்ள மறுப்பதும், அதைப் பிறருக்குப் பறைசாற்றத் தவறுவதுமாகும். வசனங்கள் 1,2 நம்மை இவ்விதம் எச்சரிக்கின்றன: "ஆகையால் நாம் கேட்டவைகளை விட்டு விலகாதபடி, அவைகளை மிகுந்த எச்சரிப்புடன் கவனிக்க வேண்டும். ஏனெனில், எந்தச் செயலுக்கும் கீழ்ப்படியாமைக்கும் நீதியான தண்டனை வரும்." இரட்சிப்பு பெரும் ஈவு. அதை விசுவாசத்துடன் பெற்றுக்கொள்ளுகிறவர்களும் உத்தமாய்ப் பறைசாற்றுகிறவர்களும் பெரும் பரிசு பெறுவர். அதை அசட்டை செய்து ஏனோதானோவென்று வாழ்வோருக்கோ மாபெரும் தண்டனை — நித்திய ஆக்கினை!

பரம அழைப்பை நிறைவேற்றுவது எப்படி?

நாம் "பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்கள்" (வச 1). "முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்பது" பற்றி வசனங்கள் 6, 14 பேசுகின்றன. எனவே இவ்வத்தியாயத்திற்கு இத்தலைப்பு சாலப் பொருந்தும்.

பரம அழைப்பாவது யாது ?

எபிரெயர் புத்தகம் ஐந்து பரம காரியங்களைச் சுவையான வரிசையில் படைக்கிறது. ஒருங்கிணைந்து அவை பரம அழைப்பிற்கு விளக்கம் தருகின்றன.

(1) பரம ஈவு (6:4). இங்கே இது இரட்சிப்பாகிய ஈவைக் குறிக்கிறது. இதுவே கிறிஸ்தவ வாழ்வின் உதயம். (2) **பரம ஆராதனை** (8:4,5). விசுவாசிகள் அனைவருமே தொழுகையினாலும் ஊழியத்தினாலும் தேவனுக்கு ஆராதனை செய்யும் ஆசாரியர்கள். (3) **பரம சுத்திகரிப்பு** (9:23). சுத்திகரிப்பு குறிப்பாய்த் துவங்கி நெடுகவே தொடரும் ஒன்று. மறுபிறப்பு துவங்கி பரிசுத்தத்தில் வளருகிறோம். பரிசுத்தமாக்கப்பட்ட நாம் இன்னும் பரிசுத்தமாகிறோம். (4) **பரம நாடு** (11:16). இது அவருடைய பிரசன்னத்திற்கே உயர்த்தப்படுவதாம். பூவுலகில் அவர் நம்மோடு

இருக்கிறார்; பரலோகத்தில் நாம் அவரோடு இருப்போம். (5) **பரம நகர்** (12:22). அவரோடு ஆளுகை செய்ய அவரது சிங்காசனத்திலும் இடம் பெறுவோம் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது. கிறிஸ்து வெற்றிபெற்ற வராய்த் தமது பிதாவோடு அவரது சிங்காசனத்தில் எவ்விதம் வீற்றாரோ அவ்வண்ணமே நாமும் கிறிஸ்துவோடு அவரது சிங்காசனத்தில் வீற்றிருப்பதே நமது பரம அழைப்பின் சிகரம் (வெளி 3:21).

இப்படி, இரட்சிப்பாகிய ஈவைப் பெற்றுக்கொள்ளுதல், தேவனுக்கு முன் ஆசாரியராய் அவரைச் சேவித்தல், பரிசுத்தத்தில் வளருதல், இறுதியில் அவரது பிரசன்னத்திற்கு உயர்த்தப்பட்டு என்றென்றும் அவரோடு அரசாள அவரோடு அவரது சிங்காசனத்தில் வீற்றிருத்தல் ஆகிய இவையே நமது பரம அழைப்பின் அம்சங்களாகும். இன்னொரு மொழியாக்கம் இதை "பரத்திலிருந்து அழைப்பு" என்று சரியாய்க் கூறுகிறது! அனாதைக்கு அரசாட்சி!

பரம அழைப்பை நிறைவேற்றுவதில் நமது கடமை என்னவென்பதை சற்றே ஆராய்வோம்.

1. கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்.

வச 1, "பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியரு மாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப் பாருங்கள்."

கவனித்துப் பார்ப்பதென்றால் உற்று நோக்குவது. கிறிஸ்தவ வாழ்வு ஒரு பயணமாம். பரலோகக் குடிகளாய் மேலோகம் நோக்கி நடை போடுகிறோம். நமது தளபதி இயேசு. அவரே நடத்துனர், வழிகாட்டி, காவலர். அவரது தலைமை நம்மை மகிமைக்கு நடத்துகிறது (2:10). வழி தவறி இலக்கை இழக்காதபடி நாம் அவரை நெருங்கித் தொடர வேண்டும். அவரது அடிச்சுவடுகளில் நடக்கவேண்டும். அவரைப் போலாகவேண்டும். இப் புண்ணிய யாத்திரையில் "இயேசு போல்" என்பதே நமது இலட்சிய மாயிருக்கவேண்டும்.

தேவனின் நித்திய வாஞ்சையும் அப்போஸ்தலரின் இதயக் கதறலும் நாம் கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக மறுரூபமாகவேண்டுமென்பதே. வேதத்தை நோக்குங்கள் : பிதாவின் விருப்பம்— ரோ 8:29— "தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்." குமாரனின் ஆவல்— எபே

4:11-13— "நாம் அனைவரும்... கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணராகும்வரைக்கும்... அவர் (குமாரன்) சிலரை அப்போஸ்தலராக... ஏற்படுத்தினார்." ஆவியானவரின் வாஞ்சை— 2 கொரி 3:18— "நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்." அப்போஸ்தலரின் ஆர்வம்— கொலொ 1:28— "எந்த மனிதனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனிதனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனிதனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்." தங்கள் கண்காணிப்பிலிருந்த விசுவாசிகள் இயேசுவைப் போல் மாறிவிடுவதற்குத் தாங்கள் நடைமுறை மாதிரிகளாய்த் திகழ தங்களாலியன்றதைச் செய்தனர். "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" என்றான் பவுல் (1 கொரி 11:1).

கூனனான ஓவியன் தன் உருவத்தைக் கூனின்றித் தீட்டினான். தினமும் மணிக்கணக்காய் அதன்முன் கூனில்லையேல் தான் எப்படியிருப்பான் என்று நிமிர்ந்து நின்று பார்ப்பான். இப்பயிற்சி அவன் கூனை நிமிரச் செய்தது! இயேசுவையே நோக்கி நிற்போமானால் என்னதான் ஆகாது! ஆண்டாண்டாய் ஒன்றாய் வாழும் தம்பதியர் ஒருவரைப்போல் ஒருவர் ஆகின்றனர். நீடித்த உறவு அருளும் ஆசி இது.

கிறிஸ்துவின் இரண்டு அம்சங்களைக் கவனிக்க அழைக்கப்படுகிறோம்: "அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து" (வச 1). அப்போஸ்தலத்துவம், ஆசாரியத்துவம். ஏன் இவை இரண்டு மட்டும்? இவையே தேவன் நமக்குத் திட்டமிட்டுள்ள வாழ்க்கை மற்றும் ஊழியத்தின் பூரண விளக்கம். அப்போஸ்தலன் தேவனிடமிருந்து மனிதனிடம் செல்பவன்; ஆசாரியன் மனிதனிடமிருந்து தேவனிடம் செல்பவன். அப்போஸ்தலன் தேவ செய்தியை மனிதருக்கு அளிக்கிறான்; ஆசாரியன் மனிதரின் விவகாரத்தை தேவனுக்கு அறிவிக்கிறான். அப்போஸ்தலன் பறைசாற்றுகிறான்; ஆசாரியன் துதியும் விண்ணப்பமுமாகிய பலி செலுத்துகிறான். இயேசு, "என் பின்னே வாருங்கள், உங்களை மனிதரைப் பிடிக்கிறவர்களாக்குவேன்" என்றார் (மத் 4:19). அதாவது நற்செய்தியைப் பறைசாற்றி விண்ணரசிற்காய் மனிதரைப் பிடித்தல். மட்டுமல்ல, தம் போதனையினாலும் முன்மாதிரியினாலும் இயேசு அவர்களுக்கு ஜெபிக்க கற்பித்தார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனை மனிதனிடத்திலும் மனிதனை தேவனிடத்திலும் அறிவிக்கும் ஸ்தானாதிபதியாயிருக்க வேண்டும். ஒன்று விண்ணிலிருந்து

மண்ணுக்கு இறங்கும் ஊழியம்; மற்றொன்று மண்ணிலிருந்து விண்ணுக்கு ஏகும் ஊழியம். இவையிரண்டும் சமநிலையிலிருக்குமானால் நாம் கிறிஸ்துவைச் சரியாய்க் கவனித்துச் செவ்வையாய்ப் பரம அழைப்பை நிறைவேற்றுகிறவர்களாயிருப்போம்.

2. உண்மையாயிருங்கள்.

வச 2-6, "மோசே தேவனுடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ள வனாயிருந்ததுபோல, இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ள வராயிருக்கிறார். மோசேயைவிட இவர் அதிக மகிமைக்குத் தகுதியுள்ள வராயிருக்கிறார்... மோசே **பணிவிடைக்காரனாய்**, அவருடைய வீட்டில் எங்கும் உண்மையுள்ளவனாயிருந்தான். கிறிஸ்துவோ அவருடைய வீட்டிற்கு அதிகாரியான **குமாரனாக** உண்மையுள்ளவராயிருக்கிறார்."

உண்மை என்பது உத்தமம் அல்லது நம்பகமாகும். இக்குணத்தை விளக்க இங்கு இரண்டு எடுத்துக்காட்டுகள்: குமாரனாக இயேசு; பணியாளனாக மோசே. நாம் தேவனுக்குக் குமாரரும் பணியாளருமாய் இருப்பதினால் இவ்வெடுத்துக்காட்டுகள் கருத்துள்ளவையாகின்றன. இருவரும் நம் தனி வாழ்வில் உண்மையைக் குறித்த படிப்பினைகளைப் போதிக்கின்றனர்.

(அ) இயேசுவைப் போன்ற குமாரன்

மகனுக்கும் அடிமைக்குமுள்ள வேறுபாட்டை விளக்கி இயேசு யூதரிடம் தாம் பிதாவிடமிருந்து வந்த குமாரனே என அழுத்திக் கூறும் யோவான் எட்டாம் அத்தியாயத்தில் (வச 34-36) உண்மையாயிருப்பதைக் குறித்த மூன்று படிப்பினைகளை இயேசுவிடமிருந்து கற்றுக்கொள்ளுகிறோம்.

முதலாவது, இயேசு பிதாவிற்குத் தம்மைப் பூரணமாய் அர்ப்பணித் திருந்தார். "நான் சொந்தமாய் ஒன்றும் செய்யாமல், என் பிதா எனக்குப் போதித்தபடியே இவைகளைச் சொன்னேன்... நான் சுயமாய் வரவில்லை, அவரே என்னை அனுப்பினார்" (வச 28,42). முழு அர்ப்பணிப்பு முற்றிலும் சார்ந்திருக்கச் செய்கிறது. நானல்ல கிறிஸ்துவே என்றான் பவுல். நானல்ல பிதாவே என்றார் கிறிஸ்து. "பிதா என்னை அனுப்பினதுபோல, நான் உங்களை அனுப்புகிறேன்" என்று கிறிஸ்து அறிவிப்பதைக் கேட்டு அக மகிழுகிறோம். "நான் பிதாவிற்கு என்னை அர்ப்பணித்ததுபோல, நீங்களும் உங்களை அர்ப்பணியுங்கள்" என்ற அன்பின் ஆணையையும் ஆனந்தமாய் ஏற்போம்.

அடுத்து, இயேசு முறியாத ஐக்கியத்தைத் தம் பிதாவோடு கொண்டிருந்தார். "என்னை அனுப்பினவர் என்னுடனேகூட இருக்கிறார்; பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியே இருக்கவிடவில்லை" (வச 29). படைப்பின் நோக்கமே ஐக்கியம்தான். புதுப்படைப்பின் நோக்கம் முறிந்த ஐக்கியத்தைச் சரி செய்வதுதான். சீடர்கள் முதலில் "தம்மோடு" இருக்கும்படியாகவும், அடுத்துதான் "தமக்காக" இருக்கும்படியாகவும், இயேசு அவர்களைத் தெரிந்துகொண்டார் (மாற் 3:14). இயேசு "எப்பொழுதும்" பிதாவுக்குப் பிரியமானவைகளையே செய்தபடியால் பிதாவோடுள்ள அவரது ஐக்கியத்திற்குப் பங்கமேதும் ஏற்படவில்லை. தேவனுக்குப் பிரியமில்லாத யாவும் பாவமே. உண்மையுடன் தேவனோடு நெருங்கி வாழ வேண்டுமானால் பாவத்திற்கு விலகியோட வேண்டும்.

மூன்றாவது, இயேசு தற்புகழைத் தேடவில்லை. அவரது நோக்கமெல்லாம் பிதாவை மகிமைப்படுத்துவதாகவே இருந்தது. "நான் என் பிதாவைக் கனம்பண்ணுகிறேன்... நான் எனக்கு மகிமையைத் தேடுகிறதில்லை... என்னை நானே மகிமைப்படுத்தினால் அந்த மகிமை வீணாயிருக்கும், என் பிதா என்னை மகிமைப்படுத்துகிறவர்" (வச 49,50,54). உண்மையுள்ளவன் தன் காரியத்தை தேவ கரத்தில் ஒப்புவித்து தேவனே நியாயந்தீர்க்கும்படியாக விட்டுவிடுகிறான் (வச 50). அவன் தன் சுய மதிப்பிற்கும் மரியாதைக்கும் செத்துவிட்டபடியால் தேவன் அவனைக் கனப்படுத்துகிறார். இயேசு தம்மைத் தரை மட்டும் தாழ்த்த பிதா அவரை எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தினார். உண்மையுள்ள மகன் தன் தந்தையைக் கனப்படுத்துகிறான். நல்ல தந்தை தன் மகன் கனம் பெறுவதில் மகிழ்ச்சி எய்துகிறார்.

(ஆ) மோசேயைப் போன்ற பணிவிடையாளன்

எண்ணாகமம் 12இல் மிரியாமும் ஆரோனும் மோசேக்கு விரோதமாகப் பேசியபோது தேவன் அவனுக்காகப் பேசினார். "என் வீட்டில் எங்கும் அவன் உண்மையுள்ளவன்" என்றார். இந்த அத்தியாயத்தில் மோசே உண்மையுள்ளவனாயிருந்தது மூன்று விதமாய் வெளிப்படுவதைக் காணலாம்.

முதலாவது, அவனது தாழ்மையும் சாந்தமும். "மோசே பூவுலகிலுள்ள எல்லா மனிதரிலும் மிகுந்த சாந்தகுணமுள்ளவனாயிருந்தான்" (வச 3). பெருமை உத்தமத்தை நாசமாக்கும். உண்மையுள்ளவன் தன் ஆவியை அமைதியாய் இனிமையாய்க் காத்துக்கொள்ளுகிறான். தான் தன்னைக்

கணிப்பதினாலோ பிறர் தன்னைக் குறித்து சொல்வதினாலோ அவன் இறுமாப்படைவதில்லை. தன் சொந்த அக்காவும் அண்ணனும் தன்னைக் குறித்துப் புறங்கூறியதைக்கூட மோசே சட்டைசெய்யவில்லை.

அடுத்து, தேவனோடு மோசே வைத்திருந்த நெருங்கிய ஐக்கியம். "நான் அவனுடன் மறைபொருளாக அல்ல, முகமுகமாகவும் பிரத்தியட்சமாகவும் பேசுகிறேன்; அவன் கர்த்தரின் சாயலைக் காண்கிறான்" என்றார் தேவன் (வச 8). உண்மையுள்ளவர்களைத் தேவன் நித்திய ஐக்கியத்திற்கும் ஆளுகைக்கும் தமது ஆனந்தத்திற்குள்ளும் அழைக்கிறார் (மத் 25:21,23). பக்தியற்றவற்றை ஒழித்து இவ்விதம் பரவச ஐக்கியங்கொள்வோம். உண்மை ஊழியனுக்கு எஜமானின் பாத சேவையைக் காட்டிலும் வேறென்ன பரவசமுண்டு ?

மூன்றாவது, மோசேயின் மன்னிக்கும், அன்பின் ஆவி. "அப்பொழுது மோசே கர்த்தரை நோக்கி: என் தேவனே, அவளைக் குணமாக்கும் என்று கெஞ்சினான்" (வச 13). அன்பும் மன்னிப்புமே உருவான யேகோவா தேவனின் உண்மையான ஊழியன் அவரது பண்புகளைப் பிரதிபலிக்கிறான்; அவன் எஜமானுக்கு முரண்படுவதில்லை.

உத்தம குமாரன், உத்தம ஊழியன்—சிலாக்கியமும் பொறுப்பும். தேவன் நமது அப்பாவும் ஆண்டவருமாயிருக்கிறார். உத்தமம் என்பது அன்பையும் கீழ்ப்படிதலையுமே குறிக்கும். இரண்டையும் பற்றிக்கொள்ளுங்கள்.

3. முடிவுவரை உறுதியாயிருங்கள்.

வச 6, "நம்பிக்கையினாலே உண்டாகும் **தைரியத்தையும் மேன்மை பாராட்டுதலையும்** முடிவுவரை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தால், நாமே அவருடைய வீடாயிருப்போம்."

மனிதன் உணவின்றி 40 நாட்களும், நீரின்றி 3 நாட்களும், காற்றின்றி ஒரிரு நிமிடங்களும் வாழலாமாம். நம்பிக்கையின்றியோ ஒரு வினாடியும் வாழ இயலாதாம்! உலகில் யாவும் மாறும். கிறிஸ்துவோ நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர். மாறுபவற்றின்மேல் நம்பிக்கை வைப்பது எத்தனை மடமை! கிறிஸ்துவே நமது நம்பிக்கையின் நங்கூரம். நமது நம்பிக்கை ஓர் உபதேசத்திலோ ஆசீர்வாதத்திலோ அல்ல, ஒரு நபர் மீது உள்ளது. கொலோ 1:27, "கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கை." எரே 14:8, "இஸ்ரவேலின் நம்பிக்கையே, ஆபத்துக் காலத்தில் அதின் இரட்சகரே!" 2 தீமோ 1:1, "நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்து."

"தைரியத்தையும்," "மேன்மை பாராட்டுதலையும்" குறித்து ஆறாம் வசனத்தில் வாசித்தோமே, அது முறையே உள்ளான உறுதியையும், வெளிப்படை அறிவிப்பையும் குறிக்கிறது.

(அ) உள்ளான உறுதியைத் தருகிறவர் பரிசுத்த ஆவியானவர். ரோ 5:3-5, "உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, உபத்திரவங்களிலேயும் மேன்மை பாராட்டுகிறோம். மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது." துன்பமெனும் மண்ணில் அன்பெனும் நீரூற்றி, நம்பிக்கையெனும் செடி ஓங்கி வளரச் செய்கிறார் ஆவியானவர். சர்வ வல்லவர் தமது பிள்ளையின் வாழ்வில் அனுமதிக்கும் உபத்திரவத்தை ஆவியானவர் சாதகமாகப் பயன்படுத்தி அவனது நம்பிக்கையின் தசைகள் பலப்படச் செய்கிறார். இப்பொழுது அவன் பலப்பட்டபடியால் அடுத்த சோதனை இன்னும் பெரிதாகவே வரும். ஒவ்வொரு இக்கட்டிலும் பரிசுத்த ஆவியினால் ஊற்றப்படும் தேவ அன்பு நமது நம்பிக்கையைத் துளிர்க்கச் செய்கிறது—அதாவது நமது நம்பிக்கையாகிய கிறிஸ்துவை மேலும் மேலும் நாம் உணரச் செய்கிறது.

(ஆ) ரோம் நகரில் சங்கியினால் கட்டப்பட்டிருந்த பவுல் வெளிப்படை அறிவிப்பிற்குச் சரியான எடுத்துக்காட்டு. ரோம் நகரிலிருந்த யூதத் தலைவர்களைப் பார்த்து, "இந்தக் காரியத்திற்காகவே உங்களைக் காணவும் உங்களுடனே பேசவும் உங்களை அழைப்பித்தேன். இஸ்ரவேலுடைய நம்பிக்கைக்காகவே இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன்" என்றான் (அப் 28:20). அரசுகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக இருக்கலாம். ஆனால், "இஸ்ரவேலின் நம்பிக்கையாகிய" தேவனே அவர்கள் பலம். காவலும் கட்டுகளும் பவுலின் நம்பிக்கையை நசுக்கிவிட முடியவில்லை. அவை அவனைப் பலப்படுத்தியதாகவே அவனது வார்த்தைகள் அறிவிக்கின்றன. பேதுருவும் அப்படியே. 1 பேது 3:15, "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்."

நிச்சயமும் இடைவிடா அறிக்கையும் நாம் முடிவுவரை நிலைத்திருக்க உதவும். நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாதே!

4. இருதயத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.

வசனங்கள் 7-19இல் "கடினமான" (வச 8,15), "வழுவிப் போகிற" (வச 10) மற்றும் "அவிசுவாசமுள்ள" (வச 12) இருதயங்களைக் குறித்து வாசிக்கிறோம்.

நல்ல இருதயமென்பது மென்மையானதும், தடுமாறாததும், விசுவாசிப்பதும், கீழ்ப்படிவதுமானது. "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதிலிருந்து வற்றாத ஊற்று புறப்படும்" (நீதி 4:23). இயல்பாக மனிதனுடைய இருதயம் "திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கிறது" (எரே 17:9). ஆனால் புதிய உடன்படிக்கையின் தேவ வாக்குத்தத்தமோ, "அவர்கள் என் கட்டளைகளின்படி நடந்து, என் நியாயங்களைக் கைக்கொண்டு அவைகளின்படி செய்ய... கல்லான இருதயத்தை அவர்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை அவர்களுக்கு அருளுவேன்" என்பதே (எசேக் 11:19,20). விசுவாசிக்கவும் கீழ்ப்படியவும் கூடிய இருதயத்தை எல்லா விசுவாசிகளும் பெற்றுள்ளனர். அதை நல்லதாய்க் காத்துக்கொள்வதே நமது பொறுப்பாகும். இருதயத்தை எப்பொழுதும் நல்லதாய்க் காத்துக்கொள்ள இப்பகுதி தரும் ஆலோசனைகள் மூன்று.

(அ) வசனம் வெளிப்படுத்தும் ஆவியின் சத்தத்திற்கு உடனடியாகக் கீழ்ப்படியுங்கள். "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்டால், அன்று அவரைக் கோபமூட்டியபோது நடந்ததுபோல உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்" (வச 15). வேதத்தை தேவ வார்த்தை அல்லது ஆவியானவரின் குரல் எனலாம் (2 பேதுரு 1:20,21; வெளி 2:7,11,17 முதலியன). வேதத்தைக் கடைப்பிடிக்காமல் தேவ சத்தத்தைக் "கேட்க" ஆசிப்பவன் வஞ்சிக்கப்படுவான். வேத வசனமே தேவ சித்தம், தேவ சத்தம். வேதத்தின்படி திருமுழுக்கின் அத்தியாவசியத்தை உணர்ந்த விசுவாசியொருவன் "அதைக்குறித்து ஜெபிக்க" விரும்பினான். வேதமோ "வேதத்தைக் கேளாதபடி தன் செவியை விலக்குகிறவனுடைய ஜெபமும் அருவருப்பானது" என்றுரைக்கிறது. தேவன் தமது வசனத்துக்கு முரண்படுவதில்லை. ஜெபம், துதி மற்றும் பலிகளைவிட கீழ்ப்படிதலே மேல்.

(ஆ) ஆபத்து மற்றும் சோதனை வேளைகளில் ஆண்டவரது வல்லமையைச் சந்தேகிக்காதீர்கள். "வனாந்தரத்திலே கோபமூட்டின போதும், **சோதனை நாளிலும்** நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள். அங்கே உங்கள் மூதாதையர் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, நாற்பதாண்டு காலம் என் செயல்களைக் கண்டார்கள். ஆதலால் நான் அத்தலைமுறையினரை வெறுத்து, அவர்கள் எப்பொழுதும் வழுவிப் போகிற இருதயமுள்ள மக்களென்றும் என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொன்னேன்" (வச 8-10). தேவனால் கூடுமா என்று கேட்காமல் தேவனால் கூடும் என்று கூறுங்கள். சோதனை வேளையில்தான் உங்கள் விசுவாசத்தின் உறுதி தெரியவரும். எல்லாம் சுமுகமாயிருக்கையில் விசுவாசிப்பது எளிது. "காணப்படுகிறதை நம்புகிறது

நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்ப வேண்டுவதென்ன?" (ரோ 8:24). வெளிப்பிராகாரத்தில் சூரிய வெளிச்சம், உட்பிராகாரத்தில் விளக்கு வெளிச்சம், மகா பரிசுத்த தலத்திலோ காரிருள். "தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடப்பதே" கிறிஸ்தவ வாழ்வாகும் (2 கொரி 5:7). "தேவன் அறிவார்" என்று நல்ல இருதயம் அமர்ந்திருக்கும்!

(இ) ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள். "உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்" (வச 13). உடலில் உறுப்புகள் ஒன்றுக்கொன்று உதவாவிடில் இருதய நோய் நிச்சயம்! தனிக்காட்டு வாழ்விற்குப் புதிய ஏற்பாட்டு உபதேசத்தில் இடமில்லை. நாம் ஆரோக்கியமாயிருக்க ஒருவருக்கொருவர் தேவை. கர்த்தருடைய ஜெபத்தில் யாவும் "எங்கள்"தான், "என்" அல்ல. ஆண்டவர் திரும்பி வருவது தனி நபர் எவரையும் மணக்க அல்ல, தமது சபையாகிய மணப்பெண்ணிற்காகவே வருகிறார். "வாரந்தோறும் கூடுதலை" அறிந்திருக்கிறோம். ஆனால் வேதம் கூறும் "நாடோறும் புத்தி சொல்லுதலை" அறிந்திருக்கிறோமோ? ஆராதனைக்குப் "போகிறோம்", "பங்கெடுக்கிறோம்," ஆனால் "ஐக்கியம்" கொள்ளுகிறோமா? கரம் குலுக்குகிறோம் — வறட்டு வந்தனத்துடன்! நமது ஆராதனைகள் பின்மாற்றக்காரனுக்குக் கூட சொகுசாகத்தான் இருக்கின்றன. பீடம் பழைய ஏற்பாடு, நடு மேசையோ புதியது. ஒருவரே நடத்துதல் பழையது, யாவரும் பங்கெடுத்தல் புதியது. "இன்று" என்று சொல்லப்படும் நாள் வரும்வரை ஒவ்வொரு விசுவாசியும் அடுத்தவரது இருதய நிலைக்குப் பொறுப்பானவர். நித்தியம் துவங்கும் போது நேற்றும் நாளையும் கிடையாது. எனவே அன்று "இன்று" என்பதும் இருக்காது!

முடிவுரை

பரம அழைப்பென்பது பொறுப்போடு கூடிய சிலாக்கியம். துவங்குகிறவர் தேவனே. அவரோடு நாமும் ஒத்துழைக்கும்போது அவரே முடிக்கிறவராகிறார். "உங்களை அழைக்கிறவர் உண்மையுள்ளவர், அவர் அப்படியே செய்வார்" (1 தெச 5:24). பரம அழைப்பின் முடிவில் "அவரது இளைப்பாறுதல்." இது அடுத்த அத்தியாயத்தில் விளக்கப்பட்டுள்ளது.

எபிரெயர் அத்தியாயம் நான்கு

தேவன் தரும் இளைப்பாறுதல்

தேவன் தம் மக்களுக்குத் தரும் இளைப்பாறுதலை இவ்வத்தியாயம் மூன்று விதங்களில் விளக்குகிறது.

முதலாவது, அது **சிறையிருப்பிலிருந்து செழிப்பிற்குச்** செல்லுதல் ஆகும். மோசே தேவ மக்களை எகிப்திலிருந்து வனாந்தர வழியாய்க் கானானுக்கு நடத்திச் செல்லுதலை அத்தியாயம் 3 வசனங்கள் 16 முதல் 19இல் வாசிக்கிறோம். கானான் "அந்த இளைப்பாறுதல்" என அழைக்கப்படுகிறது. அது சீரும் சிறப்பும் நிறைந்த நாடு. பாலும் தேனும் ஓடும் நாடு! ஆன்மீக ரீதியில் கான்னானைப் பரலோக இளைப்பாறுதலின் பூலோக முன்ருசி எனலாம். "யோசுவா அவர்களை இளைப்பாறுதலுக்குட்படுத்தியிருந்தால், பின்பு அவர் வேறொரு நாளைக் குறித்துச் சொல்லியிருக்கமாட்டாரே" (வச 8). எகிப்தை விட்டுவிடுதல், பாவத்தின் **தண்டனையிலிருந்து** நாம் அடையும் மீட்பின் நிழலாயிருக்கிறது.

இரண்டாவது, அந்த இளைப்பாறுதல் **சோதனையிலிருந்து வெற்றிக்குச்** செல்லுதலாக 14-16ஆம் வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது. பலமின்மை, சோதனை, தேவை போன்றவை குறித்து இங்கு வாசிக்கிறோம். இயேசு

சோதனைகள் எல்லாவற்றிலும் வெற்றிகண்டு "வானங்களின் வழியாய்" விண்ணகச் சிங்காசனத்திற்குச் சென்றார். கிருபாசனம் இரக்கத்தையும் வெற்றியையும் குறிக்கிறது. இது பாவத்தின் வல்லமையிலிருந்து நாம் பெறும் மீட்பைக் காட்டவில்லையா ?

மூன்றாவது, இளைப்பாறுதலானது தொழிலிலிருந்து தொழுகைக்குச் செல்லுதலைக் குறிக்கிறது. "தேவன் தம்முடைய வேலைகளையெல்லாம் முடித்து ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்" (வச 4). "தேவனுடைய இளைப் பாறுதலுக்குள் நுழைந்தவன், அவர் தமது வேலைகளை முடித்து ஓய்ந்ததுபோல தானும் தன் வேலைகளை முடித்து ஓய்ந்திருப்பான்" (வச 10). ஆறு நாள் படைப்பிற்குப்பின் ஏழாம் நாள் கொண்டாட்டம்! நமக்கோ இது இனிதான் வரப்போகிறது. "தேவ மக்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது" (வச 9). இதுவே பாவத்தின் பிரசன்னத் திலிருந்து நாம் அடையப் போகும் மீட்பு.

மத்தேயு 11:28-30இல் இயேசு வாக்களித்த முப்பரிமாண இளைப் பாறுதல் இதுவே. முதலாவதாக அவரிடம் வருவதே இளைப்பாறுதல்— வீணான வருத்தத்தையும் பளுவையும் விட்டு விலகுதல். இதுதான் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளிவரும் இறந்தகால நிகழ்ச்சி. அடுத்து அவரது நுகத்தையும் சுமையையும் எடுத்துக்கொள்ளும் இளைப் பாறுதல்—கிறிஸ்துவின் சிலுவை சுமத்தல். அது மெதுவாயும் இலகுவாயும் இருக்கும் என்பதினால் கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியத்தின் உறுதுணையில் திளைப்போம் என்கிறார். இது நமது இன்றைய அனுபவ மாருக்கவேண்டும். இறுதியாக, அவரிடம் கற்றுக்கொள்ளுதல் ஓர் இளைப்பாறுதல்—அவரது சாந்தமும் மனத்தாழ்மையும். இது தேவனது அமரிக்கையான பிரசன்னத்தில் தத்தளிப்பின்றி அமர்ந்திருத்தலாகும். இவ் விதம் கற்றுக்கொள்ளுதல் அல்லது இந்த அறிவு நம்மை தேவனை ஆராதிக்க வழிநடத்தும். இதன் முழு நிறைவேறுதலை வருங்காலத்திலேயே அனுப விப்போம். விண்ணுலகில் அதிவுன்னத நித்திய சேவை தொழுகையே.

எனவே தேவன் தம் மக்களுக்கருளும் இளைப்பாறுதல் முப்பரிமாண முடையது. கடந்தகால திடீர் அனுபவத்தினூடே வந்து, இப்போது நிகழ்கால, எதிர்கால இளைப்பாறுதலைக் குறித்துச் சிந்திக்கிறோம். இவ்விளைப் பாறுதலை எவ்விதம் அடைந்து அனுபவிக்கலாம் எனத் தொடர்ந்து நோக்குவோம்.

தேவனது இளைப்பாறுதலை அனுபவிப்பது எங்ஙனம்?

1. வசனத்தை விசுவாசத்தோடு கலவுங்கள்.

வச 2, "சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பயன்படவில்லை."

விசுவாசமில்லாவிட்டால் வசனத்தினால் பயனில்லை. இயேசு தம் சொந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்தபோது நடந்ததென்ன ? (மாற் 6:1-6). மக்கள் அவரது அதிகாரத்தைக் கேள்வி கேட்டனர். "இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தன ?" என்றனர். "இவன் தச்சன் அல்லவா ?" என்றனர். இயேசு அவர்களது அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டார். "அங்கே அவர் சில நோயாளிகளின்மேல் கைகளை வைத்து, அவர்களைக் குண மாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் **செய்ய முடியாமல்** போனது." நமது அவிசுவாசம் தேவக்கரங்களைக் கட்டிவிடுகின்றது.

நாம் விசுவாசிக்குமளவிற்கே தேவனது வார்த்தை நமக்கு தேவ வல்லமையாயிருக்கிறது. "சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிற வர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது; இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ வல்லமையாயிருக்கிறது" (1 கொரி 1:18). "விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடம் காண்பிக்கும் தம்முடைய வல்லமை" என எபேசியர் 1:19 கூறுகிறது.

தேவனது வார்த்தை சீராய் நம்மில் செயல்பட ஒவ்வொருவரும் தம் விசுவாசத்தைப் பயிற்சிக்க வேண்டுமென்பதற்கு லூக்கா எழுதின சுவிசே ஷத்திலிருந்து மூன்று எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். (1) இயேசுவின் தாயாகிய மரியாள் தூதன் சொன்ன யாவற்றையும் தெளிவாய்ப் புரிந்து கொள்ளாவிடினும், "இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை; உம்முடைய **வார்த்தையின்படி** எனக்கு ஆகக்கடவது" என்றாள் (லூக் 1:38). (2) இரவெல்லாம் பாடுபட்டும் மீனொன்றும் பிடிக்காத பேதுருவைப் பாருங்கள். அவன் கைதேர்ந்த மீனவன், இயேசுவோ தச்சர். இருப்பினும், "ஐயரே, இராமுழுவதும் நாங்கள் முயன்றும் ஒன்றும் அகப்படவில்லை; ஆகிலும் உம்முடைய **வார்த்தையின்படியே** வலையைப் போடுகிறேன்" என்று சொல்லி இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தான் (5:5). நடந்ததை அறிவோமே! (3) அடுத்தவன் படைத்தலைவன். இயேசு அவனது வேலைக்காரனைக் குணமாக்க அவனது வீடு நோக்கி வந்துகொண்டிருக்கும்போது அவன் ஆளனுப்பி, "நீர் என் வீட்டு வாசலுக்குள் நுழைய நான் தகுதி அல்ல... ஒரு **வார்த்தை** மட்டும் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன்

சுகமாவான்'' என்றான் (7:6,7). இயேசு அவனது அலாதி விசுவாசத்தை அமோகமாய்ப் பாராட்டினார். அவனது வேலைக்காரனும் உடனடி சுகம் பெற்றான். மரியாளுக்கு ஆன்மீக அற்புதம், பேதுருவுக்குப் பொருளாதார அற்புதம், படைத்தலைவனுக்கு உடலுக்கடுத்த அற்புதம்—அத்தனையும் இறை வார்த்தையின் மீதுள்ள எளிய விசுவாசத்தினால்!

நண்பரே, வேதத்தின் ஒவ்வொரு புத்தகத்திற்கும், அத்தியாயத்திற்கும், வசனத்திற்கும், சொல்லிற்கும் 'ஆம்' என்று தலையசையுங்கள். ஒருவர் தன் வேதத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் 'ஆமென்' என்று எழுதினாராம். தேவனது வசனத்தில் சார்ந்திருப்போமானால் அவரது இளைப்பாறுதலில் சுகித்திருப்போம்.

2. கவனமாய்க் கீழ்ப்படிந்து நடவுங்கள்.

வச 11, "அந்த எடுத்துக்காட்டின்படி, ஒருவனும் கீழ்ப்படியாமையினாலே விழுந்துபோகாதபடிக்கு, நாம் இந்த இளைப்பாறுதலில் நுழையக் கவனமாய் முயற்சிப்போம்."

கிறிஸ்தவ வாழ்வில் கீழ்ப்படியாமைக்கு மாற்றில்லை. மகனது கீழ்ப்படிதலேயன்றி தந்தையை மகிழ்விப்பது வேறொன்றுமில்லை. தோற்றத்தில் சிறந்த சவுல் இஸ்ரவேலின் முதல் மன்னன். ஆனாலும் தேவன் அவனது கீழ்ப்படியாமையைக் கடுமையாய்த் தீர்த்தார். "கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைவிட பலிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ?... நீர் கர்த்தருடைய வார்த்தையை தள்ளியபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடித் தள்ளினார்" எனத் தீர்க்கன் உரைத்தான் (1 சாமு 15:22,23). தேவனைப் பிரியப்படுத்த வேறு எவ்விதத்திலும் முயல்வதைவிட அவருக்குக் கீழ்ப்படிதலே சுலபமாம். கீழ்ப்படிதலே உண்மையான அமரிக்கையும் இளைப்பாறுதலுமாகும்.

விசுவாசமும் கீழ்ப்படிதலும் இணைபிரியாதவை. "விசுவாசத்தினால் ஆபிரகாம் கீழ்ப்படிந்தான்" (எபி 11:8).

கீழ்ப்படிவோம்
தேவசித்தம் செய்வோம்
திருவாக்கை எப்போதும்
நம்பிக் கீழ்ப்படிவோம்

எனப் பாடகன் சரியாய்ப் பாடினான். குழந்தை விசுவாசம் கீழ்ப்படிதலை எளிதாக்குகிறது. மூன்று வயதில் என் மகள் நான் கூப்பிடும்போது

உயரத்திலிருந்து குதித்துவிடுவாள். வளர்ந்துவிட்டபோதோ மறுக்கிறாள். "அப்பா, நீங்கள் பிடிக்கத் தவறினால்... ?" என்கிறாள். அதே தந்தைதான், அதே மகள்தான், ஆனால் பிஞ்சுள்ளம் மாறிவிட்டது. அறிவும் விவேகமும் நல்லது, ஆனால் அவை விசுவாசத்தைப் பின்தொடர வேண்டுமே தவிர அதற்கு முன் செல்லக்கூடாது.

கிறிஸ்துவே கீழ்ப்படிதலுக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டு. "கிறிஸ்து இயேசுவிலிருந்த மனப்பான்மையே உங்களிலும் இருக்கட்டும்... இறக்கும் வரை கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்" (பிலி 2:5,8). மேலும், "அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவருக்கும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்" (எபி 5:8,9). ஆம், நித்திய இரட்சிப்பு தேவன் தமக்குக் கீழ்ப்படிவோருக்கு அளிக்கும் இளைப்பாறுதலேயன்றி வேறல்ல. ஏசாயா இதை இன்னும் தெளிவாக்கு கிறான்: "நீங்கள் மனமுவந்து எனக்கு இணங்கி நடந்தால் நாட்டின் நற்கனிகளைச் சாப்பிடுவீர்கள்" (ஏசா 1:19).

கேம்பிரிட்ஜ் கிரிக்கெட் வீரர் C.T. ஸ்டட் ஆப்பிரிக்காவில் பல்லாண்டு மிஷனரி ஊழியத்திற்குப்பின், வயது முதிர்ந்த காலத்தில், ஒரு நாள் பழைய கிழிந்த புத்தகமொன்றை மங்கிய ஒளியில் புரட்டிப் புரட்டி வாசித்துக் கொண்டிருந்தாராம். என்ன செய்கிறீர் என்ற நண்பருக்கு அவர், "வாழ்வின் மற்றும் ஊழியத்தின் கடைசி எல்லையில் நிற்கும் நான் தேவனது புத்த கத்தில் கீழ்ப்படியாமல் விட்டுவிட்ட கட்டளை எதுவும் உண்டோவெனத் தேடுகிறேன்" எனப் பதிலுரைத்தாராம். இவ்வித மனிதரே தேவனது இளைப்பாறுதலின் இரகசியமாகிய கீழ்ப்படிதலைக் கற்றவர்!

"தேவனைப் பிரியப்படுத்துவது முடியாத காரியம்" என்ற தனது யுகா யுகப் பொய்யினால் பிசாசு அநேகரை ஏய்த்திருக்கிறான்! இதைவிடப் பச்சைப் பொய் வேறொன்றுண்டோ? பல்லாண்டுகளாய்த் தேவனோடு நடந்துவந்த அப்போஸ்தலன் யோவான் தன் இறுதி நாட்களில் ஆலோசனை யாகக் கூறுவது: "நாம் தேவனுடைய கட்டளைகளின்படி நடப்பதே அவரிடம் அன்புகூருவதாம்; அவருடைய கட்டளைகள் பாரமானவைகளுமல்ல" (1 யோ 5:3). கீழ்ப்படிவதினால் இயேசுவின் நேச மார்பில் சாய்ந்து அவரது இளைப்பாறுதலை அனுபவிக்கும் சிலாக்கியம் பெறுவோம். எனவேதான் இயேசுவுக்குத் தான் ஓர் அடிமையெனப் பவுல் பெருமிதங்கொள்ளுகிறான்.

3. கணக்கொப்புவிப்பில் உண்மையாயிருங்கள்.

இதற்கு முதலாவதாக தேவனது சர்வ ஞானத்தை நாம் புரிந்து கொள்ளுதல் அவசியம். "அவருடைய பார்வைக்கு மறைவான படைப்பு ஒன்றுமில்லை; எல்லாம் அவரது கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும் வெளிப்படையாயுமிருக்கிறது; அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்" (வச 13).

தாவீது தேவனது இக்குணாதிசயத்தை இவ்விதம் வியந்து கூறுகிறான்: "கர்த்தாவே நீர் என்னை ஆராய்ந்து அறிந்திருக்கிறீர்... என் நாவில் சொல் பிறவாததற்கு முன்னே, இதோ, கர்த்தாவே, அதையெல்லாம் நீர் அறிந்திருக்கிறீர்... இந்த அறிவு எனக்கு மிகுந்த ஆச்சரியமும், எனக்கு எட்டாத உயரமுமாயிருக்கிறது" (சங் 139:1-6). இந்த அறிவே பாவம் செய்யாதபடி யோசேப்பைக் காத்தது. நாம் அவருக்குமுன் உத்தமமாக நடக்கும்போது, அனைத்தையும் காணும் அவரது கண்களைப் பற்றிய அறிவு, நமது சமாதானத்தையும் இளைப்பாறுதலையும் எந்தச் சக்தியும் அலைக்கழிக்க முடியாதென்ற நிச்சயத்தை நமக்களிக்கிறது. "அவர் அறிவார்!" இதுவே அமர்ந்து ஒய்ந்திருக்கும் வாழ்வின் இரகசியம். ஜெபம் நமக்கான ஒழுங்கு முறையே. நாம் கேட்குமுன் **அவர்** அறிந்திருக்கிறார். இயேசு, "கவலைப்படாதிருங்கள்... பரம பிதா அறிந்திருக்கிறார்" என்றார். இந்த அறிவு நீதிமான்களுக்கு நிம்மதியையும் துன்மார்க்கருக்குப் பீதியையும் அளிக்கிறது.

அடுத்து, வசனத்திற்கடுத்த வாழ்வே உண்மையான வாழ்வு. "தேவனுடைய வார்த்தையானது உயிரும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கூரான வாளைவிடக் கூர்மையானதாயும், ஆன்மாவையும், ஆவியையும், எலும்பு மூட்டுகளையும், ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் சிந்தனைகளையும் நோக்கங்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறதாயும் இருக்கிறது" (வச 12).

நமது ஆன்மாவின் துடிப்பான செயல்களைவிட ஆவியின் தொழுகையையே தேவன் விரும்புகிறார். ஒன்றையும் சிதைக்காமல் ஆவியையும் ஆன்மாவையும் வெட்டிப் பிரிக்கக்கூடிய கூர்மை திருவசனத்திற்கு மட்டுமே உண்டு! வார்த்தைகள் சிந்தனைகளைவிட ஆழமானவை, நோக்கங்கள் சிந்தனைகளைவிட ஆழ்ந்தவை. திருவசனம் இவற்றை ஊடுருவிச் செல்கிறது.

சங்கீதம் 19இல் தாவீது திருவசனத்தின் நடைமுறைப் பயனை விளக்குகிறான். அது நமது "பிழைகளை" நாம் உணரச் செய்து "மறைவான

குற்றங்களுக்கு" நம்மை நீங்கலாக்குகிறது. "துணிகரமான பாவங்களுக்கும்," "பெரும் பாதகத்துக்கும்" அது நம்மை விலக்கிக் காக்கிறது. படிப்படியான பின்மாற்றத்தை இங்கே காணலாம். அது "பிழைகளில்" துவங்கி, முளையில் கிள்ளி எறியாவிடில், "பெரும் பாதகத்தில்" முடியும். நம்மை எச்சரித்துப் பலனளிக்கும் திருவசனத்திற்காய்க் கர்த்தருக்கு ஸ்தோத்திரம். "அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன்; அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த நன்மையுண்டு" (வச 11,13).

வசனத்தை தேவனிடத்திலிருந்து நமக்கே வரும் நேரடிச் செய்தியாக ஏற்றுக்கொண்டால்தான் நம் வாழ்வு மறுமலர்ச்சியடையும். சீடரில் ஒருவன் தன்னைக் காட்டிக்கொடுப்பான் என்று இயேசு சொன்னபோது ஒவ்வொருவரும், "ஆண்டவரே, நானோ ?" என்றனர். நாம் வசனத்தைக் கேட்கும்பொழுதெல்லாம், வாசிக்கும்பொழுதெல்லாம் இப்படிப்பட்ட மனப்பான்மையையே தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். திருவசனமே முடிவானது. அதின் ஒளியில் வாழ்வோமானால் எவ்விதக் குற்றவுணர்வுமின்றி அமரிக்கையும் இளைப்பாறுதலுமாய் இருப்போம். "உம்முடைய வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த சமாதானமுண்டு; அவர்களுக்கு நிலைகுலைதல் இல்லை" (சங் 119:165).

4. விசுவாசத்தை உறுதியாய் அறிக்கையிடுங்கள்.

வச 14, "வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்குச் சென்றுள்ள தேவ குமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியால், நாம் செய்த அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொள்வோமாக!"

இங்கே, குறிப்பாய் மூன்று உண்மைகளை அறிக்கையிட அறிவுறுத்தப் படுகிறோம். ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட பகுதியில் வெற்றியளிக்கிறது என்பது வியப்பிற்குரியது.

முதலாவது, நாம் இயேசுவே இறைமகன் என்று அறிக்கையிடவேண்டும். இதைவிட அதி முக்கிய அறிக்கை வேறெதுவுமில்லை. ஏனெனில், "இயேசு வானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார் ?" என்று 1 யோவான் 5:5இல் காண்கிறோம். இதுவே உலகத்தை வெல்லும் வெற்றி. "தேவனால் பிறப்பதெல்லாம் **உலகத்தை** வெல்லும்." இயேசு தேவனது குமாரன், நாம் தேவனது குமாரர், குமாரத்திகள். நாம் தோற்க அல்ல, வெல்லவே பிறந்தவர்கள்! இயேசு தேவனது குமாரன் என்று சொல்லும்போது நாம் தேவனது குமாரர் ஆகிறோம்; ஏனெனில் அவர் நமது மூத்த சகோதரன் ஆயிற்றே! நாம் எல்லோரும் ஒருவராலானபடியால் அவரது வெற்றி நமது வெற்றி!

இரண்டாவது, இயேசு வானங்களின் வழியே சென்றார் என அறிக்கையிடுகிறோம். எந்த வான்வெளி சக்தியும் வல்லமையும் அவரைத் தடுக்க முடியவில்லை. **விண்வெளியிலுள்ள** தீய ஆவிகள் மீது நமக்குக் கிட்டும் வெற்றியை இது குறிக்கிறது (எபே 6:12). தானியேல் 10:12,13 நல்லதோர் எடுத்துக்காட்டு.

அடுத்து, இயேசு மகா பிரதான ஆசாரியர் என அறிக்கையிடுகிறோம். கிறிஸ்து நமக்காய்ப் பரிந்துரைக்கிறவராகவும், பிசாசு நமது பரம விரோதியாகவும் நிற்கும் தேவனது சிங்காசனத்திற்கருகில்தானே நமக்கு வெற்றியுண்டு என்பதை இது குறிக்கிறது. "எப்பொழுதும் குற்றஞ்சாட்டு கிறவனை" ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும் நமது சாட்சியின் வார்த்தையினாலும் ஜெயிக்கிறோம் (வெளி 12:10,11). இகத்தில், வானில், விண்ணில் வெற்றி! எங்கும் வெற்றி! கிறிஸ்தவ வாழ்வில் ஓய்வு என்பது யுத்தமின்மையை அல்ல, தேவன் மீது சார்ந்திருத்தலையும் வெற்றியின் உறுதியையும் குறிக்கும். இளைப்பாறுதலின் நாடாகிய கானானிலும் யுத்தமிருந்தது. ஆனால் நமது யோசுவாவாகிய இயேசுவின் தலைமையில் வெற்றி நமதே!

5. கிருபாசனத்துக்குத் தைரியமாய் வாருங்கள்.

வச 15,16, "நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக் கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லா வகையிலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற வேளையில் உதவக்கூடிய கிருபையைக் கண்டடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தை அணுகிச் செல்வோமாக."

இன்று கிருபாசனம், நாளை மகிமாசனம்! இயேசுவைப்போல் நம்மைப் புரிந்துகொள்ளக்கூடியவர் வேறெவரும் உண்டோ? சில வேளை சாத்தான் நம்மைச் சுளகில் புடைக்க அவர் அனுமதித்தாலும் நமது விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு விண்ணப்பமும் பண்ணிவிடுகிறார் (லூக் 22:31,32). பேதுரு தம்மோடு நியாயாசனத்தில் வீற்றிருக்க வாக்களித்தவுடனே இயேசு இதை அவனிடம் சொன்னது குறிப்பிடத்தக்கது.

எந்த உதவிக்கும் கடவுளிடம் எந்த வேளையிலும் செல்லத் தயங்கக் கூடாது. நாம் போதிய அளவு அவரிடம் செல்லவில்லை, கேட்கவில்லை என்பதுதான் அவர் குறை! உதவி செய்வதில் சலிப்படைகிறவரல்ல அவர்!

"அநாதி தேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ ?... சோர்ந்துபோகிறவனுக்கு அவர் வலிமை கொடுத்து வலிமையிழந்தவரிடம் ஊக்கம் பெருகச் செய்கின்றார்" (ஏசா 40:28,29). நன்மை செய்வதில் நம்மைச் சோர்ந்துபோகாதிருக்கக் கட்டளையிட்ட அவர் சோர்ந்துபோவாரோ ? கிருபாசனத்திற்குப் போய்வந்து இருக்கமாட்டேன்; அங்கேயே தங்கியிருப்பேன் என்றாராம் ஒருவர்! இதுவே சிங்காசன வாழ்வு! அமர்ந்திருத்தல்! ஓய்ந்து இளைப்பாறுதல்! கிறிஸ்துவோடு உன்னதங்களில் நம்மை வீற்றிருக்கச் செய்த தேவனுக்கே துதி!

முடிவுரை

வேதத்தில் இணைகள் ஏராளம். எபிரெயர் 4ஆம் அத்தியாயம் சங்கீதம் 95இன் இணை. (1) கர்த்தர் "நமது தேவன்" (சங் 95:7); அவரை நம்பு கிறோம். (2) அவர் "நமது இராஜா" (வச 3); அவருக்கு அடிபணிகிறோம். (3) அவர் "நம்மை உண்டாக்கினவர்" (வச 6); அவருக்கு உத்தரவாதமுள்ளவர்களாயிருக்கிறோம். (4) அவர் "நமது கன்மலை" (வச 1); அவரில் உறுதியாய் நிலைத்திருக்கிறோம். (5) அவர் "நமது மேய்ப்பர்" (வச 7); நாம் தைரியங்கொண்டிருக்கிறோம். மேலும் எபிரெயர் 4இல் கீழ்ப்படிதல் என்பது சங்கீதம் 95இல் "பணிந்து குனிந்து முழங் காற்படியிடுவோமாக" என்றிருக்கிறது. தைரியமாய்ச் சேருதல்— "துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வருவோம்" என்றிருக்கிறது. அறிக்கை— "இரட்சண்யக் கன்மலையை சங்கீர்த்தனம் பண்ணுவோமாக" என்றிருக்கிறது. அன்று அவிசுவாசத்தால் கீழ்ப்படியாமற்போன இஸ்ரவேலருக்குக் கிடைக்காத இளைப்பாறுதலை தேவன் இன்று நமக்குத் தருகிறார் (95:11).

விசுவாசிகளின் குருத்துவ ஊழியம்

இவ்வத்தியாயம் குருத்துவ ஊழியத்தைப் பற்றியது. குருத்துவ அல்லது ஆசாரிய அழைப்பைப் பெற்ற ஆரோன், கிறிஸ்து, மெல்கிசேதேக்கு ஆகியோரைக் குறித்து இங்கு காண்கிறோம் (வச 4,5,6). புதிய ஏற்பாட்டில் விசுவாசிகள் "அனைவரும்" ஆசாரியரென்றழைக்கப்படுவதால் இவ்வத்தியாயத்திலுள்ள சத்தியங்கள் யாவும் நமக்கு ஏற்ற படிப்பினைகளாகும். "தம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை அரசர்களும் ஆசாரியர்களுமாக்கினார்" (வெளி 1:6). இன்று மட்டுமா? ஆயிர வருட அரசாட்சியிலும் நாம் தேவனைச் சேவிக்கும் குருக்களாயிருப்போம். பரலோகப் பாடலொன்றிலிருந்து இதோவோர் வரி: "எங்கள் தேவனுக்கு முன்பாக எங்களை இராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்; நாங்கள் பூமியிலே அரசாளுவோம்" (வெளி 5:10; 20:6). "அனைத்து விசுவாசிகளின் ஆசாரியத்துவம்" எனும் முக்கிய சத்தியத்தைப் புரிந்துகொள்ளாவிடில் தனி வாழ்விலும், சபையிலும், ஊழியத்திலும், துர்வுபதேசங்களுக்கும் மாறுபாடுகளுக்கும் ஆளாவோம். புதிய ஏற்பாட்டுச் சபையில் ஆசாரியர், ஆசாரியரல்லாதோர் என இரு வகுப்பினர் இல்லை. நாம் அனைவரும் ஒரே உடலின் பல உறுப்புகள். சம முக்கியத்துவம்; ஆனால் பல்வேறு கடமைகள் (1 கொரி 12:1-27). தேவனுக்கு முன் ஆசாரியராயிருத்தல் அரும் சிலாக்கியம் மட்டுமல்ல, பெரும் பொறுப்புமாகும். இவ்வூழியத்தைச் செவ்வனே நிறைவேற்றுதல் எப்படி?

1. மக்களுக்காய்ப் பிரார்த்திக்கவேண்டும்.

வச 1, "மனிதரில் தெரிந்துகொள்ளப்பட்ட எந்தப் பிரதான ஆசாரியனும் பாவங்களுக்காகக் காணிக்கைகளையும் பலிகளையும் செலுத்தும்படி, மனிதருக்காக தேவ காரியங்களைப்பற்றி நியமிக்கப்படுகிறான்."

மனிதரின் பிரதிநிதிகளாய் அவர்களது தேவைகளை ஏந்தி நாம் தேவனுக்கு முன் ஆசாரியராய் நிற்கிறோம்.

முதலாவது, நாம் "எல்லா" மனிதரின் இரட்சிப்பிற்காகவும் வேண்டுதல் செய்யவேண்டும். "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனிதருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்... நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது... எல்லா மனிதரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோ 2:1,3,4). நமது ஜெபங்கள் எல்லா மனிதரையும் சூழவேண்டும். தேவன்... இவ்வளவாய் "உலகத்தில்" அன்பு கூர்ந்தார். ஒருவர் தேவ அன்பின் நாற்பரிமாணத்தை யோவான் 3:16இல் கண்டார். "தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை **விசுவாசிக்கிறவன் எவனோ**"—அவரது அன்பின் நீளம்; "அவன் கெட்டுப்போகாமல் **நித்திய ஜீவனை அடையும்படி**" —அன்பின் உயரம்; "அவரைத் **தந்தருளி**"— ஆழம்; "இவ்வளவாய் **உலகத்தில்** அன்புகூர்ந்தார்" —அகலம்! ரோமர் 10:14இல் பவுல், "**பிரசங்கிக்கிறவன்** இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?" என்று கேட்கிறான். 1 தீமோ 2:1,3,4இன் அடிப்படையில், "அவர்களுக்காய் **விண்ணப்பிக்கிறவன்** இல்லாவிட்டால் எப்படி இரட்சிக்கப்படுவார்கள்?" என்றும் கேட்கலாமல்லவா?

அடுத்து, தேவ மக்களது எழுப்புதலுக்காகவும் சீர்திருத்தத்திற்காகவும் வேண்டுதல் செய்யவேண்டும். இன்றையச் சபை அன்றையச் சபை அல்ல. இன்றையச் சபை இருக்க வேண்டியபடி இல்லை. முந்தின மகிமையை இழந்து பின்வாங்கிப்போயிருக்கிறோம். பெரும்பான்மையான சபைகளின் நிலை இதுவே. வெளிப்படுத்தலின் ஏழு சபைகளில் ஐந்து சபைகள் ஆண்டவரால் கண்டிக்கப்பட்டன. நம் நிலையும் அதுதானே? முதல் சபையாகிய எபேசுவில் விளக்குத் தண்டுகள் நடுவில் உலாவின கிறிஸ்து, கடைசிச் சபையாகிய லவோதிக்கேயாவில் வெளியே இருந்து கதவைத் தட்டி நிற்கிறார்! தன் ஆண்டவரை இழந்ததையே அறியாமல் சபை என்னவோ இயங்கிக்கொண்டிருக்கிறது! "நீர் எங்களைத் திரும்ப உயிர்ப்பிக்கமாட்டீரோ?" (சங் 85:6). கடைசிகாலத் தீர்க்கத்தரிசி யோவேல்

ஆண்டவரது ஆசாரியரைப் புலம்பி ஜெபிக்க அழைக்கிறான்: "ஆசாரியர்களே, இரட்டுடுத்திப் புலம்புங்கள்; பலிபீடத்தின் பணிவிடைக்காரரே, அலறுங்கள்; என் தேவனுடைய தொண்டரே, நீங்கள் உள்ளே நுழைந்து இரட்டுடுத்தவர்களாய் இராத்தங்குங்கள். உங்கள் தேவனுடைய ஆலயத்தில் போஜன பலியும் பான பலியும் செலுத்தப்படாமல் நிறுத்தப்பட்டன... கர்த்தரின் பணிவிடைக்காரராகிய ஆசாரியர்கள் மண்டபத்துக்கும் பலிபீடத்துக்கும் நடுவே அழுது: கர்த்தாவே, நீர் உமது மக்களைத் தப்பவிடும் என்பார்களாக" (யோவேல் 1:13; 2:17). எழுப்புதலைப் பற்றிப் போதுமான அளவு பிரசங்கித்துவிட்டோம்; போதுமான அளவு எழுதிவிட்டோம்; ஆனால் அதற்காய்ப் போதுமான அளவு ஜெபிக்கவில்லை. எழுப்புதல் தாமதிப்பது ஏன்? —இதனால்தான்! நோயுற்ற சபை செத்துக்கொண்டிருக்கும் உலகைக் காப்பாற்ற முடியுமோ? நமது அனுதின ஜெபப் பட்டியலில் எழுப்புதல் முதல் குறிப்பாயிருக்கட்டும்.

மூன்றாவது, நம்மோடு நெருங்கி ஐக்கியப்படும் விசுவாசிகளுக்காய் விண்ணப்பிக்கவேண்டும். அது உள்ளூர்ச் சபை அல்லது ஜெபக் குழுவின் உறுப்பினரைக் குறிக்கலாம். "நீங்கள் சுகமடையும்படி உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பயனுள்ளதாயிருக்கிறது" (யாக் 5:16). கடமைக்காய்க் கைகுலுக்கி வந்தனம் சொல்வது போதாது. சக விசுவாசிகளுக்காய்க் கிரமமாய் வேண்டுதல் செய்தல் அவசியம். நாம் தனித்தவர்களல்ல, சார்ந்தவர்கள். எனக்கு என் ஜெபம் போதும் என்று எண்ணக்கூடாது. தம்மோடு விழித்திருந்து விண்ணப்பிக்க இயேசு சீடரைக் கோரினார். தன்னோடு ஜெபத்தில் போராடும்படி பவுல் சக விசுவாசிகளை மன்றாடிக் கேட்டான். ஒருவருக்காய் ஒருவர் ஜெபிப்போம்—உண்மையாய், ஊக்கமாய்! கர்த்தரது ஜெபம் "எனக்கு" என்றிராமல், முழுவதும் "எங்களுக்கு" என்றிருப்பது எத்தனைக் கருத்தானது!

2. பலமற்றோரிடம் கனிவாய் இருக்கவேண்டும்.

வச 2, "தானும் பலவீனனானதால், அறியாதவர்களுக்கும் நெறிதப்பிப் போனவர்களுக்கும் பரிவுகாட்டுகிறவனாயிருக்கிறான்."

நல்ல சமாரியன் உவமையில் வரும் ஆசாரியன் பின்பற்றத்தக்கவனல்ல. "அடிபட்டவனைக் கண்டு, அவன் ஒதுங்கிப்போனான்" (லூக் 10:31). ஆசாரிய ஊழியத்தின் வேலை மிகுதியினால் அவசரத் தேவைகளுக்கு நேரமில்லாமற்போயிற்றோ? பின்பு ஒரு லேவியனும் அவ்வழியே வந்து

கரிசனையின்றிக் கடந்து சென்றான். ஆசாரிய ஊழியம் லேவி கோத்திரத் திற்கு உரியதாயிருந்ததே! புதிய ஏற்பாட்டு ஆசாரியன் அங்கி அணிந்த வனோ மடிப்புக் கலையாத மேலாடை தரித்த மேதாவியோ அல்ல. அவன் தரையில் மண்டியிட்டு தவிப்பவரைத் தாங்கவோ, வேட்டியை மடித்துக் கட்டிக்கொண்டு துடிப்பவரைத் தூக்கவோ தயங்காதவன்.

நமக்கு முன்மாதியான பிரதான ஆசாரியராகிய இயேசு மனிதரோடு தம்மை அடையாளப்படுத்திக்கொண்டார். "அவர் மக்களின் பாவங்களை நிவிர்த்தி செய்வதற்கேதுவாக, தேவ காரியங்களைக்குறித்து இரக்கமும் உண்மையுமுள்ள பிரதான ஆசாரியராயிருக்கும்படிக்கு எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாக வேண்டியதாயிருந்தது. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படு கிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்" (2:17,18). இல்லா தோருக்கு இரக்கமும் கனிவும் காட்டுகிறோமா ? பேருந்து, புகைவண்டி நிலையங்களில் பிச்சைக்காரர், துன்புறுவோரை என் மனைவி தன் கரங்களால் அன்பாய் அணைப்பதைக் கண்டு வெட்கமுறுகிறேன். என் வெத்து அந்தஸ்து குத்தப்படுகிறது. தொழுநோயாளிகளையும் தொட்ட இயேசுவின் தைரியமான அன்பையும், அன்பான தைரியத்தையும் எனக்கு அருள ஆண்டவரை வேண்டி நிற்கிறேன்.

தேவ மக்களிடையே பின்மாற்றம் சாதாரணம். ஆசாரியர் என்ற முறையில் ஒருவரையொருவர் நாம் தூக்க வேண்டுமேயொழிய தாக்கக் கூடாது. "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்திலிருந்து பாவியைத் திருப்புகிறவன் ஓர் ஆத்துமாவை மரணத் திலிருந்து விடுவித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறி யட்டும்" (யாக் 5:19,20). எத்தனைத் தாழ்மையான ஆனால் தங்கமான ஊழியம்! அநேக பின்மாற்றக்காரரது இதயம் கடினப்பட்டுப்போவது பிற விசுவாசிகள் உடனடிக் கவனம் செலுத்தாததினாலேயே. பாவம் வளர வளர சுவர் தடிக்கிறது. "என் சகோதரனுக்கு நான் காவலாளியோ ?" என்கிறோம். பின்னே யார் ?

பின்மாற்றமடைந்த சகோதரன் ஒருவனைத் திரும்பக் கொண்டுவரும் முயற்சி குறித்து அப்போஸ்தலன் பவுல் ஓர் எச்சரிப்பை விடுக்கிறான்: "சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர் களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர் பொருந்தப்பண்ணுங்கள்; நீங்களும் சோதிக்கப்படாதபடிக்கு உங்களைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (கலா 6:1). பிறரது விசுவாசத்தை

னறக்கட்ட நமக்கு பொறுப்பு உண்டே தவிர அவர்களது விசுவாசத்தின்மேல் நமக்கு யாதொரு அதிகாரமும் இல்லை. ஆலோசனை கொடுக்கும் ஊழியத்தின் தத்துவங்களையெல்லாம் கற்றிருந்தாலும் அன்பின் ஆவியும் மென்மையும் இல்லாவிடில் பிறரைப் புண்படுத்தி நமக்கும் கேடுண்டாக்குவோம். தங்களது பலக்குறைவையும் வீழ்த்தகு தன்மையையும் உணர்ந்தவர்களாய் ஆலோசகர் மிக விழிப்பாயிராவிடில் எப்பாவத்திற்கு ஆலோசனை அளிக்கிறாரோ அதற்கே பலியாகிவிடுவர். அப்பொழுதுதான் நம்மை மென்மையாகவும் பிறரைக் கடினமாகவும் நடத்தச் சோதிக்கப் படுகிறோம். எனவே நமது ஒன்றுமில்லாமையை நன்குணர்ந்தவர்களாய் பலவீனர், அறியாதவர், நெறிதவறிப்போவோரிடம் கனிவாய் நடந்து கொள்வோம் (வச 2).

தனிவாழ்வில் பரிசுத்தத்தைக் காத்துக்கொள்ளவேண்டும்.

வச 3, "அவன் மக்களுடைய பாவங்களுக்காகப் பலியிடவேண்டியது போல, தன்னுடைய பாவங்களுக்காகவும் பலியிடவேண்டியதாயிருக்கிறது."

ஆசாரியத்துவமும் பரிசுத்தமும் இணை பிரியாதவை. நமக்குப் பெயரே "பரிசுத்த ஆசாரியக் கூட்டம்"தான் (1 பேது 2:5). தேவன் தமது பிள்ளைகளிடம் அதிகமாகவே எதிர்பார்க்கிறார். மற்றவர்கள் செய்கிறார்களே என்று நாம் எதையும் செய்துவிடமுடியாது. ஆசாரியர்களாய் நாம் தேவனுக்கு முன்பாகப் பரிசுத்த ஆடையோடு நிற்கவேண்டும். பிரதான ஆசாரியனாகிய யோசுவாவின் அழுக்காடைகளைக் கழற்றிப்போட்டு, ஆண்டவர் அவனுக்குச் சுத்தமான ஆடைகளை உடுத்தி சுத்தமான பாகையை அவன் தலையில் வைத்தார் (சக 3:1-5). "ஆசாரியர்களில் ஒருவனும் உட்பிராகாரத்துக்குள் நுழையும்போது திராட்சரசம் குடிக்கக்கூடாது... பறவைகளிலும் மிருகங்களிலும் தானாய்ச் செத்ததும் பீறுண்டதுமான ஒன்றையும் ஆசாரியர்கள் சாப்பிடக்கூடாது" என்று திருச்சட்டம் கூறுகிறது (எசேக் 44:21-31).

ஆசாரியர் பாவஞ்செய்து அசுத்தமாய் வாழ்ந்தால் அவர்களது ஊழியம் கேலிக்கிண்டலாகிவிடுமே. தெய்வ காரியங்களில் மக்கள் பயபக்தியை இழந்து விடுவர். கடவுளின் பெயர் பழிக்கப்படும். ஆன்மீகப் பலிகளைச் செலுத்தும்படிக்கும் அவரது புண்ணியங்களை அறிவிக்கும்படிக்கும் ஏற்படுத்தப்பட்ட "பரிசுத்த" ஆசாரியக் கூட்டமாகிய நாம் இருளிலிருக்கிற மக்களுக்குக் கவர்ச்சியாகவும், ஒளியிலிருக்கிற கடவுளுக்குப் பிரியமாகவும் இருக்கவேண்டும் (1 பேது 2:5,9).

யோவானின் பெற்றோர் முன்மாதிரியானதொரு தம்பதியர். தந்தை சகரியா ஓர் ஆசாரியன்; தாய் எலிசபெத்து ஆரோனின் குமாரத்தி.

"அவர்களிருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின் படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ள வர்களாயிருந்தார்கள்." "உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியம் செய்யக் கட்டளையிடுவேன் என்று..." எனச் சகரியா தீர்க்கதரிசனமாய்ப் பாடினான் (லூக் 1:5,6,71). "க-ர்-த்-த-ரு-க்-கு-ப் ப-ரி-சு-த்-த-ம்" என்ற சொற் றொடரைத் தங்கத் தகட்டில் பொறித்து அதை ஆரோனின் தலைப் பாகையில் வைத்திருந்தனர் (யாத் 28:36,37). இதுவே நமக்கும் தங்க வசனமாகட்டும்!

4. படிப்பினைக்காகத் துன்பங்களை ஏற்கவேண்டும்.

வச 7-9, "இயேசு இவ்வுலகிலிருந்த நாட்களில், தம்மை மரணத்திலிருந்து விடுவிக்க வல்லமையுள்ளவரை நோக்கி, பலத்த சத்தத்தோடும் கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கு உண்டான பயபக்தியினிமித்தம் கேட்கப்பட்டு, அவர் குமாரனாயிருந்தும் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, தாம் பூரணரான பின்பு, தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணரானார்."

நம்மை உள்ளங்கையில் வரைந்து நமது மயிரையெல்லாம் எண்ணி வைத்திருக்கும் தேவன் திட்டமான நோக்கின்றி எத்துன்பத்தையும் நமது வாழ்வில் அனுமதிக்கமாட்டார். அப்பழுக்கற்ற ஆசாரியர் இயேசுவே பாடுகளுக்குட்பட வேண்டியிருந்ததானால், நாம் எம்மாத்திரம்? (வச 8). மேற்கூறிய பகுதியில் துன்பத்தின் இரண்டு நோக்குகளைக் காணலாம்.

முதலாவது, சார்ந்திருக்கவும், கீழ்ப்படியவும் கற்றுக்கொள்கிறோம். "பலத்த சத்தம்... கண்ணீர்... விண்ணப்பம்... வேண்டுதல்... பயபக்தி" (வச 7). இவை தேவன்மேல் முற்றிலும் சார்ந்திருத்தலைக் குறிக்கின்றன அல்லவா? நமது பலக்குறைவை உணரும் நிலையில் நாம் நிறுத்தப் பட்டாலேயன்றி தேவனது பலத்தை நாம் புரிந்து பாராட்டுதல் அரிது. எனவேதான் பவுல் தன் பலவீனத்தில் மேன்மை பாராட்டினான். அவனது பலவீனத்தையும் தேவனது பலத்தையும் உணர பாடுகள் தருணமளித்தன. "நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" என்றான் (2 கொரி 12:9,10). துன்பத்தில் துவளும்போது நமது ஜெபங்களில் மாய்மாலமிருப்பதில்லை. ஒத்தாசை வரும் பர்வதங்களை நோக்கி ஓலமிடுகிறோம். இருளில்தான் விசுவாசம் இரும்பாகும்.

"என் நேசர் இயேசுவின்மேல் சார்ந்தே,
துன்ப வனாந்திரத்தில் நடந்து நான்
இன்ப நல் வாழ்வடைந்தேன்"

போன்ற பாடல்களின் கருத்து கண்ணீர்ப் பள்ளத்தாக்கில்தான் நன்கு விளங்கும்!

சார்ந்திருத்தலோடு கீழ்ப்படிதலும் வரும் (வச 8). தேவ சத்தத்தைத் தெளிவாய்க் கேட்க நமது உள்ளத்தைத் திருப்புவது துன்பமே. கீழ்ப் படிதலைக் கற்பிக்கவேயன்றி பிள்ளையைப் பிரம்பாலடிப்பதில் தந்தைக்கு என்ன மகிழ்ச்சி ? துன்பத்தின் பள்ளியில் தேவன் நம்மை உணர்த்துகிறார், திருத்துகிறார், தேற்றுகிறார். கீழ்ப்படிதலைக் "கற்றுக்கொள்கிறோம்!" இதுவே துன்பத்தின் கல்விச்செல்வம்!

பிறருக்கு நம்மை நடைமுறை எடுத்துக்காட்டுகளாக்குவதும், அன்னா ருக்கு நம்மை உள்ளுணர்வோடு உதவி செய்கிறவர்களாக்குவதும் துன்பத்தின் அடுத்த நோக்கமாகும். பவுலின் சாட்சியைக் கவனியுங்கள்: சகலவிதமான ஆறுதலின் தேவனுமாயிருக்கிறவருக்கு ஸ்தோத்திரம். தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத் திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு, நாங்கள் ஆறுதல் செய்யத் திராணி யுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" (2 கொரி 1:3,4). எறும்பின் மொழி எறும்புக்குத்தான் புரியும். துன்புற்றோரே துன்புறுவோரின் துயரைப் புரிந்துகொள்ள முடியும். நான் முழுநேரக் கிறிஸ்தவப் பணியாளனாகுமுன் வேலூர் கிறிஸ்தவ மருத்துவமனையில் பொறியியலராய் ஐந்து ஆண்டுகள் (1971-75) வேலை செய்தேன். அந்த நாட்களில் துன்புறும் நோயாளிகள் அநேகரைக் கண்டிருந்தும், அவர்களது இன்னல் எனக்குப் புரியவுமில்லை, அது என் உள்ளத்தை உருக்கவுமில்லை. ஒரு நாள் அதே மருத்துவ மனைக்கு சிறுநீரகக் கல் வேதனையில் துடித்தவனாய் தூக்கிச்செல்லப் பட்டேன். அன்றுதான் புரிந்தது! ஏராளம் கற்றுக்கொண்டேன்! பட்ட பாடு களினாலே இயேசு நமது இரட்சிப்பின் "காரணரானார்" (வச 9). நம்மில் நல்ல மாதிரிகளை உருவாக்க தேவன் பல்வேறு முறைகளில் நம்மோடு இடைபடுகிறார் (1 தீமோ 1:16).

5. வசனத்தில் வித்தகர்களாயிருக்கவேண்டும்.

வச 12-14, "இவ்வளவு காலத்திற்குள் ஆசிரியர்களாய் இருந்திருக்க வேண்டிய உங்களுக்கு தேவனுடைய வாக்கியங்களின் அரிச்சுவடியையே மறுபடியும் கற்றுக்கொடுக்க வேண்டியதாயிருக்கிறது; நீங்கள் கெட்டியான

ஆகாரத்தையல்ல, பாலை உண்ணத்தக்கவர்களானீர்கள். பால் குடிக்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான். திட உணவானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் பகுப்பாற்றல் உள்ளவர்களாகிய முதிர்ச்சி அடைந்தோருக்கே தகும்."

விசுவாசிகள் அனைவரும் நடைமுறை வேத அறிவுடையவர்களாயிருத்தல் அவசியம். இது ஆசாரியரிடம் அடிப்படையாக எதிர்பார்க்கப்படும். "ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே; அவன் சேனைகளுடைய கர்த்தரின் தூதன்" (மல் 2:7). இதோ சில எடுத்துக்காட்டுகள்—

ஆசாரியனாயிருந்த மெல்கிசேதேக்கு "அப்பமும் திராட்சரசமும்" கொண்டுவந்து தேவனுடைய பெயரால் ஆபிரகாமை ஆசீர்வதித்தான் (ஆதி 14:18,19). அப்பமும் திராட்சரசமும் தேவனுடைய வார்த்தையைக் குறிக்கின்றன. ஒன்று ஆகாரம், மற்றொன்று பானம். தேவ வார்த்தை இரண்டுமே! ஆசாரியனாகிய எஸ்றா மற்றொரு எடுத்துக்காட்டு. "கர்த்தருடைய வேதத்தை ஆராயவும், அதன்படி செய்யவும், இஸ்ரவேலிலே கட்டளைகளையும் நீதி நியாயங்களையும் உபதேசிக்கவும் எஸ்றா தன் இருதயத்தைப் பக்குவப்படுத்தியிருந்தான்" (எஸ்றா 7:10). ராஜாவாகிய அர்தசஷ்டா எஸ்றாவை, "பரலோகத்தின் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைப் போதிக்கிற உத்தம வேதபாரகனாகிய எஸ்றா என்னும் ஆசாரியன்" என்றழைத்தான் (எஸ்றா 7:12), இஸ்ரவேலின் பரிதாப நிலையை வேதம் வர்ணிப்பதைப் பாருங்கள்: "இஸ்ரவேலிலே நெடுநாளாய் மெய்யான தேவனும் இல்லை, உபதேசிக்கிற ஆசாரியனும் இல்லை, வேதமும் இல்லை" (2 நாளா 15:3).

வேதத் தியானம் நமக்கும் பிறருக்கும் பயனளிக்க வேண்டுமானால் வேதத்தின் ஒரு வசனப் பகுதியை வாசித்ததும் மூன்று கேள்விகளைக் கேட்க வேண்டும். இப்பகுதியில் தேவன் தம்மைக் குறித்து என்ன சொல்லுகிறார்? என்னைக் குறித்து என்ன சொல்லுகிறார்? பிறரைக் குறித்து என்ன சொல்லுகிறார்? இந்த மூன்று கேள்விகளும் அன்பைக் குறித்த இயேசுவின் இருபரிமாண கட்டளையின் மூன்று அம்சங்களின் அடிப்படையில் உள்ளன. தேவனை நேசித்தல், நம்மை நேசித்தல், நம்மைப்போல் பிறரை நேசித்தல். நியாயப்பிரமாணமும் கற்பனைகளும் இவற்றுள் அடங்கியிருக்கின்றன என்றார் இயேசு. ஆராதனை, ஆராய்ச்சி, அறிவிப்பு— இம்மூன்றையும் சரிவிகிதத்தில் கொள்வது எல்லாப் பகுதிகளிலும் நாம் வளர்ச்சியடையவும், தேவ ஊழியராய் கனி வாழ்வில் பெருகவும் ஏதுவுண்டாக்கும்.

உத்தமமாய் வசனத்தைப் போதிக்கும் ஊழியனுக்கு எதிர்ப்பு நிச்சயம். ஓர் எடுத்துக்காட்டு: "எரேமியாவுக்கு விரோதமாக ஆலோசனை செய்வோம் வாருங்கள்; ஆசாரியரிடத்திலே வேதமும்... ஒழிந்து போவதில்லை. இவன் வார்த்தைகளை நாம் கவனியாமல், இவனை நாவினாலே வெட்டிப்போடுவோம் வாருங்கள் என்றார்கள்" (எரே 18:18). ஆனால் நம்மை ஆசாரியராக்கி, இம்மேன்மையான வசன ஊழியத்தை நம் பொறுப்பில் ஒப்படைத்துள்ள தேவன் தம் வாக்குத்தத்தத்தோடு நம் பக்கம் நிற்கிறார். "உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்! உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்; இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்தரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசா 54:17).

முடிவுரை

பிரதான ஆசாரியராம் இயேசு கிறிஸ்துவின் கீழ் நாம் இன்று ஆசாரியராயிருக்கிறோம். நாம் மன்றாட்டு மன்னராகவும், உருக்கமான உதவியாளராகவும், நடைமுறை நற்குணசாலிகளாகவும், பொறுமையாய்ப் பாடனுபவிப்பவராகவும், உத்தம உபதேசிகளாகவும் இருப்போம். இடையூறுகள், தடைகள், எதிர்ப்புகள் நடுவிலும் இவ்வைந்து ஆசாரியப் பொறுப்புகளை ஆயாசமின்றி உற்சாகமாய் நிறைவேற்றுவோமானால் நாளை அவரோடு "இராஜாக்களும் ஆசாரியருமாய்" மகிமையில் அரசாளுவோம்!

எபிரெயர் அத்தியாயம் ஆறு

பின்மாற்றத்திற்கு மாற்றுமருந்து

விசுவாசிகள் நடுவில் மலிந்து கிடக்கும் கவலைக்குரிய நிலை பின்மாற்றமாகும். நாம் "மறுதலித்துப்போகாமல்" (வச 6) "முடிவு வரை" (வச 11) நிலைத்திருத்தலே தேவ சித்தமாகும்.

பின்மாற்றத்தின் பயங்கரத்தை வசனங்கள் 4-6இல் காணலாம். "ஒரு தரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், தேவனுடைய நல் வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் வல்லமையையும் ருசிபார்த்தும் மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால், மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்." பின்மாற்றம் என்பது மறுபடியும் கிறிஸ்துவை சிலுவையிலறைதல், அவரது முகத்தில் உமிழ்தல், அவரது முதுகில் அடித்தல், வெளியரங்கமாய் அவரை அவமானப்படுத்துதல் ஆகும்!

பின்மாற்றம் திடீரென ஏற்படுவதல்ல, படிப்படியாய் நிகழும். முதலாவது அது துன்மார்க்கருடைய ஆலோசனையின்படி **நடத்தல்**, பின்பு பாவிகளுடைய வழியில் **நிற்றல்**, இறுதியாக பரியாசக்காரர் உட்காரு மிடத்தில் **உட்காருதல்!** (சங் 1:1).

பின்மாற்றத்தில் இருவகை உண்டு. ஒன்றிலிருந்து திரும்புதல் சாத்தியம், அடுத்ததிலிருந்து பொதுவாக மீளுவதரிது. முதல் வகையை மூன்று எடுத்துக்காட்டுகள் கூறி விளக்கலாம். முதலாவது தேவன்மீது கொண்ட ஆதி அன்பும், ஆன்மீகக் காரியங்களில் ஆர்வமும் குறைவுபடலாம் வெளி 2:4,5இல் கிறிஸ்து எபேசு சபையைக் குறித்துக் கூறுவது இதுவே. ஆதி நிலையை நினைவுபடுத்தி இப்போதிருக்கும் நிலையிலிருந்து மனந்திரும்ப அச்சபையை அழைக்கிறார். அடுத்து வருவது, பரிசுத்தத்தின் இழப்பும் பாவத்தின்மேல் வெற்றியின்மையுமாகும். இந்நிலையிலிருந்தும் எழுந்துவர வாய்ப்புண்டு. யாக் 5:19,20, "சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தை விட்டு விலகி மோசம்போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்." பின்மாற்றத்தின் இன்னொரு நிலை சுத்த விசுவாசத்திலிருந்து வழுவி கள்ளப் போதகத்தில் சிக்கிக்கொள்ளுதல். இதை 2 தீமோ 2:17இல் "புற்றுநோய்" என்றழைக்கிறான் பவுல். தேவ கிருபையினால் இதையும் குணமாக்கலாம். இவ்விதப் பின்மாற்றக்காரர் ஆரோக்கியமடையலாம். "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும். எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி செய்ய அவனால் பிடிக்கப்பட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும் சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்கவேண்டும்" (2 தீமோ 2:24-26).

இரண்டாவது வகை பின்மாற்றத்திற்குப் பொதுவாக பரிகாரம் காண்பதரிது. அது கிறிஸ்துவை வெளிப்படையாக மறுதலித்துப் புறம்பே தள்ளுவதாகும். எபி 6:4-6இல் இதை வாசிக்கிறோம்: "மறுதலித்துப் போனவர்கள்... மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்." எபிரெயர் நிருப ஆக்கியோன் ஏசாவைச் சுட்டிக்காட்டி இந்நிலையை 12:16,17இலும் குறிப்பிடுகிறான். "ஒருவனும் வேசிக்கள்ளனாகவும் ஒருவேளை உணவுக்காகத் தனது தலைப்பேற்று உரிமையை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால் பின்னர் அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும், ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம்மாறுதலைக் காணாமற்போனான்." தலைப்பேற்று உரிமையை விற்றுப்போடுவது கடவுளின் பார்வையில் அந்த வாரிசில் வரவிருந்த

மேசியாவைப் புறக்கணிப்பதாகும். அப்போஸ்தலன் யோவான் இதையே "மரணத்துக்கேதுவான பாவம்" எனக் குறிப்பிடுகிறான் (1 யோ 5:16,17).

எபிரெயர் ஆறாம் அத்தியாயம் பின்மாற்றத்திற்கான நான்கு மாற்று மருந்துகளை அளிக்கிறது.

1. அடித்தளமல்ல, பூரணம்.

வச 1-6, "கிறிஸ்துவைப்பற்றிய அடிப்படைப் போதனைகளிலிருந்து முன்னேறிச்சென்று... அடித்தளத்தை மறுபடியும் போடாமல், பூரணராகும்படி கடந்து போவாமாக... ஏனெனில்,... மறுதலித்துப்போனவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாத காரியம்."

இப்பகுதி மனந்திரும்புதல், விசுவாசம், ஞானஸ்நானங்கள், ஆவியின் வரங்கள், உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு ஆகியவைகளை "மூல" உபதேசங்கள் அல்லது "அஸ்திபாரம்" என்றழைக்கிறது. துவக்கப் பள்ளியில் 1+1=2; 1X1=1; 1-1=0 எனக் கற்றோம். இது அடித்தளம். இது அதி முக்கியம். உயர்நிலைப் பள்ளி அல்லது கல்லூரி செல்லும் ஒருவன் இதை மறந்துவிட முடியாது. ஆனால் இதையே திரும்பத் திரும்பக் கற்பதினால் பயனென்ன ? அதுபோல அடிப்படை உபதேசமாகிய அடித்தளம் அத்தியா வசியமானாலும் நாம் அதைவிட்டு உயர்நிலைக்கும், உன்னத சத்தியங் களுக்கும் கடந்து செல்லுதல் இன்றியமையாதது. "பூரணராகும்படி கடந்து போவோமாக." கட்டிட அடித்தளம் மற்றோர் எடுத்துக்காட்டு. அடித்தளம் முக்கியம் என்பதற்காக அதை எத்தனை தரம்தான் போடுவது ? (நான் அஸ்திபாரக் கலை கற்றவன்!) மேற்கட்டிடத்தை எழுப்ப வேண்டாமா ? மேற்கூறிய ஆறு அம்சங்களை மட்டும் பிரசங்கிப்போரை "பூரண சுவி சேஷகர்" எனப் பெயரிடும் அளவிற்கு கிறிஸ்தவம் பின்வாங்கிப்போயிருக் கிறது. அஸ்திபாரத்தைக் கட்டிடம் என்றழைக்கும் அளவிற்கா கண் சொருகிப்போனோம் ? பின்மாற்றத்திற்குத் தப்ப ஒரே வழி முன்னேறிச் செல்வதே.

தொடர்ந்து தடுமாற்றமின்றி முன்னேறும் வாழ்க்கைக்கு மாதிரியாய் அப்போஸ்தலன் பவுல் சாட்சி பகர்கிறான்: "நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காய்ப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" (பிலி 3:8-12). அவனது தேட்டம்தான் என்ன ? "கிறிஸ்துவை அறிகிற அறிவு," "அவரது உயிர்த்தெழுதலின் வல்லமை," "அவரது பாடுகளின் ஐக்கியம்!" சரியாய்ச் சொல்லப்போனால் கிறிஸ்து

அவனுக்காய்க் கொண்டிருந்த நோக்கமே அவன் கிறிஸ்துவில் கொண்ட நோக்கம். இப்படி ஆன்மீகப் பேராசையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். உயர உயர! ஆழ ஆழ! அகல அகல! இதுவே நம் குறிக்கோளாக வேண்டும். வானமே எல்லை என்பது பழமொழி! கிறிஸ்தவனோ அதையும் தாண்டிச் செல்வான்! "கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பு" (பிலி 3:14).

பிரியமானவரே, ஏறுவதை நிறுத்தாதீர், நிறுத்தினால் நிச்சயம் வழுக்கிடுவீர். மேலே, மேலே, மேலே! பின்னோக்கு வேண்டாம்! கீழ்நோக்கு வேண்டாம்!

2. முட்களல்ல, கனிகள்.

வச 7,8, "தன்மேல் அடிக்கடி பெய்கிற மழையைக் குடித்து, தன்னிடத்தில் பயிரிடுகிறவர்களுக்கேற்ற பயிரை முளைப்பிக்கும் நிலமானது தேவனால் ஆசீர்வாதம் பெறும். முட்செடிகளையும் முட்பூண்டுகளையும் முளைப்பிக்கிற நிலமோ தகாததாயும் சபிக்கப்படுகிறதற்கேற்றதாயுமிருக்கிறது; சுட்டெரிக்கப்படுவதே அதின் முடிவு."

மழையைப் பெறும் நிலம் கனிதர வேண்டும். நாம் அவருக்குக் கனி கொடுக்கும்படியாகவே தேவன் நம்மீது தமது ஆசீர்வாதத்தைப் பொழிகிறார். பின்மாற்றத்தைத் தவிர்க்க நாம் விடாது கனிகொடுத்துக்கொண்டே இருத்தல் அவசியம். அப்படியிருக்கும்போது நாம் "மிகுதியான" கனிகளைக் கொடுக்கும்படி ஆண்டவர் நம்மைச் சுத்தம் பண்ணுகிறார் (யோ 15:2). இதுவே பின்மாற்றமில்லாத பாக்கியமான வாழ்வின் இரகசியம். மழையென்பது தேவ ஆவியானவரையும், தேவ வார்த்தையையும், தேவ கிருபையையும் குறிக்கிறது. இம்மூன்று ஆசிகளையும் பெறுவதால் நாம் அளிக்க வேண்டிய பிரதிபலன் என்ன என்பதைக் கவனிப்போம்.

(அ) மழையாகிய **தேவ ஆவியானவரைப்** பெறுவதால் நாம் இருவித பலன்தர எதிர்பார்க்கப்படுகிறோம். முதலாவது, நமது குணம். "ஆவியின் கனியோ அன்பு, மகிழ்ச்சி, சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், நம்பகம், சாந்தம், தன்னடக்கம்" (கலா 5:22,23). இக்கனிகளைத் தரவே ஆவியானவர் நம்மீது ஊற்றப்பட்டார். ஆவியைப் பெற்றும் "ஊனியல்பின் செயல்களையே" (கலா 5:19-21) செய்வோமானால் "முட்செடிகளையும் முட்பூண்டுகளையும்" பிறப்பிப்பவராவோம். ஆவியானவரோடு ஒத்துழைத்து கிறிஸ்துவின் சாயலுக்கொப்பாக ஆவியின் கனிகளைப் பிறப்பிக்க எல்லா முயற்சியும் எடுக்கவேண்டும். ஆவியின் அருள்மாரியின் இரண்டாம்

தேவன் அபரிமிதமாய்த் தமது மழையை நம்மீது பொழியப்பண்ணுகிறார்: அளவிலாது ஆவி! நிறைய வசனம்! போதுமான கிருபை! இவற்றைப் பெற்று நற்கனிகளான பலனளிப்போமானால் பின்மாற்றம் எங்கே?

3. சுயநலமல்ல, பகிர்ந்தளித்தல்.

வச 9,10, "பிரியமானவர்களே,... நன்மையானவைகளும் இரட்சிப்புக்குரியவைகளுமான காரியங்கள் உங்களிடத்தில் உண்டாயிருக்கிறதென்று நம்பியிருக்கிறோம். ஏனென்றால், உங்கள் செயல்களையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்குத் தொண்டு செய்ததினாலும், செய்துவருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள உழைப்பையும் மறந்துவிடுகிறதற்கு தேவன் அநீதியுள்ளவரல்லவே."

நமது பொருட்களைப் பிறரோடு, அதுவும் தேவ மக்களோடு, பகிர்ந்து அநுபவித்தலை இப்பகுதி குறிப்பிடுகிறது. தாராளமாய்ப் பொருட்களைத் தானம் செய்வோருக்கு வேதம் **ஆன்மீக** ஆசிகளை வாக்களிக்கிறது. கீழ்வரும் வசனப் பகுதிகளைக் கவனியுங்கள்: நீதி 11:24-26, "உதார குணமுள்ள **ஆன்மா** செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும்." 2 கொரி 9:1, 8-10, "விதைக்கிறவனுக்கு விதையையும், சாப்பிடுவதற்கு ஆகாரத்தையும் அளிக்கிறவர் உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகப்பண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை பெருகச் செய்வார்." அப் 4:32,33, "ஒருவனாகிலும் தனக்குள்ளவைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை; எல்லாம் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சி கொடுத்தார்கள்; அவர்களெல்லார் மேலும் பூரண **கிருபை** உண்டாயிருந்தது." கலா 6:8-10, "தன் ஊனியல்பிற்கென்று விதைக்கிறவன் ஊனியல்பினால் அழிவை அறுப்பான்; ஆவிக்குரிய வாழ்வுக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே **நித்திய ஜீவனை** அறுப்பான். நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் வாய்ப்பின்படி, யாவருக்கும், குறிப்பாக விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்ய முன்வருவோம்."

சுயநலமின்றி தேவ ஊழியருக்கும் மக்களுக்கும் நமது பொருட்களைப் பகிர்ந்தளித்தல் நமது ஆன்மா நிணங்கொள்ளவும், நீதி பெருகவும், கிருபையும் வல்லமையும் நிறையவும், நித்திய வாழ்வின் திளைப்பு கூடவும் நடத்துகிறதென்பதை மேற்கூறிய வசனங்கள் தெளிவாக்குகின்றன. இந் நிலையில் பின்மாற்றம் கனவிலும் தோன்றுமோ?

"செல்வத்தின் மயக்கம்" மனிதனைப் பின்னிழுக்கிறது (மத் 13:22). "பண ஆசை" மனிதரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிறது (1 தீமோ 6:9). செல்வந்தருக்கோர் எச்சரிக்கை: "நல்லது செய்யவும் நற்செயல்களில் செல்வந்தர்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுண முள்ளவர்களுமாயிருக்கவும்" வேண்டும் (1 தீமோ 6:17-19). தேமா என்பவன் உலகத்தை நேசித்து ஊழியத்தை விட்டான் (2 தீமோ 4:10). பணக்காரர் தாராளமாய்த் தங்கள் பணத்தை அள்ளி வீசினாலன்றி பரலோகத்தில் நுழைவதோ, கிறிஸ்தவ வாழ்வில் வளர்வதோ, ஊசியின் துவாரத்தில் ஒட்டகம் நுழைந்தாற்போல்தான்!

4. அசதியல்ல, கவனம்.

வச 11,12, "நீங்கள் அசதியாயிராமல், வாக்குத்தத்தமான ஆசீர்வாதங் களை விசுவாசத்தினாலும் நீடிய பொறுமையினாலும் சுதந்தரித்துக்கொள்ளு கிறவர்களைப் பின்பற்றுகிறவர்களாயிருந்து, உங்களுக்கு நம்பிக்கையின் பூரண நிச்சயமுண்டாகும்படி நீங்கள் யாவரும் முடிவு வரை அப்படியே கவனத்தைக் காண்பிக்க வேண்டுமென்று ஆசையாயிருக்கிறோம்."

போனால் போகட்டும் போடா என்று வாழ்பவன் கிறிஸ்தவனாயிருக்க முடியாது. கிறிஸ்தவ வாழ்வு ஒரு பந்தயம், போராட்டம், யுத்தம். கவனமாயிராவிடில் கரையேற முடியாது. வசனம் 11இலிருந்து அத்தியாயம் இறுதி வரை கவனத்தைக் குறித்துக் குறைந்தது மூன்று படிப்பினை களைக் காணலாம். கவனமாயிருத்தல் என்பதென்ன?

(அ) "நம்பிக்கையின் பூரண நிச்சயம்" (வச 12). "மரணமானாலும், வாழ்வானாலும், தேவ தூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ் காரியங்களானாலும், வருங்காரியங்களா னாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்த படைப்பானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று" நமக்கு நிச்சயமிருக்கவேண்டும் (ரோ 8:38,39). இது தேவன் மீதுள்ள நம்பிக்கை; நம்மீதுள்ள நம்பிக்கையல்ல. தொலைத்துவிடுவதற்காகவா தேவன் நம்மைத் தெரிந்தெடுத்தார்? "அக்கரைக்குப் போவோம் வாருங்கள்" என்று அவர் சொல்லும் போது நாம் இடையில் அமிழ்ந்துபோகாமல் அக்கரை சேருவதே அவர் சித்தம் என்றறிய வேண்டும். நாம் இயேசுவோடு நித்திய இணைப்பினால் சேர்க்கப்பட்டிருக்கிறோம்; அதை எதுவும் துண்டிக்க முடியாது என்று மனதில்

நிச்சயம் கொண்டிருக்க வேண்டும். பவுலோடு சேர்ந்து, "நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னார் என்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறாரென்று நிச்சயித்துமிருக்கிறேன்" என அறிக்கையிடுவோம் (2 தீமோ 1:12). நம் வாழ்வின் குற்றங்குறைகள் நம்மை சோர்புறவோ நம்பிக்கை இழக்கவோ செய்யக்கூடாது. "உங்களில் நல்ல செயலைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள் வரை முடிய நடத்திவருவாரென்று நம்பி" இருக்கவேண்டும் (பிலி 1:5).

(ஆ) அடுத்து, கவனம் என்பது விசுவாசமும் பொறுமையும் நிறைந்திருந்த நமது முன்னோடிகளைப் பார்த்து அவர்களைப்போல் நடத்தலாகும் (வச 12). எடுத்துக்காட்டாக, ஆபிரகாம் "பொறுமையாய்க் காத்திருந்து, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்" (வச 15). எபிரெயர் 11இன் அதிகாரம் போன்ற சாட்சிகளும் எடுத்துக்காட்டு. ஓட்டத்தை வெற்றியோடு முடிக்க உற்சாகமூட்டும் சூழலை உருவாக்குபவர்கள் இவர்கள். மட்டுமல்ல, தேவன் நம்மீது நியமித்துள்ள உத்தம தலைவர்களிடமிருந்தும் நாம் கற்றுக்கொள்ள வேண்டும். "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்" (13:7). மிஷனரிச் சரிதைகளையும் பழங்காலப் பரிசுத்தவான்களின் வாழ்க்கைகளையும் ஆய்ந்து கற்கவேண்டும். இன்று என்னவோ புதிய அசைவாட்டம், புதிய காரியம் என்றெல்லாம் பேசுகிறோம். அவையெல்லாம் சில பழம் பரிசுத்தவான்களின் விசுவாசத்திற்குமுன் கால் தூசி பெறாது. விசுவாசக் கருத்தரங்குகள் எத்தனையோ நடத்திவிட்டோம், ஆனால் ஜார்ஜ் முல்லருக்கொப்பான விசுவாச வீரர்களை எழுப்பியுள்ளோமா?

(இ) தேவப் பிரசன்னத்தில் அடைக்கலம் கொள்ளுதல் கவனமாயிருத்தலின் இன்னொரு அம்சமாகும் (வச 18-20). அவரில் நமக்கு நிறைந்த ஆறுதலுண்டு." அவரே நமது "ஆத்தும நங்கூரம்." அவரது சமூகத்தில் "நிச்சயமும் திட நம்பிக்கையுமுண்டு." இயேசு நமக்காகவே தேவ சமூகத்தில் இருக்கிறார். நமக்காகவே பரம பிதாவின் முன் பிரதான ஆசாரியராய் இருக்கிறார். சத்துரு துரத்தும்போது பலத்த துருகமாகிய கர்த்தருடைய நாமத்திற்குள் ஓடி அடைக்கலம் கொள்ளுங்கள் (நீதி 18:10). கிறிஸ்துவுக்குள் ஒளிந்துகொண்ட உங்களை அவன் தொடுவதெப்படி? தேவன் நமக்கு அடைக்கலமும் அரணுமானவர். உன்னதமானவரின் "மறைவில்" தங்கி சர்வ வல்லவருடைய "நிழலில்" வாழ்ந்தால் வேடன் கையில் அகப்படமாட்டோம் (சங் 91:1-3).

பின்மாற்றம் ஆபத்தானது. தமது பிள்ளை யாரும் பின்மாற்றமடைவது தேவனது சித்தமேயல்ல. எனவே அதை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். நாம் பின்மாற்றமடையாதபடி தேவன் போதுமான ஏதுக்களையும், தெளிவான நெறிமுறைகளையும் தந்திருக்கிறார். கிறிஸ்து நமது கிறிஸ்தவ வாழ்வின் அல்பா மட்டுமல்லவே, ஒமெகாவுமாயிருக்கிறாரே! கைதட்டி ஆர்ப்பரிப்போம்!

மெல்கிசேதேக்கும் கிறிஸ்துவும்

எபிரெயர் புத்தகத்தில் இந்த நடு அத்தியாயம், மெல்கிசேதேக்கு என்ற விநோத மனிதனைக் குறித்துப் பேசுவதால்தானோ என்னவோ, எபிரெயர் நிருபம் என்றதுமே கிறிஸ்தவர் பலர் இப்புத்தகம் புரியாப் புதிரென தீர்த்துக் கட்டிவிடுகின்றனர். பலரும் இந்நிருபத்தை ஆய்ந்து படிக்க முயற்சியும் எடுப்பதில்லை. ஆனால், ஒவ்வொரு அத்தியாயத்தையும் பொறுமையாய்த் தியானித்தால், திறந்த வானத்தின் ஆசிகளை அனுபவிக்கலாம். இது ***"திறந்த வானத்தின்"*** புத்தகம்! கிறிஸ்து *"வானங்களின்* வழியாய்ப்" பரலோகம் போனார் (4:14); அவர் *"வானங்களிலும்* உயர்ந்தவரானார்" (7:26).

இங்கு மெல்கிசேதேக்குக்கும் கிறிஸ்துவுக்குமிடையே குறைந்தது பத்து ஒப்புமைகளைக் காணலாம்.

1. மெல்கிசேதேக்கு, "நீதியின் இராஜா" (வச 2). கிறிஸ்து, "நீதியின் கிளை" என்றும் "நீதியாயிருக்கிற கர்த்தர்" என்றும் அழைக்கப்படுகிறார் (எரே 33:15,16).

2. மெல்கி, "சமாதானத்தின் இராஜா" (வச 2). "இதோ, உன் இராஜா உன்னிடத்தில் வருகிறார்... தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேல்... ஏறி

வருகிறவருமாயிருக்கிறார்'' என்று கிறிஸ்துவைக் குறித்துச் சொல்லப் பட்டது (சக 9:9). சமாதானத்தின் அருமையான நிழலாட்டம்!

3. மெல்கி, "தந்தையும் தாயும் இல்லாதவன்" (வச 3). கிறிஸ்து உடற் கூற்றின்படி அவரது தந்தையின் வித்தினால் பிறந்தவரல்ல; அவர் பரிசுத்த ஆவியின் வல்லமையினால் உத்தரித்த "தேவ குமாரன்" (லூக் 1:35).

4. மெல்கி, "வம்ச வரலாறு இல்லாதவன்" (வச 3). அதாவது லேவி கோத்திரம் அல்லது தெரிந்த வேறு வம்ச வரிசையில் வராதவன் (வச 5,6). அப்படியே கிறிஸ்துவும் ஆசாரியக் கோத்திரமாகிய லேவி வம்சத்தில் பிறவாதவராயிருந்தும் பிரதான ஆசாரியரானார் (வச 13-15).

5. மெல்கி, "நாட்களின் துவக்கமும் வாழ்வின் முடிவுமுடையவனா யிராதவன்" (வச 3). கிறிஸ்து தேவனோடு ஆதியிலிருந்து எப்பொழுதுமே இருந்தவர். அவருக்கு முடிவில்லை (யோ 1:1,2).

6. மெல்கி, "பெரியவன்" (வச 4). முற்பிதாவாகிய ஆபிரகாமும் இவனுக்குத் தசமபாகம் செலுத்தினான். இயேசுவைக் குறித்து தேவ தூதன் மரியாளிடத்தில், "அவர் பெரியவராயிருப்பார்" என்றான் (லூக் 1:32).

7. மெல்கி, ஆபிரகாமுக்கு "அப்பமும் திராட்சரசமும்" கொடுத்தான் (ஆதி 14:18). கிறிஸ்து தமது சதை மற்றும் இரத்தத்தின் அடையாளமாக அப்பத்தையும் திராட்சரசத்தையும் சீடருக்குக் கொடுத்தார் (லூக் 22:19,20).

8. மெல்கி, "உன்னதமான தேவனுடைய ஆசாரியன்" (ஆதி 14:18). கிறிஸ்து நமக்கு நித்திய பிரதான ஆசாரியர் (எபி 6:20).

9. மெல்கி, தேவனை ஆபிரகாமின் கையில் எதிரிகளை ஒப்புக்கொடுத்த உன்னதமானவரென்று ஆராதித்தான் (ஆதி 14:20). ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சத்துருக்களைப் பாதபடியாக்கிப்போடும்வரை பிதாவின் வலது பக்கத்தில் இருக்கிறார் (சங் 110:1-4).

10. மெல்கி, தேவனை "வானத்தையும் பூமியையும் உடையவர்" என்று ஆராதித்தான் (ஆதி 14:19). "சகலமும் அவரைக் (கிறிஸ்துவைக்) கொண்டும் அவருக்கென்றும் படைக்கப்பட்டது" (கொலோ 1:16).

ஆபிரகாமின் சரித்திரத்தில் ஏன் மெல்கிசேதேக்கு திடீரென வருகிறான் எனக் கேட்கலாம் (ஆதி 14). பழைய ஏற்பாட்டில் மெல்கிசேதேக்கு

இல்லாவிட்டால் கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியத்திற்கு இவ்வளவு பொருத்தமான வேறு நிழல் கிடையாது. பழைய ஏற்பாட்டில் தேவையற்றது என்று ஒன்றும் கிடையாது. பழைய ஏற்பாட்டில் புதிய ஏற்பாடு மறைந்துள்ளது; புதிய ஏற்பாட்டில் பழைய ஏற்பாடு மலர்ந்துள்ளது. தேவன் முக்காலங்களையும் அறிந்தவரானபடியால் அவரது திட்டங்கள் தீர்க்கமானவை. அவர் முதலிலிருந்தே முடிவை அறிந்தவர்.

மெல்கிசேதேக்கு விநோத மனிதன்தான். மின்னலாய்த் தோன்றி மின்னலாய் மறைகிறான்! நிழலாட்டமாய்ப் பொருள் தந்த கிறிஸ்துவைப் பற்றிய தீர்க்கதரிசனத்திலும் (சங் 110), அவனது நிழலின் நிறைவேறுதலாகிய கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியம் விளக்கப்படும் எபிரெயர் நிருபத்திலுமல்லாமல், அவனைக் குறித்த வேறு விளக்கங்கள் இல்லை. நமக்குத் தேவையில்லை என்பதினாலோ அல்லது நமக்குப் புரியாது என்பதினாலோ அவனைக் குறித்து தேவன் அதிகமாய் வெளிப்படுத்தவில்லை. "இந்த மெல்கிசேதேக்கைப் பற்றி விரிவாய்ப் பேசலாம்... அதை விளங்க வைப்பது கடினமாயிருக்கும்." இந்த வசனம், இந்த நிருபத்தைப் பெறுகிறவர்களை, "நீங்கள் கேட்கிறதில் மந்தமுள்ளவர்கள்" எனக் குறிப்பிடுகிறது. இந்நிருபம் யாருக்கு எழுதப்பட்டது என்ற குறிப்பில்லை. இது கிறிஸ்தவர்களாகிய நமக்காக எழுதப்பட்ட பொதுவான நிருபம். நம்மில் தேர்ந்தவர்களும், அறிவிலும் அனுபவத்திலும் குறைந்தவர்களே (1 கொரி 13:9). நமது குருவி மூளையால் யாவற்றையும் புரிந்துகொள்ளுதல் கடினம். மட்டுமல்ல, வேத வாக்கியங்கள் "எல்லாம்" பயனுள்ளவைகளாயிருக்கின்றன (2 தீமோ 3:16). தேவன் தமது ஞானத்தினால் நமக்குப் பயனற்ற எதுவும் வேதத்தில் இடம்பெறாமல் செய்தார். "மறைவானவைகள், நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியவைகள்; வெளிப்படுத்தப்பட்டவைகளோ, இந்தத் திருச்சட்டத்தின் வார்த்தைகளின்படியெல்லாம் செய்யும்படி, நமக்கும் நம்முடைய பிள்ளைகளுக்கும் என்றென்றைக்கும் உரியவைகள்" (உபா 29:29). வேதத்தோடு கூட்டப்பட்ட எதைக் குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள்!

நிறைவேறுதல் வந்தபின், நிழலைத் தோண்டித் துருவத் தேவையில்லை. கிறிஸ்து வந்துவிட்டார். அவரே பொருள் அல்லது நிறைவேறுதல். இனி நிழலைக் குறித்து ஆராய்ச்சி ஏன்?

மெல்கிசேதேக்கு ஆபிரகாமை ஆசீர்வதித்தான்! (ஆதி 14:19; எபி 7:1). அதற்கு ஒப்புமையாக கிறிஸ்துவாகிய பிரதான ஆசாரியர் நமக்கருளும் மூன்று ஆசிகளை இவ்வத்தியாயம் எடுத்துரைக்கிறது.

மெல்கிசேதேக்கு நீதியின் இராஜா, சமாதானத்தின் இராஜா (வச 2).

கிறிஸ்துவே நமக்கு நீதியானார் (1 கொரி 1:30). அவரது கிருபையால் நாம் முற்றிலும் நீதிமான்களாக்கப்பட்டு தேவனுக்கு முன்பாக நீதிமான்கள் என்னப்பட்டோம். இல்லையேல் பரிசுத்தமே உருவான தேவனுக்கு முன்பாக நாம் நிற்பதெப்படி? நமது சுயநீதியெல்லாம் அவருக்குமுன் அழுக்கான கந்தையாமே. பாவத்தில் நாறிக்கிடந்த நம்மேல் கிறிஸ்துவின் நீதியாகிய சால்வை தரிக்கப்பட்டதால் அவரில் தஞ்சமடைந்தோம். கிறிஸ்துவின் நீதி நமதானதால் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டோம். நமக்கு ஈவாக அருளப்பட்டு நமக்கே சொந்தமான இந்நீதியின் ஒத்தாசையால் நாம் நடைமுறையில் நீதிமான்களாய் வாழவேண்டும். "நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்" (வெளி 22:11).

கிறிஸ்துவையன்றி நமக்குச் சமாதானம் ஏது? அவரே நம்முடைய சமாதானக் காரணர் (எபே 2:14). நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருந்தோம். நியாயப்பிரமாணம் நமக்கு விரோதமாயிருந்தது. அதினாலும் நடுப்புச்சுவர் தடுத்துக்கொண்டே போனது. கிறிஸ்துவோ நடுவராய் தமது சொந்த உடலாகிய திரையைக் கிழித்து நடுப்புச்சுவரைத் தகர்த்தெறிந்தார். கிறிஸ்துவின் இரத்தத்தினால் தேவனோடு ஒப்புரவானோம். தேவ குமாரனை நமது இரட்சகராகவும் பதிலாளராகவும் ஏற்றுக்கொண்டதால் தேவனோடு சமாதானம் பெற்றோம். தேவனோடு சமாதானமானதால் எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் நமது இருதயங்களையும் சிந்தைகளையும் நிரப்பியிருக்கிறது. இனி நம்மைச் சூழ என்ன நடந்தால் என்ன? நமது சமாதானம் நித்தியமானது. அதை யாரும் கலைக்கவோ கைப்பற்றவோ முடியாது. அது இயேசுவின் சமாதானமே!

மெல்கிசேதேக்கு நீதியின், சமாதானத்தின் "இராஜா." கிறிஸ்து நமது இராஜா மட்டுமல்ல; இராஜாதி இராஜா. அவரது ஆளுகை நமக்கு நீதியும் சமாதானமுமானது. "இறையரசு... நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் மகிழ்ச்சியுமாயிருக்கிறது" (ரோ 14:17). நீதியும் சமாதானமும் பிறப்பிப்பது மகிழ்ச்சி. நமக்கே உரித்தான இந்த நிம்மதியை அழிக்கவல்ல சக்தி ஒன்றுமில்லை. சாத்தான் சமாதானத்தைச் சிதைத்து மகிழ்ச்சியைக் கொல்ல முயற்சிப்பான். அவன் கொடுப்பதெல்லாம் காலைப்பனி போன்றது. உலகத்திலிருப்பவனைக் காட்டிலும் நம்மிலிருப்பவர் பெரியவர். கிறிஸ்து படகிலிருக்கும்போது புயலைப்பற்றிப் பயமேன்?

கிறிஸ்துவால் நாம் நீதிமான்களென அறிவிக்கப்பட்டோம். நம்மைக் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? நாம் கிறிஸ்துவினால் தேவ சமாதானம் பெற்றோம். அதின் ஆழத்தை அறிபவன் யார்? கிறிஸ்துவின் மகிழ்ச்சியைச் சுதந்தரித்துக்கொண்டோம். அதை ரத்து செய்பவன் யார்? கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய ஊழியத்தினால் நாம் பெற்ற வாழ்வுதான் என்னே!

2. அழியா வாழ்வின் வல்லமை

வச 15,16,17, "மெல்கிசேதேக்குக்கு ஒப்பாய் வேறொரு ஆசாரியர் எழும்புகிறார்... அவர் மனித இயல்புக்கேற்ற கட்டளையாகிய நியாயப்பிரமாணத்தின்படியல்ல... அழியாத வாழ்வின் வல்லமையால் ஆசாரியரானார்."

அழியாத, நித்திய, முடிவற்ற வாழ்வு! பிதா, குமாரன், பரிசுத்த ஆவி இவர்கள் மூவர் என விசுவாசிக்கிறோம். பிதா குமாரனல்ல, குமாரன் பிதாவல்ல. ஆனால், தீர்க்கதரிசனத்தில் கிறிஸ்து "நித்திய பிதா" என்றழைக்கப்படுகிறார் (ஏசா 9:6). இது அவர் நம்மேல் கொண்டுள்ள முடிவற்ற பாசத்தையும் பரிவையும் உணர்த்துகிறது. பழைய ஏற்பாட்டில், தகப்பன் குடும்பத்திற்கு ஆசாரியன் போன்றவன். கிறிஸ்து நமது மீட்பிற்காய் கிரயம் செலுத்தினார். தமது இரத்தத்தினால் நம்மைச் சுத்திகரிக்கிறார். நமக்காய்ப் பரிந்து பேசுகிறார். தமது பிரசன்னத்தினால் நம்மைப் பாதுகாக்கிறார். நம்மேல் அவர் கொண்டுள்ள கரிசனை நித்தியமானது. புதிய வானம் புதிய பூமியில் நாம் அவரோடு என்றென்றுமாய் இணைக்கப்படுவோம்.

மேலும், கிறிஸ்துவை நாம் விசுவாசித்ததால் நமக்கே சொந்தமான நித்திய வாழ்வு அழிக்கப்பட முடியாதது. "நான் அவைகளுக்கு நித்திய வாழ்வைக் கொடுக்கிறேன்; அவைகள் ஒருபோதும் கெட்டுப்போவதில்லை. ஒருவனும் அவைகளை என் கையிலிருந்து பறித்துக்கொள்வதுமில்லை. அவைகளை எனக்குத் தந்த என் பிதா எல்லாரிலும் பெரியவராயிருக்கிறார்; அவைகளை என் பிதாவின் கையிலிருந்து பறித்துக்கொள்ள ஒருவனாலும் கூடாது" என்றார் இயேசு (யோ 10:28,29). இதில் அழுத்திக் கூறப்படுவது என்ன? முதலாவதாக ஒருவனும் அவைகளை "என் கையிலிருந்து" பறித்துக்கொள்ள முடியாது என்கிறார். அடுத்து, அவைகளை "என் பிதாவின் கையிலிருந்து" பறித்துக்கொள்ள ஒருவனாகிலும் கூடாது என்கிறார். எத்தனை உறுதியான பாதுகாவல்! சாத்தானின் தீவிர சவால் இந்த உறுதியின் மேலேயே. நமது அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டு, கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்தின் மேலுள்ள விசுவாசத்தில் அசையாது நிற்போமாக. இவ்வுலக ஆசாரியரைப் போல நமது பிரதான ஆசாரியர் பலவீனரல்லவே! எல்லா வல்லமையும் அதிகாரமும் அவருடையது.

இந்த நித்தியமான முடிவற்ற வாழ்வு பாவத்திலிருந்து கிடைக்கும் மீட்பினால் வருவது. "முந்தின கட்டளை பலமற்றதும் பயனற்றதுமாயிருந்த தால் மாற்றப்பட்டது. நியாயப்பிரமாணமானது ஒன்றையும் பூரணப்படுத்த வில்லை, அதிக நன்மையான நம்பிக்கையை வருவிப்பதோ பூரணப் படுத்துகிறது; அந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேருகிறோம்... இயேசுவானவர்... அவ்வளவு சிறப்பான உடன்படிக்கைக்குக் காப்புறுதி அளிப்பவரானார்" (வச 18-22). முந்தின கட்டளை மரண ஆக்கினை, பிந்தின உடன்பாடோ வாழ்வு. "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலுண்டான நித்திய வாழ்வு" (ரோ 6:23). இயேசுவோடு இணைதலின் பலன், "பரிசுத்தம்," முடிவோ "நித்திய வாழ்வு" (ரோ 6:22). நமது பாவ வாழ்விற்குப் பிராயச்சித்தம் செலுத்தின நமது பிரதான ஆசாரியர் என்றென்றுமாய் வாழ்வது போல நாமும் வாழ்வோம்.

3. இடைவிடா மன்றாட்டு

வச 24,25, "இவரோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறபடியினாலே, மாறிப்போகாத ஆசாரியத்துவமுள்ளவராயிருக்கிறார். மேலும், தமது மூலமாய் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும் படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்."

கிறிஸ்து தமது பூவாழ்வில் தமது சீடருக்காகவும் அவர்களது செய்தியை விசுவாசித்து தம்மீது நம்பிக்கை வைக்கப்போகிறவர்களுக்காகவும் ஜெபித் தார். அவர் தமது குற்றமற்ற இரத்தத்தினால் பரிசுத்த தேவனின் சகல கோரிக்கைகளையும் திருப்தி செய்தபின், தமது மன்றாட்டு ஊழியத்தை தேவனின் வலப்பக்கத்திலிருந்து நிறைவேற்றுகிறார். அவரது மன்றாட்டு தேவ சமுகத்தில் எப்பொழுதுமே ஏற்றுக்கொள்ளப்படப் பிரியமானதாயிருக் கிறது. அவரது விண்ணப்பங்களெல்லாமே நம்மைப் பற்றியதுதான்! என்னே சிலாக்கியம்! குமாரனுக்குப் பிதா மறுப்புச் சொல்வதேயில்லை. "நீர் எப் பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர்" என்றார் இயேசு (யோ 11:42).

கிறிஸ்துவின் பிரதான ஆசாரிய மன்றாட்டு நம்மைச் சோதனையை மேற்கொள்ள பலப்படுத்துகிறது. "நம்முடைய பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் உதவி தரும் கிருபையை அடையவும், தைரியமாய்க்

கிருபாசனத்தருகே சேருவோமாக" (எபி 4:15,16). சத்துரு துரத்தும்போது அவரிடம் ஓடிப்போவோம். சத்துரு மிரட்டும்போது அவரை நோக்கிப் பார்ப்போம். அந்தகாரச் சக்திகள் படையெடுத்து வரும்போது அவரது இரத்தக்கோட்டைக்குள் அடைக்கலம் புகுவோம். நமது பிரதான ஆசாரியர் நமது உருவம் இன்னதென்று அறிவார்; நாம் மண்ணென்று நினைவில் வைத்திருக்கிறார் (சங் 103:14). நமக்காக அவர் யாவையும் செய்து முடிப்பார். ஆனால் பிதாவின் சமுகத்தில் கிறிஸ்து ஏறெடுக்கும் நிலையான மன்றாட்டு ஊழியத்தை நம்பிச் சார்ந்திருக்க நாம் கற்றுக்கொள்ளவேண்டும்.

நாம் விழுவதும், பாவம் செய்வதும் தேவ சித்தமல்ல. ஆனால் "நாம் எல்லாரும் அநேக காரியங்களில் தவறுகிறோம்" என்பது மாறாத உண்மை (யாக் 3:2). "நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது" (1 யோ 1:8). நாம் பாவம் செய்வதை தேவன் விரும்புவதில்லை. அதே வேளையில் நாம் தவறிவிடும்போது நம்மைத் தள்ளிவிடுவதுமில்லை. "ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதா வினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார்" (1 யோ 2:1). இயேசு கிறிஸ்து வின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும். சாமதமான அறிக்கை பலவிதமான சிக்கலுக்குள் நம்மைக் கொண்டு போகும். எந்த விநாடி எந்தப் பாவத்தைக் குறித்து உணர்வடைகிறோமோ அதே விநாடி நமது பிரதான ஆசாரியரும் பரிந்து பேசுகிறவருமானவரது அடியில் விழுந்துவிடவேண்டும். நம்மைப் பாவ உணர்வுக்குள்ளும் பாவ அறிக்கைகளுக்குள்ளும் ஆவியானவர் நடத்துவார். ஆனால் நமக்கு தண்டனைத் தீர்ப்பில்லை.

விசுவாசிகள் பலர் பொல்லாங்கனின் தண்டனைத் தீர்ப்புணர்வுக் குள்ளேயே வாழ்கின்றனர். தங்கள் பலவீனங்கள், தோல்விகளையே எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கின்றனர். தங்கள் இரட்சிப்பின் மகிழ்ச் சியை இழந்து இரட்சிப்பிற்கு முன்னிருந்ததைவிட மனமடிந்து வாழ்கின்றனர். வேதம் கூறுவது என்ன? "தேவன் தெரிந்துகொண்டவர்கள் மேல் குற்றஞ்சாட்டுகிறவன் யார்? தேவனே அவர்களை நீதிமான்களாக்குகிறவர். ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்; அவரே எழுந்துமிருக்கிறவர்; அவரே தேவனுடைய வலப்பக்கத்திலுமிருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே" (ரோ 8:33,34). இதைவிட தெளிவாய் தேவன் நம்மிடத்தில் பேச முடியுமோ? இதைவிட உறுதியான வாக்கை தம் வசனத்தில் அருள முடியுமோ? தேவன் தம் வார்த்தையில் உரைத்ததை விசுவாசித்து உரிமைபாராட்டத் தவறினால்— அந்தோ

பரிதாபம்—சத்துருவே நம்மை ஆட்டிப்படைக்கிறவன் ஆவான். அவன் நம்மிலும் அனுபவசாலி. அவன் நடுங்குவது "எழுதியிருக்கிறதே" என்ற ஒன்றுக்குத்தான்! அடுத்த முறை சோர்பினால் சிதையும்போதோ குற்றவுணர்வினால் கூனும்போதோ கீழேயல்ல—சுற்றிலுமல்ல—மேலே நோக்கிப்பாருங்கள்! சத்துரு பலவித சந்தேகங்களினால் வாதிப்பான். அவற்றிற்கு இடங்கொடாதிருங்கள். உங்களுக்காகவே உன்னதங்களில் வீற்றிருக்கிற பிரதான ஆசாரியரை நினைத்துக்கொள்ளுங்கள்; அணைத்துக் கொள்ளுங்கள்!

முடிவுரை

விசுவாசிகளின் தந்தையாகிய ஆபிரகாமை மெல்கிசேதேக்கு ஆசீர்வதித்தான். கிறிஸ்து தமது அழியாத (வச 17), மாறிப் போகாத (வச 24), வல்லமையுள்ள (வச 25), மாசில்லாத (வச 26), பூரணமான (வச 28) பிரதான ஆசாரிய ஊழியத்தினால் நம்மை ஆசீர்வதிக்கிறார். நித்திய தேவனைப் போற்றுவோம்!

எபிரெயர் அத்தியாயம் எட்டு

புது உடன்பாட்டின் ஆசிகள்

நமது பிரதான ஆசாரியர் இயேசு கிறிஸ்துவின் புதிய உடன்படிக்கையாகிய இந்நிருப மையக்கருத்தை எட்டாம் அத்தியாயம் விளக்குகிறது. அத்தியாயம் இப்படித் துவங்குகிறது: "மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருள் என்னவெனில்... பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு." இங்கே கிறிஸ்துவை மகத்துவராய் (வச 1), ஊழியராய் (வச 2), நடுவராய்ச் (வச 6) சந்திக்கிறோம். அவர் சிங்காசனத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறார்; புனிதத் தலத்தில் சிறப்பாய் ஊழியம் செய்கிறார்; புதிய அல்லது மேன்மையான உடன்படிக்கையை நிறுவியிருக்கிறார்.

இந்த அத்தியாயத்தில் பழைய மற்றும் புதிய உடன்படிக்கைகள் பல்வேறு விதங்களில் ஒப்பிடப்பட்டுள்ளன. பழைய உடன்படிக்கையில் பரிசுத்த தலம் பூலோகத்திலுள்ளது; ஆனால் மற்றதோ பரலோகத்திலுள்ளது (வச 1,2). பழையது ஓர் நகல் அல்லது நிழல் எனலாம்; ஆனால் புதியதில் மெய்ப்பொருள் அல்லது நிறைவேறுதலைக் காண்கிறோம் (வச 5). பழையது கட்டளைகள் நிரம்பியது; புதியதோ வாக்குகள் நிரம்பியது (வச 6). புதியதோடு ஒப்பிட்டால் பழையது பிழையும் பலவீனமும் பயனற்றதுமாயிருந்தது; பிந்தினதோ பிழையற்றதும் பூரணமானதுமாயிருக்கிறது (வச 7,8; 7:18,28). பழையது உருவழிந்து போனது; புதியதோ நித்தியமாக

நிலைநிறுத்தப்பட்டது (வச 13). பழைய ஏற்பாட்டின் கடைசிப் புத்தகம் "உடன்படிக்கையின் தூதனானவரது" வருகையை முன்னறிவிக்கிறது (மல் 3:1).

புது உடன்படிக்கையின் இரத்தினச் சுருக்கத்தை 10 முதல் 12ஆம் வசனங்களில் காணலாம். அது மனனம் செய்யவும் தகும். அதற்கொத்த தீர்க்கதரிசனச் செய்தி எரேமியா 31:31-34இல் உண்டு—

"என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன்; அவர்கள் என் மக்களாயிருப்பார்கள். அப்பொழுது சிறியவன் முதல் பெரியவன் வரை எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால், கர்த்தரை அறிந்துகொள் என்று ஒருவன் தன் அயலானுக்கும், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்கவேண்டுவதில்லை. ஏனெனில் நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங்களையும் அக்கிரமங்களையும் இனி நினையாமலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (வச 10-12).

இந்தப் புதிய உடன்படிக்கையின் நான்கு ஆசிகளைத் தியானிப்போம்.

1. நீதிமானாக்கப்படுதல்

"அவர்கள் பாவங்களை மன்னித்து இனி நினையாமலிருப்பேன்."

தேவன் நம்மைக் கிறிஸ்துவுக்குள், கிறிஸ்துவுக்காக மன்னிக்கிறார். பாவங்களை மன்னிக்க தேவனது மீட்பின் ஏது கிறிஸ்துவே. இயேசு திமிர்வாதக்காரனை மன்னித்துச் சுகப்படுத்தியதை நன்கறிவோம் (மாற் 2:1-11). அவர் அவனைப் பார்த்து, "மகனே, உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டன" என்றார். இந்த அதிகாரத்தைக் குறித்து வேதபாரகர் தங்களுக்குள் விவாதித்துக்கொண்டபோது இயேசு, "பூவுலகில் பாவங்களை மன்னிக்க மனுமகனுக்கு அதிகாரம் உண்டென்பதை நீங்கள் அறிய வேண்டும்" என்றார். உயிர்த்தெழுந்த கிறிஸ்து தம் சீடருக்கு வேத வாக்கியங்களை விளக்கியபோது மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல நாட்டினருக்கும் "அவருடைய நாமத்தினாலே" பிரசங்கிக்கப்படவேண்டும் என்றார். இயேசு மன்னிக்கிறார்! இயேசு இரட்சிக்கிறார்! இதுவே கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி (மத் 1:21). நீதிமானாகுதலில் மன்னிப்பு மட்டுமல்ல, பாவங்களை மறத்தலும் சேர்ந்தே வருகிறது.

சுத்திகரிக்கும் இயேசுவின் இரத்தத்தினாலே பாவ மன்னிப்பு வருகிறது. எனவேதான் இறுதி இரவு உணவில் கிறிஸ்து "இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது" என்றார் (மத் 26:28). யோவான் இப்படி எழுதுகிறான்: "அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1 யோ 1:7). இரத்தம் தெளிக்கப்பட்ட ஒரு மனிதனது கணக்கில் ஒரு பாவமும் இல்லை. எல்லாம் பூரணமாய்க் கழுவப்பட்டு சுத்திகரிக்கப்பட்டது. இது புது உடன்படிக்கைக்கே உரிய ஆசி. பழைய ஏற்பாட்டுப் பலிகளைக் குறித்து வாசிக்கையில், "காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்திசெய்யமாட்டாதே... இவரோ, பாவங்களுக்காக ஒரே பலியைச் செலுத்தி, என்றென்றைக்கும் தேவனுடைய வலதுபக்கத்தில் உட்கார்ந்து... பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே என்றென்றைக்கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" என்றிருக்கிறது (எபி 10:4,12,14).

ஒருமுறைகூட ஒரு பாவமும் செய்யாவிடில் எப்படியிருக்கும்! அந்நிலையைத்தான் நீதிமானாகும்போது எய்துகிறோம். "உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாயிருந்தாலும் உறைந்த பனிபோல் வெண்மையாகும்; அவை இரத்த நிறமாய்ச் சிவந்திருந்தாலும் பஞ்சைப்போல் வெண்மையாகும்" (ஏசா 1:18).

தேவனுடைய அன்பின் நீளம், அகலம், ஆழம், உயரம் இன்னதென்று புரிந்து புகழ்பாடவே அழைக்கப்பட்டிருக்கிறோம். இந்த நாற்பரிமாண அன்பு நமது பாவத்தை அவர் நீக்குவதில் அற்புதமாய் வெளிப்படுகிறது. (1) "என் பாவங்களையெல்லாம் உமது முதுகுக்குப் பின்னாக எறிந்துவிட்டீர்" (ஏசா 38:17). அவரது அன்பின் *நீளம்!* (2) "மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார்!" (சங் 103:12). அவரது அன்பின் *அகலம்!* (3) "நம்முடைய பாவங்களையெல்லாம் சமுத்திரத்தின் ஆழங்களில் போட்டுவிடுவார்" (மீகா 7:19). அவரது அன்பின் *ஆழம்!* (4) "உன் மீறுதல்களை மேகத்தைப் போலவும், உன் பாவங்களைக் கார்மேகத்தைப் போலவும் அகற்றிவிட்டேன்" (ஏசா 44:22). அவரது அன்பின் *உயரம்.*

2. பரிசுத்தமாக்கப்படுதல்

"என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் எழுதுவேன்."

இதன் விளக்கத்தை 2 கொரி 3:3,6இல் காணலாம்: "நீங்கள் எங்கள் ஊழியத்தினால் உண்டாகிய கிறிஸ்துவின் நிருபமாயிருக்கிறீர்களென்று வெளிப்படையாயிருக்கிறது; அது மையினாலல்ல, உயிருள்ள தேவனுடைய ஆவியினாலும்; கற்பலகைகளிலல்ல, இருதயங்களாகிய சதையான பலகைகளிலேயும் எழுதப்பட்டிருக்கிறது... புது உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்; அந்த உடன்படிக்கை எழுத்திற்குரியதாயிராமல் ஆவிக்குரியதாயிருக்கிறது; எழுத்து கொல்லுகிறது, ஆவியோ உயிர்ப்பிக்கிறது."

புது உடன்படிக்கையில் கிறிஸ்து நமது பழைய இதயத்தைப் பழுதுபாராமல் புதியதொரு இதயத்தை அளிக்கிறார். மாற்று இதயம், அத்துடன் மறுரூபம்! "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் உடலிலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்" (எசேக் 36:26,27). விளைவு? "எல்லா அசுத்தங்களிலிருந்தும்... எல்லா விக்கிரகங்களிலிருந்தும்" சுத்திகரிப்பு! (எசேக் 39:25,29). மறுபிறப்பில் இப்புது இதயம் ஈவாக அளிக்கப்படுகிறது. இயல்பான மனிதன் அல்லது மறுபிறப்படையாதவன் தேவனது கட்டளைகளை நூறு முறை வாசித்தாலும் தியானித்தாலும் அவன் தேவனைப் பிரியப்படுத்துவது சாத்தியமல்ல. பழைய இதயம் பயனற்றது. தேவனுக்குகந்த பரிசுத்தம் புது உடன்படிக்கையில் மட்டுமே சாத்தியமாகும்.

உள்ளான சுத்திகரிப்பும் பரிசுத்தமாகுதலும் நமது இதயத்திலும் மனதிலும் "நாட்டப்பட்ட" வசனத்தினாலே ஆகும். இயேசு, "ஆவியே உயிர்ப்பிக்கிறது, ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்றன" என்றார் (யோ 6:63). மேலும், "நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தைகளால் நீங்கள் ஏற்கனவே சுத்தமாயிருக்கிறீர்கள்" என்றார் (யோ 15:3). புது உடன்படிக்கையின் உயிர்ப்பிப்பினால் நாம் கடவுளது கட்டளைகளில் நடக்க வல்லமை பெறுகிறோம். அதுவே பரிசுத்தமாகுதல். "வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான்? உமது வசனத்தின்படி தன்னைக் காத்துக்கொள்ளுகிறதினால்தானே... நான் உமக்கு விரோதமாய்ப் பாவம் செய்யாதபடி, உமது வார்த்தையை என்னிதயத்தில் வைத்து வைத்தேன்" (சங் 119:9,11). சுத்திகரிப்பு மட்டுமல்ல, வருமுன் காப்பதும் சாத்தியமாகிறது! இதுவே "கிருபை."

புது உடன்படிக்கை என்றால் ஏதோ புதிய கட்டளைகளும் ஒழுங்கு முறைகளும் என்று எண்ணிவிடக்கூடாது. அது புது வாழ்வு. அதாவது திருவார்த்தையானது நம்மோடு ஒன்றித்துவிடுவதாகும். மாம்சமாய் உருவெடுத்த வார்த்தையாகிய கிறிஸ்து நம்மை நிரப்பி ஆட்கொள்ளுவதே அவ்வனுபவம். "நமக்குள் கிறிஸ்து!" "நானே வாசல்; என் வழியாய் ஒருவன் நுழைந்தால், அவன் இரட்சிக்கப்படுவான்; அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான்" (யோ 10:9) என்று இயேசு சொன்னபோது இக்கருத்தையே விளம்பினார். "உள்ளும் புறம்பும்!" முழுமை, பூரணம், நிறைவு! என்னே நிறைவான ஆசி!

3. ஊழியம் செய்தல்

எல்லாரும் என்னை அறிவார்கள்; ஆகையால் ஒருவன் தன் அயலானுக்குப் போதிக்க வேண்டியதில்லை."

மோசேக்கு முன்னர் குடும்ப ஆசாரியத்துவம் இருந்தது. நியாயப் பிரமாண யுகத்தில் கோத்திர ஆசாரியத்துவம் இருந்தது. புது உடன் படிக்கையில் நமக்குத் திருச்சபை ஆசாரியத்துவம் உண்டு—அதாவது கிறிஸ்துவுக்குட்பட்ட விசுவாசிகள் "அனைவருமே" ஆசாரியர்தான். "நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கின அவர்" (வெளி 1:6). கிறிஸ்து ஒரு வரே பிரதான ஆசாரியர் (எபி 3:1). "குருக்கள்" "சபையார்" என்ற வேறு பாடு புதிய ஏற்பாட்டிற்கு முற்றும் மாறுபாடு. தேவன் சிலரை முழுநேரப் பணிக்கு அழைக்கிறார் என்பது உண்மைதான். ஆனால் முழுநேரப் பணி செய்யாதோரைவிட இவர்கள் சுலபமாய்ச் சிங்காசனத்தருகே செல்லலாம் என்பதில்லை. ஒன்றான பிரதான ஆசாரியர் நம் யாவருக்கும் போதுமான நடுவராயிருக்கிறார். எனவே நம்மில் மிகுந்த தாலந்துடையவரும் தேறின வரும் இன்றுதான் மறுபடியும் பிறந்தவரும் தேவனுக்கு முன்பாக சரிசமம் தான். குருக்களுக்கு வித்தியாசமான உடைகள் போன்ற யாவும் ரோமன் கத்தோலிக்கரிடமிருந்து நாம் கற்றுக்கொண்டவை. அவற்றிற்கு வேத ஆதாரமில்லை. "சிறியவன் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும்" எல்லா விசுவாசிகளும் தேவனுக்கு முன் ராஜாக்களும் ஆசாரியருமாம்.

நேர்முகமாய்க் கடவுளிடம் செல்லவும் அவருடைய வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளவும் இன்று நாம் கிறிஸ்துவின் மூலம் பெற்றுள்ள சிலாக்கியம், பழைய உடன்படிக்கைக்கடியிலிருந்த அநேக தீர்க்கதரிசி களுக்கும் இராஜாக்களுக்கும் அன்றில்லை. இயேசுவின் நாமத்தின்

வல்லமையினாலே பிசாசுகள் ஓடியதைக் கண்டு எழுபது சீடர் குதூகல மாய்த் திரும்பியபோது, "இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே!... இவைகளை நீர் ஞானிகளுக்கு... மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தின படியால் உம்மைத் துதிக்கிறேன்... குமாரனும் குமாரன் அவரை எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதா இன்னாரென்று அறியான் என்றார். பின்பு தமது சீடரிடத்தில் திரும்பி, தனித்து அவர்களை நோக்கி: நீங்கள் காண்கிறவைகளைக் காணும் கண்கள் பாக்கியமுள்ளவைகள். அநேக தீர்க்கதரிசிகளும் ராஜாக்களும் நீங்கள் காண்கிறவைகளைக் காணவும், நீங்கள் கேட்கிறவைகளைக் கேட்கவும் விரும்பியும், காணாமலும் கேளாமலும் போனார்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக் 10:21-24). பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசி யோவான் ஸ்நானனைக் குறித்து அவன் எல்லாரிலும் பெரியவனென இயேசு சாட்சி பகர்ந்தார். மட்டுமல்ல, "தேவனுடைய ராஜ்யத்தில் சிறியவனாயிருக்கிறவன் அவனிலும் பெரிய வனாயிருக்கிறானென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றும் சொன் னார் (லூக் 7:28). பண்டிதர் சார்லஸ் ரைரி தனது ஆய்வு வேதாகமத்தில் பின்வரும் சிறப்பான விளக்கத்தை அளித்துள்ளார்: "இயேசு சிலுவையில் அறையப்பட்டு, உயிர்த்தெழுந்து, ஆவி பொழியப்பட்ட பின்னர் ஒவ்வொரு விசுவாசியும் பெற்றனுபவிக்கும் உன்னதப் பதவியோடு ஒப்பிடும்போது கிறிஸ்துவுக்கு முன்னான பழைய யுகத்தின் யோவான் ஸ்நானகனது மேன்மை மங்கிவிடுகிறது!" அல்லேலூயா என்று ஆர்ப்பரிப்போமா?

"ஒருவனும் தன் அயலானுக்குப் போதிக்க வேண்டியதில்லை, எல்லாரும் என்னை அறிவார்கள்" என்பதினால் நமக்கு இன்று போதகரோ பிற ஊழியரோ தேவையில்லை என்று பொருளா? இல்லை. கிறிஸ்துதாமே சபைக்கு அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் ஆகி யோரை அளித்துள்ளார் (எபே 4:11). ஆனால் பகுத்தறியத்தக்க "அபி ஷேகத்தை" ஒவ்வொரு விசுவாசியும் தேவனிடமிருந்து பெற்றுள்ளான்.

அப்போஸ்தலன் யோவான் இதைக் குறித்து இப்படி எழுதுகிறான்: "உங்களை வஞ்சிக்கிறவர்களைக் குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன். நீங்கள் அவரால் பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்க வேண்டுவதில்லை; அந்த அபிஷேகம் எல்லாவற்றையும் குறித்து உங்களுக்குப் போதிக்கிறது; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல" (1 யோ 2:26,27). ஆவியானவரின் துணையுடன் கிரமமாக வேதத்தைக் கற்றல் ஆன்மீகப் பகுத்தறிவை வளர்க் கிறது. புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் ஏதோவொரு குருவைக் கண்மூடித் தனமாய்ப் பின்பற்றுகிறவர்களாயிராமல் தங்கள் ஆண்டவரும் தலைவரு மான கிறிஸ்துவின் புத்தியுள்ள சீடராயிருப்பதவசியம்.

"நான் அவர்களுடைய தேவனாயிருப்பேன், அவர்கள் என் மக்களா யிருப்பார்கள்."

இன்று மகிமையாய் வாழ்கிறோம், நாளை மகிமைப்படுவோம். புது உடன்படிக்கையின் கீழ் இவையிரண்டும் வாழ்வின் இரு அம்சங்கள். 2 கொரி 3:14-18 இவ்வுண்மையைத் தெளியச் செய்கிறது—

"இந்நாள்வரை பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில் அந்த முக்காடு நீங்காமலிருக்கிறது; அது கிறிஸ்துவினாலே நீக்கப்படுகிறது. மோசேயின் ஆகமங்கள் வாசிக்கப்படும்போது, இந்நாள்வரை முக்காடு அவர்கள் இருதயத்தின்மேல் இருக்கிறது. அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்பும் போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம். கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையும் உண்டு. நாமெல் லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறது போலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாய லாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம்."

புது உடன்படிக்கையின் ஆசி பூரண விடுதலையாகும். இரட்சிப் பினால் இன்று பாவத்தின் தண்டனையிலிருந்தும் வல்லமையிலிருந்தும், நாளை பாவத்தின் பிரசன்னத்திலிருந்தும் விடுதலை பெறுகிறோம். நாம் கலாத்தியரைப்போல பழைய உடன்படிக்கைக்குச் சென்று அடிமைத்தனத் தின் நுகத்தில் மறுபடி சிக்கிவிடாதபடி கிறிஸ்துவினால் நமதாகிய இந்தச் சுதந்தரத்தில் நிலைத்திருப்போம் (கலா 5:1). ஏனெனில் "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே" (ரோ 8:1,2). ஆக்கினைத் தீர்ப்பு அடியோடு அகற்றப்பட்டது. நாம் தேவனுடையவர்கள், அவர் நமது தேவன்.

"அப்பா, பிதாவே" என்று கூப்பிடப்பண்ணுகிற ஆவியானவர் மூலமாக இன்று நாம் தேவனோடு நேரடி உறவுகொள்ளமுடியும் (ரோ 8:15-17). இவ்வுறவின் முடிவு நித்திய மகிமை. "பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெரிய சத்தத்தைக் கேட்டேன்; அது: இதோ, மனிதர்களிடத்திலே தேவனுடைய உறைவிடமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் குடியிருப்பார்; அவர்களும் அவருடைய மக்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடே இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்" (வெளி 21:3).

மகிமைப்படுதல் என்பதில் முற்றும் மறுரூபமாதலும் அடங்கியுள்ளது. "நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுவதினாலே பிதா வானவர் நமக்குப் பாராட்டின அன்பு எவ்வளவு பெரிதென்று பாருங்கள்.... பிரியமானவர்களே, இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோம். ஆகிலும் அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிற விதமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போமென்று அறிந் திருக்கிறோம்" (1 யோ 3:1,2).

முடிவுரை

புது உடன்படிக்கையின் நான்கு ஆசிகளும் ஜோடிகளாய்க் கொடுக்கப் பட்டுள்ளன. "என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களிலே அவைகளை எழுதுவேன்... நான் அவர்களுடைய தேவனாயிருப்பேன், அவர்கள் என் மக்களாயிருப் பார்கள்... எல்லாரும் என்னை அறிவார்கள், ஒருவன் தன் சகோதரனுக்கும் போதிக்க வேண்டியதில்லை... நான் அவர்கள் அநியாயங்களைக் கிருபை யாய் மன்னித்து... நினையாமலிருப்பேன்." "ஏற்பாடு" "சித்தம்" "தீர்மானம்" என்பவை "உடன்படிக்கை" என்ற பதத்திற்கு மாற்றுப் பதங்களாகும். "தேவனுடைய சித்தம்" குறித்தும் அவரது "தீர்மானம்" குறித்தும் ரோமர் 8:27-30 பேசுகிறது. அவரது தீர்மானம் என்ன? "எவர்களை முன்ன றிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார். எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்து மிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கி யுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப் படுத்தியுமிருக்கிறார்." நாம் தேவனது உடன்படிக்கையின் மக்களாயிருப் பதினால் நமக்கு "எல்லாம் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது!" நம் வாழ்வில் அவர் அனுமதிக்கும் யாவும் நம்மைக் குறித்துத் தம் திருச்சித்தத்தையோ அல்லது நம்முடன் அவர் செய்துள்ள உடன்படிக்கையையோ நிறை வேற்றவேயன்றி வேறல்ல! மகிமை!

எபிரெயர் அத்தியாயம் ஒன்பது

ஆசரிப்புக் கூடாரம்

வேதத்தில் ஏறத்தாழ ஐம்பது அத்தியாயங்கள் ஆசரிப்புக் கூடாரத்தைக் குறித்துப் பேசுகின்றன—யாத்திராகமத்தில் 13 அத்தியாயங்கள், லேவியராகமத்தில் 18, எண்ணாகமத்தில் 13, உபாகமத்தில் 2, எபிரெயரில் 4. அப்படியாயின், இப்படிப்பின் அவசியத்திற்கு வேறு விளக்கம் தேவையில்லை.

ஆசரிப்புக் கூடாரத்திற்கு உட்கருத்து நிறைந்த பல பெயர்கள் உண்டு. வெறுமனே "வாசஸ்தலம்" என்று சொல்லப்படும்போது அது தேவன் தம் மக்களுடன் **தங்கியிருத்தலைக்** குறிக்கும் (யாத் 39:33). "ஆசரிப்புக் கூடாரமாகிய வாசஸ்தலம்" எனப்படும்போது அது தேவன் தம் மக்களைச் சந்தித்தலைக் குறிக்கும் (யாத் 39:32). "சாட்சியின் கூடாரம்" எனப் பெயர் வழங்கியது, இரண்டு கற்பலகைகளாகிய நியாயப்பிரமாணம் அங்கே வைக்கப்பட்டதினாலேயாம். அது தேவன் அங்கிருந்து தம் மக்களிடம் பேசுதலைக் குறிக்கும்.

கூடாரம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது—வெளிப்பிராகாரம், பரிசுத்த தலம், மகா பரிசுத்த தலம். வெளிப்பிராகாரம் 150 அடி நீளமும் 75 அடி அகலமுமானது. பரிசுத்த தலமும் 30 அடி நீளமும் 15 அடி

அகலமுமானதொரு செவ்வகம். மகா பரிசுத்த தலம் பூரணத்தைக் குறிக்கும் சதுரமாக 15 அடி நீளமும் 15 அடி அகலமுமானது. நுழைவாயில் கிழக்கில் இருந்தது.

வெளிப்பிரகாரத்திற்கு ஏழரை அடி உயரமான வேலி உண்டு. இந்த திறந்த வெளியிலே வெண்கலப் பீடமும், தொட்டியும் இருந்தன. பரிசுத்த தலத்திற்குள் விளக்குத்தண்டு, சமுகத்தப்ப மேசை, தூபப் பீடம் ஆகியவை இருந்தன. மகா பரிசுத்த தலத்திற்குள் கிருபாசனத்தினால் மூடப்பட்ட உடன்படிக்கைப்பெட்டி இருந்தது.

வெளிப்பிராகாரத்தில் சூரிய ஒளியும், உட்பிரகாரத்தில் விளக்கொளியும், மகா பரிசுத்த தலத்திலோ காரிருளும் இருந்தன. ஒருவன் தன் ஐம்புலன் களைச் சார்ந்து நடவாமல் விசுவாசத்தினால் மட்டுமே நடக்கும் கிறிஸ்தவ அனுபவத்தின் சிகரத்தைக் குறிப்பது மகா பரிசுத்த தலம். வழி குறுகிக் கொண்டே, இருண்டுகொண்டே, நெருக்கமாகிக்கொண்டே போகும் போதும் நடக்கக் கற்றுக்கொள்ளுதலே முதிர்ச்சியாகும்.

இஸ்ரவேலருக்கு ஆசரிப்புக் கூடாரமென்பது நடமாடும் ஆலயம். இவர்கள் பயணம் பண்ணிக்கொண்டேயிருந்தபடியால் நிரந்தரமான தொழுகைக்கூடம் கட்டப்படவில்லை. தேவன் மோசேக்குக் கொடுத்த திட்டத்தின்படியே பெசலயேலும், மற்றப் பணியாட்களும் இவ்வேலையில் ஈடுபட்டனர். வேலை முடிந்தபோது தேவ மகிமை வாசஸ்தலத்தை நிரப்ப மேகமொன்று இறங்கிக் கூடாரத்தை மூடியது (யாத் 40:34).

கூடாரத்தைச் சூழப் பன்னிரண்டு கோத்திரங்களும் பாளயமிருப்பர். கிழக்கே செபுலோன், யூதா, இசக்கார்; மேற்கே பென்யமீன், எப்பிராயீம், மனாசே; வடக்கே ஆசேர், தாண், நப்தலி; தெற்கே சிமியோன், ரூபன், காத். ஒவ்வொரு கோத்திரத்திற்கும் தனிக்கொடி ஒன்றுண்டு (எண் 2:2). கிழக்குப் பகுதிக்கு முதல்வனான யூதாவின் கொடி பச்சை நிறமும் சிங்கச் சின்னமுமானது என்று பாரம்பரியம் கூறுகிறது. அப்படியே எப்பிராயீமின் கொடி மஞ்சள், சின்னம் காளை; தாணின் கொடி வெண்மையும் சிவப்புமானது, சின்னம் கழுகு; ரூபனின் கொடி சிவப்பு, சின்னம் மனிதத் தலை. இப்பாரம்பரிய விபரம் எசேக்கியேல், யோவான் ஆகியோரின் தரிசனங்களோடு அருமையாய் ஒத்துப்போகிறது (எசேக் 1, வெளி 4). உயர இருந்து நோக்கும்போது கூடாரமும் கோத்திரங்களின் பாளயங்களும் பரவசமளிக்கும் காட்சியாயிருந்திருக்க வேண்டும்!

...திய ஏற்பாட்டில் ஆசரிப்புக் கூடாரம் மூன்று காரியங்களுக்கு அடையாளமாகக் கூறப்பட்டுள்ளது. (அ) "ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமான" சபை (யாத் 25:8; எபே 2:16-22); (ஆ) "பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாகிய" விசுவாசி (1 கொரி 6:19; 2 கொரி 6:16); (இ) பரலோகத்தின் சாயல் (எபி 9:23,24).



1. வெண்கலப் பலிபீடம்
2. வெண்கலத் தொட்டி
3. குத்துவிளக்கும், சமுகத்தப்ப மேசையும், தூபபீடமும் இருந்த பரிசுத்த தலம்
4. திரைச் சீலை
5. உடன்படிக்கைப் பெட்டியும், கிருபாசனமும்

கூடாரம் ஒவ்வொரு நுட்பத்திலும் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறது. பிரதான ஆசாரியன், பணிமூட்டுகள், சடங்குகள், தொழுகை யாவற்றிற்கும் பொருள் விளக்கமுண்டு.

அ) **வெண்கலப் பலிபீடம்** (யாத் 27:1-8)

இது மிருகங்களைப் பலியிடுவதற்கானது. இதுவே கிறிஸ்து நமக்காக இரத்தம் சிந்துதலின் சாயல்.

எபி 9:12, "வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலேயல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினால் கிறிஸ்து ஒரே தரம் மகா பரிசுத்த தலத்திலே நுழைந்து, நித்திய மீட்பை உண்டு பண்ணினார்."

வச 26, "கிறிஸ்து தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசிக்காலத்தில் ஒரேதரம் வெளிப்பட்டார்."

வச 28அ, "கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டார்."

வெளிப்பிரகாரத்திற்குள் நுழைந்தவுடன் முதலாவது கண்ணில் படுவது இப்பலிபீடம்தான். ஆம், தேவ சந்நிதிக்குள் நாம் நுழைய அடிப்படையே சிந்தப்பட்ட கிறிஸ்துவின் இரத்தம்தானே. இரத்தம் அடித்தளம் போன்றது. அதற்குப் பின்னரே மற்ற ஆசிகள் தொடர்கின்றன. இயேசுவின் முதல் ஆசி பாவ மன்னிப்பேயன்றி வேறென்ன? (மத் 1:21). மீட்கப்பட்டோம்! நீதிமான்களாக்கப்பட்டோம்! மன்னிக்கப்பட்டோம்! கிறிஸ்துவே நமது பலி!

தொடர்ந்து நடந்தால் வெண்கலத் தொட்டிக்கருகில் வருகிறோம்.

ஆ) வெண்கலத் தொட்டி (யாத் 30:17-21)

இது பாதங்களில் நிற்கும் நீர்நிறை வெண்கலத்தொட்டி. ஆசாரியர் முக்கிய நாட்களில் தங்கள் கைகால்களைக் கழுவப் பயன்படுத்தப்பட்டது.

இது நமது பரிசுத்தமாகிய கிறிஸ்துவைக் குறிக்கிறது. கிறிஸ்து நமக்கு மீட்பு மட்டுமல்ல, பரிசுத்தமுமானார் (1 கொரி 1:30).

இது குளிக்கவோ உடல் முழுவதையும் கழுவவோ அல்ல; கை கால்கள் கழுவ மட்டுமே. இறுதி இராவிருந்தில் இதன் பிரதிபலிப்பைக் காண் கிறோமல்லவா? கிறிஸ்து சீடரின் கால்களைக் கழுவத் துவங்கி சீமோன் பேதுருவிடம் வந்தபோது அவன் தன் கால்கள் தன் ஆண்டவரால் கழுவப்பட மறுத்துவிட்டான். இயேசுவோ, "நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னி டத்தில் உனக்குப் பங்கில்லை" என்றார். உடனே சீமோன், "ஆண்டவரே, என் கால்களை மட்டுமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூடக் கழுவவேண்டும்!" என்றான். ஆனால் இயேசு, "முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும், மற்றபடி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்" என்றார் (யோ 13:3-10).

இரத்தத்தால் கழுவப்பட்ட தேவப் பிள்ளைகள் யாவரும் அவருக்குமுன் பரிசுத்தவான்களும் நீதிமான்களுமாயிருக்கின்றனர். தேவனோ, "நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" என்கிறார் (வெளி 22:11).

இ) **குத்துவிளக்கு** (யாத் 25:31-40)

குத்துவிளக்கு பசும்பொன்னாலானது. அதில் ஒரு தண்டும் தண்டின் ஒவ்வொரு பக்கத்திலும் மேல் நோக்கிப் படரும் மும்மூன்று கிளைகளும் உண்டு. சுத்த ஒலிவ எண்ணையால் இவ்விளக்கு எரிந்தது.

குத்துவிளக்கு கிறிஸ்துவையும் சபையையும் குறிக்கும். இயேசு, "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" என்றார் (யோ 8:12). அவர் தம் சீடரிடம், "நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்றார் (மத் 5:14). ஆசியாவின் ஏழு சபைகளையும் "ஏழு பொன் குத்துவிளக்குகள்" என்கிறார் அவர் (வெளி 1:20).

கிறிஸ்து நீதியின் சூரியன்; நாம் அவரது ஒளியைப் பிரதிபலிக்கும் சந்திரன். நாம் இருண்ட இவ்வுலகில் வாழ்கிறோம். இப்பொழுது இராக்காலம். கிறிஸ்து இப்போது இவ்வுலகிலில்லை. சபையே உலகிற்கு ஒளிவீசவேண்டும். தாம் எடுக்கப்படும் வேளையைக் குறித்து, "ஒருவனும் செயல்படமுடியாத இராக்காலம் வருகிறது" என்றார் இயேசு. நமது பொறுப்பையும் சிலாக்கியத்தையும் சிந்தித்துப் பார்ப்போம்!

ஈ) **சமுகத்தப்ப மேசை** (யாத் 25:23-30)

இம்மேசை சித்தீம் மரத்தால் செய்யப்பட்டு பொன்னால் மூடப்பட்டது. கோத்திரத்திற்கு ஒன்று வீதமாக இம்மேசையில் பன்னிரண்டு அப்பங்கள் வைக்கப்பட்டு அவை வாரந்தோறும் மாற்றப்படும்.

இது தேவன் தம் மக்களுக்கு அளிக்கும் ஆகாரத்தையும், பராமரிப்பையும் குறிக்கும். தினமும் சமுகத்தப்பங்கள் தேவனுக்குமுன் இருக்கவேண்டுமென்பது மோசே தேவனால் பெற்ற கட்டளை (யாத் 25:30). தேவன் **எப்பொழுதும்** தம் மக்களுடன் இருக்கிறார்; அவர்களது **ஒவ்வொரு** தேவையையும் குறித்து அக்கறையுள்ளவராயிருக்கிறார்.

ஓய்வுநாள் பள்ளியில் நாம் முதலாவது மனனம் செய்வது யோவான் 6:48, "ஜீவ அப்பம் நானே!" என்ற வசனம். கிறிஸ்து அப்பத்தைப் பிட்டு

தமது பன்னிரண்டு சீடருக்கும் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் தேவன் தம் மக்களைப் போஷிக்கிறவராகவும், தாங்குகிறவராகவும் விளக்குகிறார்.

உ) தூபப் பீடம் (யாத் 30:1-10)

தினமும் காலையும் மாலையும் இப்பீடத்தின் மீது சுகந்த வாசனை எரிக்கப்பட்டது. ஆண்டுக்கொருமுறை பீடத்தின் கொம்புகளில் இரத்தம் பூசப்படும்.

யாத்திராகமம் 30:6, இப்பீடம் பரிசுத்த தலத்தில் இருப்பதாகக் குறிப்பிட்டாலும் எபிரெய நிருப ஆக்கியோன் அது மகா பரிசுத்த தலத்தில் இருந்ததாகக் குறிப்பிடுகிறார் (எபி 9:3,4). அதின் காரணம் அவர் பீடத்திற்கும், மகா பரிசுத்த தலத்திற்கும், உடன்படிக்கைப்பெட்டிக்குமுள்ள நெருங்கிய உறவைச் சுட்டிக்காட்ட விழைவதே. பிராயச்சித்த நாளில் பிரதான ஆசாரியன் பாவ நிவாரண பலியின் இரத்தத்தோடு இப்பீடத்தி லிருந்து சுகந்த வாசனையையும் எடுத்துக்கொண்டு மகா பரிசுத்த தலத்திற்குள் செல்லுவான் (லேவி 16:12-14).

இந்தப் பீடம் நமது விண்ணப்பகரான கிறிஸ்துவையும், சகல பரிசுத்த வான்களின் விண்ணப்பங்களையும் குறிக்கிறது (எபி 7:25; வெளி 5:8; 8:3,4). "இயேசுவின் நாமத்தில்" நாம் ஏறெடுக்கும் ஜெபங்கள் யாவும் தேவனுக்கு முன்பாக சுகந்த வாசனையாயிருக்கும். அதாவது, கிறிஸ்து எப்படி விண்ணப்பித்திருப்பாரோ அப்படியே நாம் தேவ சித்தத்திற்கு இணைந்து ஜெபிக்கும்போது தேவன் பதில் தருவார்.

ஊ) உடன்படிக்கைப் பெட்டியும் கிருபாசனமும் (யாத் 25:10-22)

கூடாரத்தின் இறுதிப்பகுதியாகிய மகா பரிசுத்த தலத்திற்கு வந்து விட்டோம். கூடாரப் பொருட்களில் பிரதானமானது உடன்படிக்கைப் பெட்டி. அதின் மகா பரிசுத்தத்தினிமித்தமாக அது மூடி வைக்கப்படவேண்டிய தாயிருந்தது. தேவனது பரிசுத்தம் பயங்கரமானது. எனவே தேவன் தமது ஞானத்தின்படி தமது அன்பினால் "கிருபை" என்னும் ஆசனத்தைக் கொண்டு அதை மூடி வைத்தார். கிருபாசனத்தின் ஒவ்வொரு முனையிலும் ஒரு பொன் கேருபீன் தன் செட்டைகளை மூடியின் மையத்திற்கு நேராய் நீட்டியிருக்கும். கேருபீன் ரூபத்தைக் குறித்துத் தெளிவான விளக்கமில்லை (எபி 9:5). ஆனால் பழைய ஏற்பாடு பொதுவாக அவைகளைச் செட்டைகள், கைகள், கால்கள் உடையவையாக விவரிக்கின்றது.

உடன்படிக்கைப் பெட்டியில் "மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும், ஆரோனுடைய துளிர்த்த கோலும், உடன்படிக்கையின் கற்பலகைகளும் இருந்தன" (எபி 9:4). மன்னா என்பது பரத்திலிருந்து வந்த ஆகாரம். ஆரோனின் கோல் பரம அதிகாரத்தின் சின்னம். "நான் தெரிந்து கொள்ளுகிறவனுடைய கோல் துளிர்க்கும்" என்றார் தேவன் (எண் 17:5). இரண்டு கற்பலகைகளில் பரத்திலிருந்து வந்த கட்டளைகள் எழுதப் பட்டிருந்தன.

பெட்டிக்குள்ளிருக்கும் எல்லாவற்றிலும் கிறிஸ்துவின் பிம்பத்தைக் காணலாம். அவரே பரத்திலிருந்து வந்த மன்னா (யோ 6:49-51). அவரே பரம அதிகாரியாகிய ஆண்டவர். தமது உயிர்த்தெழுதலினால் ஆண்டவர் ஆனார் (ரோ 14:9). துளிர்க்கும் கோல் உயிர்த்தெழுதலின் அடையாளம்! அவரே நமக்குச் சட்ட திட்டங்களை அளிக்கும் விண்ணரசர். கிறிஸ்துவே மன்னா; அவரைப் புசிப்போம். அவரே ஆண்டவர்; அவரைத் தொழுவோம். அவரே அரசர்; அவருக்குக் கீழ்ப்படிவோம்.

பெட்டிக்குள் மன்னா கெட்டுப்போகவில்லை. தேவ சமுகத்தில் ஒருவன் அனுபவிக்கும் புத்துணர்வை இது குறிப்பிடுகிறது. தேவ சந்நிதானத்தில் தேக்கம் இல்லை. தம்முன் அவர் எதையும் புதுமையாக்கிப் பழமையடையாது காக்கிறார்.

நமது பாவங்கள் கிறிஸ்துவின் இரத்தத்தினால் மூடப்பட்டதால் "நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் உதவி தரும் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்திற்கருகில் சேருவோமாக" (எபி 4:15,16).

எ) திரைச் **சீலை** (யாத் 26:31-35)

இது மகா பரிசுத்த தலத்தையும், பரிசுத்த தலத்தையும் பிரித்த திரை. அதில் "விசித்திர வேலையால் செய்யப்பட்ட கேருபீன்கள்" இருந்தன. அது பெட்டியை மறைத்திருந்தபடியால் "மறைவின் திரைச்சீலை" எனப்பட்டது (யாத் 39:34; எண் 4:5).

கிறிஸ்து மரித்தபோது திரைச்சீலை மேலிருந்து கீழாய்க் கிழிந்தது (மாற் 15:38). விசுவாசியொருவன் நேரடியாய்த் தேவ சமுகத்திற்குள் செல்லலாம் என்பதை இது அழகாய்ச் சுட்டிக்காட்டுகிறதல்லவா? "சகோதரரே, நாம் பரிசுத்த தலத்தில் நுழைவதற்கு இயேசுவானவர் தமது உடலாகிய திரையின் வழியாய்ப் புதிதும் உயிருள்ளதுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினார்" (எபி 10:19-22; 6:19,20).

இன்று நமக்கு மனித நடுவர் எவரும் தேவையில்லை. ஏனெனில் பரம பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவே நமது நடுவராய் இருக்கிறார். அவர் தமது இரத்தத்தினால் நாம் நேரடியாய்த் தேவ சந்நிதிக்குச் செல்லும் பாதையை உண்டுபண்ணினார். கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்த திரைச் சீலை எல்லாச் சம்பிரதாயங்களின் சமாதியையும் குறிக்கிறது. அன்றிருந்த ஆசாரியர் ஒருவேளை கிழிசலைத் தைத்திருக்கலாம்! விசுவாசியை நியாயப் பிரமாணத்தின் நுகத்திற்குள் மறுபடியும் பூட்டும் முயற்சியைப் போன்ற தல்லவா இது?

விசுவாசிகள் யாவரும் ஆசாரியர். இன்று பீடம் கட்டுவது பழைய ஏற்பாட்டுச் சிந்தனையும் ரோமன் கத்தோலிக்கப் பழக்கமுமாகும். மக்கள் உட்காரும் இடமென்றும், குருக்களின் இடமாகிய பீடப்பகுதியென்றும் பிரிப்பது இன்று வேதத்திற்கு முரணானது. சிலுவைக்குமுன் தலை வணங்குதல், அங்கி போன்ற வித்தியாசமான உடைகள் தரித்தல், இவை யாவும் அர்த்தமற்றவை. வேதத்திற்கு முரணான இவ்விதச் சடங்குகளை உடைத்தெறிய முதுகெலும்புள்ள சீர்திருத்தவாதிகள் தேவை! (எபி 9:10).

சடங்காச்சாரமாக அல்ல, "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளும் காலம் வரும்; அது **இப்பொழுதே** வந்திருக்கிறது" என்றார் இயேசு (யோ 4:23).

கட்டுமானப் பொருட்கள் (யாத் 25:1-9)

கூடாரம் கட்டப் பயன்படுத்தப்பட்ட பொருட்களுக்கும் ஆன்மீகக் கருத்து உண்டு. பொன்னானது தெய்வத்துவத்தையும், வெள்ளி மீட்பையும், வெண்கலம் நியாயத்தீர்ப்பையும், மரம் கிறிஸ்துவின் மானிடத்தன்மையையும், இளநூல் நீதியையும், எண்ணெய் பரிசுத்த ஆவியையும், ஆட்டு மயிரும் கடாவின் தோலும் பிராயச்சித்தத்தையும் குறிக்கும்.

வண்ணங்களுக்கும் விளக்கம் உண்டு (யாத் 26:31). நீலம் உன்னதத்தையும், இரத்தாம்பரம் இராஜரீகத்தையும், சிவப்பு தியாகத்தையும் குறிக்கும்.

கூடாரப் பொருட்களின் மொத்த மதிப்பு மூர்ச்சையடையச் செய்யும்! 1000 கிலோ தங்கமும், 4000 கிலோ வெள்ளியும், 3000 கிலோ வெண்கலமும் அதில் இருந்தன. இவ்வளவையும் தாராளமாய் மனப்பூர்வமாய் மக்கள் கொடுத்ததற்கு ஒப்புமை காண்பதரிது (யாத் 35:4-29).

எபிரெயர் ஒன்பதின் முதல் பத்து வசனங்கள் பூலோகக் கூடாரத்தைப் பற்றியும், தொடர் வசனங்கள் பரம கூடாரத்தைப் பற்றியும் பேசுகின்றன. கிறிஸ்து பரம கூடாரத்திற்குள் நுழைந்ததினால் நாம் பெறும் ஆசீர்வாதங்கள்—

1. நமக்குப் பாவ மன்னிப்பு உண்டு (வச 15,22,26). நமது கணக்கில் ஒரு பாவமுமில்லை. நாம் முற்றிலும் கழுவப்பட்டோம்.

2. நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் (வச 24). நாம் அவரோடு ஒப்புரவானோம். முறிந்த உறவு முற்றிலும் சீர்பெற்றது.

3. தேவ பிரசன்னத்தில் சேரும் சிலாக்கியம் பெற்றோம் (வச 8,11,12). மானிட நடுவர் தேவையில்லை.

4. உயிருள்ள தேவனைச் சேவிக்க சுத்த மனச்சாட்சி பெற்றோம் (வச 14). இப்போது நமது சேவை அவரால் அங்கீகரிக்கப்படுகிறது.

5. நமக்கு முழு இரட்சிப்பு அல்லது நித்திய மீட்பு உண்டு (வச 12,28). இப்போது பாவத்தின் **தண்டனையிலிருந்தும், வல்லமையிலிருந்தும்** இரட்சிக்கப்பட்டுக் களிகூறுகிறோம். அடுத்து பாவத்தின் **பிரசன்னத்திலிருந்தும்** கிடைக்கும் இரட்சிப்பிற்காகக் காத்திருக்கிறோம்.

"தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி கிறிஸ்து இரண்டாம் தடவை பாவமில்லாமல் தரிசனமாவார்!" (வச 28).

எபிரெயர் அத்தியாயம் பத்து

விசுவாசம்-நம்பிக்கை-அன்பு

கிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்தைக் குறித்தும், பழைய ஏற்பாட்டுப் பண்டிகைகளும் சடங்குகளும் எவ்விதம் புதிய உடன்படிக்கையின் மூலம் கிறிஸ்துவின் நிறைவேறின என்றும் இதுவரை கவனித்தோம். அதாவது, ஒன்பதாம் அத்தியாயம் வரை **தேவன்** நமக்காகப் புதிய உடன்படிக்கையில் என்ன செய்திருக்கிறார் எனப் பார்த்தோம். பத்தாம் அத்தியாயத்திலிருந்து தேவன் செய்ததற்குப் பிரதிபலிப்பாக **நாம்** என்ன செய்ய வேண்டும் என்ற கருத்தைக் காண்கிறோம். முதல் ஒன்பது அத்தியாயங்கள் உபதேசத்துக் கடுத்தவை. அடுத்து வரும் நான்கு அத்தியாயங்களும் இந்நிருபத்தின் நடைமுறை வாழ்க்கைப் பகுதியாகும்.

இவ்வத்தியாயத்தில் அடுத்தடுத்து வரும் மூன்று வசனங்களில், "செய்யக்கடவோம்" என்ற பதம் வருகிறது. "உண்மையுள்ள இருதயத்தோடும் **விசுவாசத்தின்** பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம்" (வச 22). "நம்முடைய **நம்பிக்கையை** அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்" (வச 23). "**அன்புக்கும்** நற்செயல்களுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனிக்கக்கடவோம்" (வச 21). விசுவாசம், நம்பிக்கை, அன்பு! கிறிஸ்தவ வாழ்வின் மையப் பண்புகள்

இவையே. இவைதான் நம்மைத் தேவனது பிள்ளைகளென்று அறிவிக்கும் அடிப்படைக் குணங்களாகும். இம்முக்கனிக் கொத்தை புதிய ஏற்பாட்டில் பல இடங்களில் காணலாம்.

1 கொரி 13:13, "இப்பொழுது **விசுவாசம், நம்பிக்கை, அன்பு,** இம் மூன்றும் நிலைத்திருக்கின்றன."

1 தெச 1:2, "உங்கள் **விசுவாசத்தின்** செயல்பாட்டையும், உங்கள் அன்பின் உழைப்பையும்... உங்கள் **நம்பிக்கையின்** பொறுமையையும்"

1 தெச 5:8, "**விசுவாசம், அன்பு** என்னும் மார்புக் கவசத்தையும், இரட்சிப்பின் **நம்பிக்கை** என்னும் தலைச்சீராவையும் அணிந்துகொண்டிருக்கக்கடவோம்."

1 தீமோ 6:11, "**விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும்...** அடையும்படி நாடு."

எபி 6:10‒12, "உங்கள் **அன்புள்ள** உழைப்பையும்... **விசுவாசத்தினாலும்... நம்பிக்கையின்** பூரண நிச்சயமுண்டாகும்படி... ஆசையா யிருக்கிறோம்."

எபிரெயர் பத்தாம் அத்தியாயத்தை, அடுத்து வரும் மூன்று அத்தியாயங்களின் சுருக்கம் அல்லது முன்னுரை எனலாம். பதினோராம் அத்தியாயம் "**விசுவாசத்தைக்**" குறித்தும் (11:1), பன்னிரெண்டு "**நம்பிக்கையைக்**" குறித்தும் (12:1,2), பதிமூன்று "**அன்பைக்**" குறித்தும் (13:1) பேசுகிறது. இவ்வத்தியாயத்தைப் பகுத்துப் பிரித்து இம்மூன்று பண்புகளையும் குறித்து விபரமாக அறிந்துகொள்வோம்.

1. விசுவாசம்: தேவனைப் பிரியப்படுத்த

வச 22, "துர்மனச்சாட்சி நீங்கத் தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும், தூய நீரில் கழுவப்பட்ட உடலுள்ளவர்களாயும், உண்மையுள்ள இருதயத்தோடும் விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் அவரை அணுகிச் செல்வோமாக."

இங்கே உண்மையுள்ள இதயம், சுத்த மனச்சாட்சி, கழுவப்பட்ட உடல் ஆகியவை குறித்து வாசிக்கிறோம். விசுவாசமென்னும் அடிமரத்திலிருந்து துளிர்த்து வரும் பரிசுத்தத்தின் பல்வேறு கிளைகளை இவை விவரிக்கின்றன.

அ) விசுவாச வாழ்வு தேவ சித்தத்திற்கு முற்றிலுமாய் விட்டுக் கொடுக்கும் வாழ்வு. "இயேசு: தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்; புத்தகச் சுருளில் என்னைக் குறித்து எழுதியிருக்கிறது என்று சொன்னேன் என்றார்" (வச 7). இங்கே "புத்தகம்" என்பது பழைய ஏற்பாடு. பழைய ஏற்பாட்டில் கிறிஸ்துவைக் குறித்த பிதாவின் திட்டமும் நோக்கமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கிறிஸ்து மனுவுருவில் வெளிப் பட்டபோது அத்திட்டத்தில் தம்மை முழுவதுமாய் பொருத்திக்கொண்டார். அப்படியே நமது வாழ்விற்கும் தேவன் புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவானவர் மற்றும் அப்போஸ்தலர் வழியே ஒரு திட்டத்தை வகுத்துள்ளார். நாமும் தன்னார்வமாய்த் திறந்த வேதத்தோடு, "உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறோம்!" என்றுரைக்க வேண்டும்.

சவால் விடும் ஒரு சத்தம் பவுலின் வாழ்வில் தொனிக்கிறது. மன மாற்றத்திற்கு முன் அவன் இயேசு தவறு, தானோ சரி என்றெண்ணினான். தமஸ்கு சாலை அனுபவமோ அவனது சிந்தனையைச் சிதறடித்தது. தான் தவறு, கிறிஸ்துவே சரி என்றுணர்ந்தான்! எனவேதான், "ஆண்டவரே, நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்?" என்றான். அவிசுவாசியான சவுல் விசுவாசியான பவுலானான். தன்னம்பிக்கை இழந்து கிறிஸ்து மீது நம்பிக்கை வைத்தான். இதுவே மெய் மனமாற்றம். அவிசுவாசத்திலிருந்து விசுவாசத்திற்கு! இனி தனது வழியும் வாஞ்சையும் அல்ல, கிறிஸ்துவின் சித்தமும் விருப்பமுமே. மூன்று நாட்களுக்குப்பின் அனனியா என்பவன் பவுலைச் சந்தித்து, "நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திரு வுளத்தை நீ அறியும்படி... அவர் உன்னை முன்னமே தெரிந்துகொண்டார்" என்கிறான் (அப் 22:14). இதுவே கிறிஸ்தவ வாழ்வின் முதற்படி—தேவ சித்தத்தை ஏற்றுக்கொள்ளும் விசுவாசம்.

ஆனால் பல விசுவாசிகளின் பெரும் சிக்கல் தேவசித்தம் இன்னதென்று அறிவதிலேயே. தங்கள் வாழ்விற்குத் தேவசித்தம் இன்னதென்று அறிய அவர்களுக்கு எவரும் கற்றுக்கொடுக்காததால் ஒரு பிரசங்கியோ தீர்க்கதரிசியோ தங்களுக்குத் தேவ சித்தம் என்னவென்று சொல்ல அவரையே பற்றிக்கொள்ளுகிறார்கள். இது ஆபத்து; ஏமாற்றத்தில் முடிவடையும்.

தேவ சித்தத்தை அறிய மூன்று அடிப்படை உதவிகள் உண்டு (1) வேதத்தைக் கிரமமாய் வாசித்துத் தியானியுங்கள். தேவ வசனமே தேவ சித்தம். மத்தேயு 7:21இல் இயேசு தேவ சித்தத்தைக் குறித்துப் பேசிவிட்டு 26இல் தாம் சொல்லிய வார்த்தைகளே அது என்கிறார். கர்த்தருடைய வேதத்தில் இரவும் பகலும் தியானமாயிருக்கிறவனுடைய பாக்கியத்தை

அறிவோம். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். தேவ வார்த்தையின்படி அமையும் வாழ்வை அவர் ஆசீர்வதிக்கிறார் என்பதே அதின் கருத்து. (2) அடுத்து, பரிசுத்தாவியானவரின் வழிநடத்துதல். பரிசுத்த வேதத்தின் ஆக்கியோனாகிய ஆவியானவர் தமது எண்ணங்களைக் கழுவப்பட்ட நமது மனதில் பதிக்கிறார். ஒரு சிலருக்கு மட்டுமே இது கிடைக்கும் என எண்ணக்கூடாது! "தேவனது பிள்ளைகள்" யாவருமே அவருடைய ஆவியினால் நடத்தப்பட முடியும் (ரோ 8:14). ஆவியானவர் நாம் தேவ சித்தத்தை அறியும்படி நடத்தும் ஒரு பகுதி நமது ஜெப வாழ்வாகும் (ரோ 8:27). ஜெபத்தில் நம்மை நடத்துபவர் நமது திட்டங்களிலும் தீர்மானங் களிலும்கூட நிச்சயம் நடத்துவார். முழங்காலில் நம்மை நடத்தும் தேவன் நாம் நடக்கும்போதும் வழிகாட்டுவார். (3) மூன்றாவது, சூழ்நிலைகள் மூலமாக தேவன் நம்மோடு பேசுகிறார். அவரே நமது சூழ்நிலைகளை அமைக்கிறார். 1 கொரிந்தியர் 16:7-9 நல்லதோர் எடுத்துக்காட்டு. இம் மூன்றையும் வரிசைப்படுத்துங்கள். வேத வசனம், தேவ ஆவியானவர், சூழ்நிலைகள். அந்தப் பாதையில் தைரியமாய் முன்செல்லுங்கள். ஆபத் தில்லை. "எல்லாக் காரியங்களும் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினால் நிலைவரப்படும்" (2 கொரி 13:1).

ஆ) நமது விசுவாசத்தின் அடுத்த செயல் நமது உடலைப் பரிசுத்த பலியாக தேவனுக்கு அர்ப்பணிப்பதுதான். "பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை. ஓர் உடலை எனக்கு ஆயத்தம் பண்ணினீர்" (வச 5). "இயேசு கிறிஸ்துவினுடைய உடல் ஒரே தடவை பலியிடப்பட்டதினாலே அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" (வச 10). "பரிசுத்தமாக்கப்படுகிறவர்களை ஒரே பலியினாலே இவர் என்றென்றைக் கும் பூரணப்படுத்தியிருக்கிறார்" (வச 14).

விசுவாசமானது தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்வதோடல்லாமல் அவரது திட்டங்கள் நிறைவேற நமது உடலையும் விட்டுக்கொடுக்கிறது. தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தத்தின் அறிவும் உடலின் அர்ப்பணிப்பும் இணைந்து செல்லும் (ரோ 12:1,2). இதைவிட மேலான ஆராதனை வேறில்லை. தேவன் கிறிஸ்துவுக்கென்று ஓர் உடலை ஆயத்தம்பண்ணினார். குமாரன் அதைச் சுகந்த வாசனையாகத் தேவ னுக்குப் பலியாக்கினபோது பிதா களிகூர்ந்தார். இம்முன்மாதிரியையே நாமும் பின்பற்றவேண்டும். ஊனியல்பின் விருப்பத்திற்கேற்ப நடக்க மறுத்தலே விசுவாசத்தின் செயல் (ரோ 6:11-14).

"நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி நீங்கள் பாலியல் பாவங்களுக்கு விலகி

யிருந்து... மோக இச்சைக்குட்படாமல், உங்களில் அவனவன் தன் தன் உடலைத் தூய்மையுடனும் மதிப்புடனும் வைத்துக்கொள்ள அறிந்து... தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல, பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்" (1 தெச 4:3-7).

இ) மூன்றாவது, விசுவாசம் தைரியமாக தேவ சமுகத்திற்குள் நுழையும். "சகோதரரே, நாம் பரிசுத்த தலத்தில் நுழைவதற்கு இயேசுவானவர் தமது உடலாகிய திரையின் வழியாய்ப் புதிய உயிருள்ள மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால்... தேவனுடைய வீட்டின் மேல் அதிகாரியான மகா ஆசாரியர் ஒருவர் நமக்கு இருக்கிறபடியினாலும்... விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் கிட்ட வருவோமாக" (வச 19-22).

"புதிதும் ஜீவனுமான" மார்க்கமே விசுவாச மார்க்கம். பாவம் மன்னிக்கப்பட்டது, குற்றவுணர்வு அகற்றப்பட்டது, மனச்சாட்சி கழுவப் பட்டது, நீதிமானாக்கப்பட்டோம், விடுதலை! இதனால் தேவனை அணுகும்போது பயபக்தியின்றி நடந்துகொள்வோம் என்பதல்ல. பரிசுத்த நடுக்கமிருந்தாலும் விசுவாசத்தோடும் நிச்சயத்தோடும் களிகூருவோம்.

ஆராதனையும் ஜெபமும் விசுவாச அடிப்படையில் இருக்கவேண்டுமே தவிர ஒருபோதும் நம் உணர்வுகளின் அடிப்படையில் இருக்கக்கூடாது. "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலனளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (எபி 11:6). உணர்வுகள் மாறும். ஆனால் நாம் தேவனை நெருங்கும்போதோ இயேசுவின் நாமத்தில் கூடும்போதோ அவரது பிரசன்னம் நம் நடுவில் உண்டெனும் உண்மை மாறுவதேயில்லை. ஜெபத்திலோ ஆராதனையிலோ பலவித "உணர்ச்சிகளுக்காகக்" காத்தி ருப்பவர்கள் ஆவி மண்டலத்தில் வஞ்சிக்கப்பட்டுப்போகலாம். எச்சரிக்கை!

2. நம்பிக்கை: உலகுக்கு அறிவிக்க

வச 23, "நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசை வில்லாமல் உறுதியாயிருப்போமாக; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே."

நம்பிக்கையற்ற இவ்வுலகில் நம்பிக்கையுள்ள மக்கள் கூட்டமே சபை என்பது. பவுல் அப்போஸ்தலன் அவிசுவாசிகளை "நம்பிக்கையற்றவர்கள்" என்கிறான் (1 தெச 4:13). விசுவாசிகள் ஒளிமயமான முடிவை எதிர்

நோக்குபவர்கள். முன்னேற்றமடைந்துள்ள நாடுகளின் தலைவரும்கூட இருள் சூழ்ந்த எதிர்காலத்தை நோக்கியே உளம் சோர்ந்துள்ளனர். அவர்களுக்கு எதிர்காலம் ஒரு மறைபொருள். விசுவாசிகளான நாமோ நமது எதிர்காலத்தைக் கையிலேந்தியிருப்பவர் யாரென அறிவோம். நேற்றும் இன்றும் மாறாத கிறிஸ்து நாளையும் மாறாதிருப்பார்! (எபி 13:8). உலகிற்கு நமது நம்பிக்கையை அறிவிப்பது எப்படி ?

அ) முதலாவது, நாம் சுவிசேஷத்தைத் தைரியமாகப் பறைசாற்ற வேண்டும். கேலியும் உபத்திரவமும் நமது பங்கானாலும் அவற்றைச் சட்டை செய்யக்கூடாது. "முன்னைய நாட்களை நினைவுகூறுங்கள்; நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே. நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளானீர்கள்" (வச 32,33). நாறிப்போன இவ்வுலகிற்கு சுகந்தம் கிறிஸ்துவின் நற்செய்தியே! அதைக் குறித்துப் பெருமிதம் கொள்வோம்! நாட்டின், நானிலத்தின் குழப்பங்களுக்குப் பரிகாரம் கிறிஸ்துவே! வேறு வழியே இல்லை. இராஜாதி இராஜாவை, கர்த்தாதி கர்த்தாவை, சமாதானப் பிரபுவை உலகும் தனிப்பட்டவரும் ஏற்கும்வரை அவர்களுக்கு வேறு கதி ஏது ?

மன்னன் அகிரிப்பாவுக்குமுன் பவுல் சிங்கமெனக் கர்ஜித்தான்: "தேவன் நம்முடைய மூதாதையருக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தம் நிறைவேறுமென்கிற **நம்பிக்கைக்காகவே** நான் இப்பொழுது நியாயத்தீர்ப்படைகிறவனாய் நிற்கிறேன்" (அப் 26:6). அவன் ரோம் நகரை அடைந்தபோது யூதத் தலைவரையெல்லாம் கூட்டி, "இஸ்ரவேலுடைய **நம்பிக்கைக்காகவே** இந்தச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறேன்" என்றான் (அப் 28:20). தேவனது வாக்குத்தத்தத்தின் நம்பிக்கையே பவுலை இயக்கிய விசையாயிருந்தது.

பேதுருவின் கருத்தும் அதுவே: "நீதியின் பொருட்டு நீங்கள் பாடுபட்டால் பேறுபெற்றவர்களாயிருப்பீர்கள்; அவர்களுடைய பயமுறுத்தலுக்கு நீங்கள் பயப்படாமலும் கலங்காமலும் இருந்து, கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் தூயவரெனப் போற்றுங்கள்; உங்களிலிருக்கிற **நம்பிக்கையைக்** குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் பணிவோடும் மரியாதையோடும் பதில் சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1 பேதுரு 3:14,15).

கிறிஸ்துவுக்காகச் சாட்சி பகரத் தயங்கும் கிறிஸ்தவன் தனது நிச்சயத்தில் உறுதியற்றவன். கிறிஸ்துவே ஒரே வழி என்று உறுதியாய்

நம்பினால் நான் எப்படி அமைதியாயிருக்க முடியும்? "விபசாரமும் பாவமுமுள்ள இத்தலைமுறையினருள் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுவானோ அவனைக் குறித்து மனுமகனும் தமது பிதாவின் மாட்சியோடு பரிசுத்த தூதர்களுடன் வரும்போது வெட்கப்படுவார்" எனக் கிறிஸ்துவும் காரசாரமாய் உரைத்திருக்கிறார் (மாற் 8:38). "கிறிஸ்துவின் சுவிசேஷத்தை குறித்து நான் வெட்கப்படமாட்டேன்" என்றான் பவுல் (ரோ 1:16).

ஆ) பணத்தைக் கையாளும் முறையிலும் நமது நம்பிக்கையை வெளிப்படுத்துகிறோம். "பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்தரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் உடைமைகளையும் மகிழ்வுடன் பறிமுதல் செய்ய விட்டுக்கொடுத்தீர்கள். எனவே பெரும் பலன் பெறவிருக்கும் உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" (வச 34,35).

மோட்சத்தையும் நரகத்தையும் நம்பும் ஒருவன் மிஷனரி ஊழியத்திற்கு அள்ளி வீசாமலிருக்க முடியாது. மாந்தருக்கு நரக வாசலை மூடி மோட்ச வாசலைத் திறக்கக்கூடிய ரூபாய் நோட்டுகளை அவன் சீலையில் முடிந்து வைப்பது எப்படி? மோட்சத்திற்கு ஆள் சேர்ப்பதே அவனது பிரதான நோக்காகும். "மண்ணுலகில் உங்களுக்குச் செல்வத்தைச் சேர்த்து வைக்க வேண்டாம்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள், விண்ணுலகில் உங்களுக்குச் செல்வத்தைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் செல்வம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்" (மத் 6:19-21). "பூச்சியும், துருவும், திருடரும் விட்டதை விலைவாசியும் வரியும் வாரிச்செல்லும்" என்கிறார் ஸ்டுவர்ட் பிரிஸ்கோ!

சிறப்பான இரண்டு ஈகைகளுக்குப் புதிய ஏற்பாட்டில் பெண்களையே எடுத்துக்காட்டலாம். ஒருத்தி தனக்கு இருந்த இரண்டு காசையும் போட்டுவிட்ட விதவை. இன்னொருத்தி தன் நளதத் தைலக் குப்பியை உடைத்தவள். விதவை தன் "பிழைப்புக்கானதைக்" கொடுத்துவிட்டாள். அடுத்தவள் தன் "சேமிப்பைக்" கொட்டிச் சேவித்தாள். இயேசு இத்தியாகக் காணிக்கையைச் சுவிசேஷப்பணியோடு அழகாய் இணைத்து, "இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்" என்றார் (மத் 26:13).

செல்வந்தருக்குப் பவுல் தரும் புத்திமதி: "இவ்வுலகில் செல்வம் படைத்தவர்கள் மேட்டிமையான உணர்வு கொள்ளாமலும், நிலையில்லாச் செல்வத்தில் நம்பிக்கை வைக்காமலும்... உயிருள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்செயல்களில் செல்வந்தர்களாகவும், உதார குணமுள்ளவர்களாயிருக்கவும், நித்திய வாழ்வைப் பற்றிக்கொள்ளும்படி இவ்வாறு வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல அடித்தளமாய்ச் செல்வத்தைச் சேமித்து வைக்கவேண்டும்" (1 தீமோ 6:17-19).

இ) மூன்றாவது, நமது நம்பிக்கை கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கான எதிர்பார்ப்பில் வெளிப்படுகிறது. "வருகிறவர் இன்னுங் கொஞ்சக் காலத்தில் வருவார், தாமதம் பண்ணமாட்டார்" (வச 37). சபையின் மாபெரும் எதிர்பார்ப்பு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே. பவுல் இதை "நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியம்" என்கிறான் (தீத்து 2:13). "கர்த்தர் வருகிறார்" என்று அர்த்தங்கொள்ளும் *"மாரநாதா"* என்ற கிரேக்கப் பதத்தைக் கூறியே ஆதி விசுவாசிகள் ஒருவரையொருவர் வாழ்த்துவார்களாம் (1 கொரி 16:22). எந்த விநாடியும் கர்த்தர் வருவாரென்று அவர்கள் எதிர்நோக்கி வாழ்ந்தனர். ஏனெனில் கிறிஸ்து அவர்களை விட்டு விண்ணேறியபோது வானத்திலிருந்து அவர்கள் கேட்ட முதல் செய்தி அதுவே: "இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" (அப் 1:11).

உயிர்த்தெழுதலை அப்போஸ்தலர் பிரசங்கித்தபோது கேலி செய்த கூட்டம் ஒன்று இருந்தது போல கடைசி நாட்களிலும் கிறிஸ்து வருகிறார் என்ற அறிவிப்பைக் கேட்டுச் சிரிக்கும் பரிகசிக்கும் பலர் இருப்பர் (2 பேது 3:3,4). மக்களை ஆசீர்வதிக்க மட்டுமே செய்யும் "இன்ப" இயேசுவைப் பிரசங்கிக்கும்வரை யாரும் நம்மை எதிர்க்கவோ பகைக்கவோ மாட்டார்கள். இரண்டாம் வருகை, உயிர்த்தெழுதல், நியாயத்தீர்ப்பு என்று முழங்கும் போதுதான் அல்லல் துவங்கும். அப்போஸ்தலர் 17:30-32 இதற்கொரு நல்ல எடுத்துக்காட்டு.

கர்த்தர் தமது வருகையைத் தாமதிப்பாரேயானால் அது அவர் தம் மக்களின் நன்மை நாடியே! "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்கைக் குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப் போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி நம் மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேது 3:9). இரண்டாம் வருகையின் தாமதம் உலகமானது மனந்திரும்ப ஓர் எச்சரிப்பு; சபையானது உலகைச்

சந்திக்க ஒரு சவால்! "இறையரசின் இச்சுவிசேஷம் உலகமெங்குமுள்ள சகல மக்களினங்களுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வரும்" என்றார் இயேசு (மத் 24:14).

3. அன்பு: சபையை ஆயத்தப்படுத்த

வச 24, "அன்புக்கும் நற்செயல்களுக்கும் நாம் தூண்டியெழுப்பப்படும்படி ஒருவரையொருவர் கவனிப்போம்."

இங்கே நிருப ஆக்கியோன் அன்பைக் கூட்டு வாழ்வோடு இணைத்துப் பேசுகிறான். "நாம்... ஒருவரையொருவர்" (வச 24,25). நெருங்கிவரும் "நாளுக்கு" சபையை ஆயத்தமாக்கும் செய்தி இது. இதில் விசுவாசிகளை நற்செயல்களுக்கேதுவாக ஊக்குவிக்கும் பரஸ்பர அன்பும் (வச 24), பின்மாற்றத்தைத் தடுக்க ஏதுவுமாக நாணயத்தின் இருபக்கம் போன்ற இரு கூறுகள் உண்டு (வச 26-29).

இப்புதிய ஏற்பாட்டுச் சத்தியத்தை சிறப்பாய்ச் சித்தரிக்கும் பழைய ஏற்பாட்டுப் பகுதி பிரசங்கி 4:9-12. "தனி மனிதராயிருப்பதிலும் இருவர் கூடி இருப்பது நலம்; அவர்களுடைய உழைப்பினால் அவர்களுக்கு மிகுந்த பயன் கிடைக்கும்." இது நாணயத்தின் ஒரு பக்கத்தைக் குறிக்கும் "நற் செயல்கள்." தொடர்ந்து பிரசங்கி, "ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான்; தனியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே... ஒருவனை யாராவது வீழ்த்த வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்; முப்புரிக் கயிறு அறுவது கடினம்" என்கிறான். "விழுதல்," "மேற்கொள்ளப்படுதல்," "அறுதல்" போன்ற பதங்கள் பின்மாற்றத்தைக் குறிக்கின்றன. ஐக்கியத்தின் உடனடிப் பலன் ஆன்மீக அனலும், பலமுமே (பிர 4:11,12).

துலைந்துபோன ஆட்டைக் குறித்த உவமையை அறிவோம். ஆடு காணாமல் போவது எப்படி? மந்தையை விட்டுப் பிரிந்து தனியே அலை வதினாலேயே. இதனால் சத்துருவின் கையில் சிக்குகிறது. தாய்க்கோழி யோடு இருப்பதுதான் கோழிக்குஞ்சுக்குப் பாதுகாவல். அது தாயை விட்டுப் பிரியுமானால் பருந்து அதைத் தூக்கிச் செல்வது சுலபம். ஒன்றாய் ஓங்கி, ஒன்றாய் ஓடி, ஒன்றாய் ஒளி தருதலே தமது பிள்ளைகளைக் குறித்த தேவனது பரிபூரண சித்தமாம்!

பின்மாற்றத்தின் பயங்கரத்தை 29,31ஆம் வசனங்களில் காணலாம். "தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தம்

செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியைப் பழிக்கிறவன் எவ்வளவு கொடிய தண்டனை பெறவேண்டும் என்பதை எண்ணிப் பாருங்கள். உயிருள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே.'' பின்மாற்றத்திற்குப் பரம வைத்தியனின் மாற்று மருந்து தேவ மக்களோடு உத்தமமாய் ஐக்கியங்கொண்டு வளருதலேயாகும். "சகோதர சிநேகத்தின்'' இடத்தை எடுக்கக்கூடியது வேறு எதுவுமில்லை (1 பேதுரு 1:22).

அன்பிலும் நற்செயல்களிலும் நிறைந்ததும், பின்மாற்றமடைய மறுக்கிறதுமான சபைக்காகவே கர்த்தர் வருகிறார்!

முடிவுரை

உறுதியானதோர் அறிக்கையோடு இவ்வத்தியாயம் முற்றுப்பெறுகிறது: "நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆன்மா இரட்சிக்கப்படும்படி விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்'' (வச 39). ஒவ்வொரு கிறிஸ்தவனின் முழக்கமும் "நான் கீழே இறங்கி வரமாட்டேன்'' என்பதாயிருக்கவேண்டும். நான் **விசுவாசத்திலிருந்து** கீழிறங்கமாட்டேன்; தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அவரது சித்தத்திற்குப் பணிந்து முன்னேறிச் செல்வேன். நான் **நம்பிக்கையிலிருந்து** கீழிறங்க மாட்டேன்; எங்கும், எப்பொழுதும் கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தை அறிவித்துக் கர்த்தருக்காக ஒரு கூட்டத்தை ஆயத்தம் பண்ணிக்கொண்டேயிருப்பேன். நான் **அன்பிலிருந்து** கீழிறங்க மாட்டேன்; பரிசுத்தவான்களோடு தேவனது அன்பின் ஆழத்திற்குள் அமிழ்ந்து மூழ்கிச் செல்வேன். விசுவாசம் இன்றைக்கு, நம்பிக்கை நாளைக்கு, அன்பு என்றைக்கும்!

தேவனை மகிழ்விக்கும் விசுவாசம்

"விசுவாசம்" எனும் சொல் 24 முறையும், "தேவனைப் பிரியப்படுத்துதல்" எனும் குறிப்பு குறைந்தது 5 முறையும் (வச 2,4,5,6,39) வரும் இவ்வத்தியாயத்திற்குப் பெயர்கள் எத்தனையோ! "வேதாகமத்தின் சீரணியரங்கம்," "தேவனது புகழ்ப்பட்டியல்," "புகழேந்திகளின் காட்சிக் கூடம்," இப்படிப் பல. ரோமர் நிருபம் கிறிஸ்தவ விசுவாசத்தின் இன்றியமையாமையை இனிதே விளக்குகிறதென்றால் எபிரெயர் நிருபம் அதின் மேன்மைக்கு மெருகேற்றுகிறது.

விசுவாசத்திற்கு இதைவிடச் சிறந்த வரையறையைப் புதிய ஏற்பாட்டில் வேறெங்கும் காண்பதரிது. முதலாவது, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதி" (வச 1). நாம் எதிர்பார்த்திருப்பதைப் பெற்றது போன்ற உணர்வே அது. "இவர்களெல்லாரும் தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு அறிக்கையிட்டார்கள்" (வச 13). நம்புதல், அணைத்துக்கொள்ளுதல், அறிக்கையிடுதல்! அடுத்து, விசுவாசமானது "காணப்படாதவைகளின் நிச்சயம்" (வச 1). 27ஆம் வசனத்தில் மோசே "அதரிசனமானவரைத் தரிசிக்கிறதுபோல உறுதியாயிருந்தான்" என்றும், 8ஆம் வசனத்தில் ஆபிரகாம், "தான் செல்லும் இடம் இன்னதென்று அறியாமல் புறப்பட்டுச் சென்றான்" என்றும் வாசிக்கிறோம். மூன்றாவதாக,

விசுவாசமென்பது தேவனையே சார்ந்திருத்தலாகும். "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனெனில் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" (வச 6). தேவன் "இருக்கிறாரென்றும்" அவர் "பலனளிக்கிறவரென்றும்" விசுவாசம் நம்பும். அதாவது விசுவாசம் தேவனது உண்மையையும் வல்லமையையுமே சார்ந்திருக்கும். வச 11இல் சாராள் தேவனது உண்மையையும் வச 18இல் ஆபிரகாம் அவரது வல்லமையையும் சார்ந்திருந்ததைக் காண்கிறோம்.

ஆம், விசுவாசம் என்பது உறுதி, நிச்சயம் மற்றும் சார்பு ஆகும். இம் முப்பரிமாண விசுவாசத்தையே இவ்வத்தியாயத்தில் காண்கிறோம். தேவன் தம் மக்களிடம் விசுவாசத்தைக் காண ஆசிக்கிறார்; கண்டவுடன் அக மகிழுகிறார். இயேசுவின் இந்த வாஞ்சையே, "மனுமகன் வரும்போது பூவுலகில் விசுவாசத்தைக் காண்பாரோ?" என்ற ஏக்கமாக வெளிப்பட்டது (லூக் 18:8). தேவ மக்களின் பெயரே "விசுவாசிகள்" என்பதுதான்— அதாவது விசுவாசிக்கிறவர்கள்! தேவனை மகிழ்விக்கும் விசுவாசத்தைக் குறித்த ஆறு படிப்பினைகளை இங்கு காணலாம்.

தேவனை மகிழ்விக்கும் விசுவாசம் எது?

1. *தேவனே படைப்பாண்டவர் என விசுவாசித்தல்*

எபிரெயரில் விசுவாச வீரரைக் குறித்து வாசிக்கும்போது நாம் இராட்சதருக்கு முன் நிற்கும் வெட்டுக்கிளிகளைப் போல உணருகிறோம். ஆனால் சற்றே உற்று நோக்குங்கள். பட்டியலின் முதல் நபர் ஆபிரகாமோ மோசேயோ அல்ல, "நாம்" தான் விசுவாசப் படையை நடத்துனர் போல் முதலில் நிற்கிறோம்! "விசுவாசத்தினாலே **நாம்** உலகம் முழுவதும் தேவனுடைய வார்த்தையினால் உண்டாக்கப்பட்டதென்று... அறிந்திருக்கிறோம்" (வச 3). இந்த விசுவாசம் தேவனது படைப்பின் வல்லமையைப் பற்றியது. படைத்தவராகத் தேவனை விசுவாசித்தலே விசுவாசத்திற்கெல்லாம் அடிப்படையானது. அதாவது, அவர் இன்று காணப்படும் உலகத்திற்கும் (வச 3) நாளை வரவிருக்கும் உலகத்திற்கும் (வச 10,13-16) சிருஷ்டிகர் என்று நம்புவது. தேவனைச் சிருஷ்டிகர் என்று விசுவாசிப்பதென்றால் என்ன?

அ) தேவனது வார்த்தைக்குப் படைப்பு வல்லமை உண்டென்று விசுவாசிப்பது (வச 3). ஆதியாகமத்தின் படைப்பின் வரலாற்றில் "தேவன் சொன்னார்... அது அப்படியே ஆயிற்று" என்று திரும்பத் திரும்ப எழுதப்பட்டுள்ளது!

ஆ) சிருஷ்டிகர் மீதுள்ள விசுவாசம் அவர் அசையாத அரசொன்றைக் கட்டிக்கொண்டிருக்கிறார் என நம்புகிறது. "தேவன்தாமே கட்டி உண்டாக்கின அடித்தளங்களுள்ள நகருக்கு அவன் காத்திருந்தான்" (வச 10). மனிதன் கட்டுவதெல்லாம் இன்றோ நாளையோ அசைக்கப்படும். ஆனால் தேவன் கட்டுவதோ "அசைவில்லா அரசு" (எபி 12:28).

இ) உலகில் நம் வாழ்வு தற்காலிகம் என்பதை இவ்விசுவாசம் நமக்கு ஓயாமல் உணர்த்திக்கொண்டிருக்கும். "இவர்களெல்லாரும்... பூவுலகில் தங்களை அந்நியரும் தற்காலிகக் குடிகளும் என்று அறிக்கையிட்டனர்" (வச 13). "என் அரசு இவ்வுலகிற்குரியதல்ல" என்றார் இயேசு (யோ 18:36). இவ்வுலகம் நமக்கொரு சத்திரம்தான்.

ஈ) நமது தாயகம் பரலோகம் என்று விசுவாசிக்கிறோம். "இப்படி அறிக்கையிடுகிறவர்கள் தங்கள் தாய்நாட்டைத் தேடிச் செல்கிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள்" (வச 14).

பரலோக ராஜ்ஜிய வாசி
பரன் இயேசுவின் மெய் விசுவாசி
புவி யாத்திரை செய் பரதேசி
பரன் பாதம் நீ மிக நேசி

என்ற பாடல் நம்மை எவ்வளவு பரவசப்படுத்துகிறது! கம்பி எண்ணிக்கொண்டிருக்கும் பக்தன் பவுல் பிலிப்பிய விசுவாசிகளுக்கு எப்படி உயிரூட்டுகிறான் பாருங்கள்: "நமது குடியிருப்போ விண்ணகத்திலிருக்கிறது!" (பிலி 3:20).

உ) இவ்வித விசுவாசம் நம்மை உலகச் சிந்தையையும் பொருளாசையையும் உதறித் தள்ளச்செய்யும். "தாங்கள் விட்டுவந்த நாட்டை நினைத்திருப்பார்களானால், அதற்குத் திரும்பிப் போவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்திருக்குமே" (வச 15). பூவுலகிலுள்ளவைகளிலல்ல, மேலுலகிலுள்ளவைகளிலேயே நமது மனம் இருக்கட்டும் (கொலோ 3:2,3).

ஊ) இறுதியாக, படைப்பின் கர்த்தர்மேல் தங்கள் விசுவாசத்தை வைத்திருப்போர் இந்த தேவன் "நமது" தேவன் என அறிக்கையிடுகின்றனர்! "இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நம்முடைய தேவன்" (சங் 48:14). "தேவன் அவர்களுடைய தேவன் என்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரை ஆயத்தம் பண்ணினாரே" (வச 16).

தேவனே சிருஷ்டிகர். தமது வார்த்தையினால் யாவற்றையும் படைக்கிறவர். அசையாத அரசை அவர் நமக்காய்க் கட்டுகிறார். இவ்வாழ்வு புகையைப் போன்றது. விண்ணகமே நமது தாயகம். இவ்வுலகக் காரியங்களில் சிக்கிக்கொள்ளாது வாழுகிறோம். அவர் நமது தேவன். நாம் அவரது கரத்தின் செயல்கள். இதுவே தேவனை மகிழ்விக்கும் விசுவாசம்.

2. தேவனே இரட்சகர் என விசுவாசித்தல்

தேவன் விரும்பும் விசுவாசம் அவரையே இரட்சகரென ஏற்றுக் கொள்ளும். நம்மையும் (வச 7) நமக்குப் பின்வரும் தலைமுறைகளையும் (வச 20-22) இரட்சிக்கும் அவரது கிருபையையும் வல்லமையையும் அது நம்பும். இன்றே ஒவ்வொருவருக்கும் தேவனது இரட்சிப்பின் நாள் என்று அது நம்பும். இவ்விசுவாசத்தினால் கிட்டும் பயனென்ன? அல்லது, இவ்விசுவாசத்தை நாம் எவ்விதம் அப்பியாசிக்கலாம்?

அ) தேவனை இரட்சகராக நம்பும்போது அவர் நமக்கும் நம் குடும்பத்துக்கும் தமது இரட்சிப்பை அருளுகிறார். "விசுவாசத்தினாலே நோவா தற்காலத்திலே காணாதவைகளைக் குறித்துத் தேவ எச்சரிப்புப் பெற்று பயபக்தியுள்ளவனாகி, தன் குடும்பத்தை இரட்சிப்பதற்கு ஒரு பேழையை உண்டுபண்ணினான்" (வச 7). நடுங்கி நின்ற பிலிப்பிய சிறைச் சாலைக்காரனுக்கு வந்த அருளுரை: "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி; அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்" (அப் 16:31). தேவன் தனிப்பட்டவர் மீது மட்டுமல்ல, அன்னாரது குடும்பத்தின் மீதும் அக்கறையுள்ளவர்.

ஆ) தேவனை இரட்சகராக நம்புவதினால் வரவிருக்கும் நியாயத் தீர்ப்பைக் குறித்து உலகை எச்சரிக்க உந்தப்படுகிறோம் (வச 7). சீர்கெட்ட சமுதாயத்தில் நோவாவின் கீழ்ப்படிதலும் நீதியும் நம்பிக்கையுமான வாழ்க்கை கலங்கரை விளக்கமாய் இருந்தது. அவனது சுத்தியலின் ஒவ் வொரு சத்தமும் விரைவில் வரவிருந்த நியாயத்தீர்ப்பின் இடிமுழக்கமென அதிர்ந்திருக்கும். இன்றையத் தலைமுறையின் பொறுப்பு நமதே. கிறிஸ்துவினாலன்றி இரட்சிப்பில்லையென்று விசுவாசிப்போமானால் ஒவ்வொரு அவிசுவாசியையும் எச்சரிக்கத் தவறமாட்டோம். "எல்லோருடைய இரத்தப் பழிக்கும்,நான் நீங்கலாயிருக்கிறேன்" என்று பவுல் எப்படிச் சாட்சியிட முடிந்தது? கிடைத்த தருணம் ஒன்றையும் நழுவவிடாமல் தேவ செய்தியைப் பகிர்ந்ததினால் அல்லவா? (அப் 20:26,27).

இ) நமது விசுவாசம் வருங்கால இளந் தலைமுறையினருக்கு நம்மைப் பொறுப்புள்ள மாதிரிகளாக்கவேண்டும். "விசுவாசத்தினாலே ஈசாக்கு... யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்... விசுவாசத்தினாலே யாக்கோபு... யோசேப்புடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்தான்... விசுவாசத்தினாலே யோசேப்பு இஸ்ரவேலர்... புறப்படுவார்களென்பதைப் பற்றி... பேசினான்" (வச 20-22). வாழையடி வாழையாய் விசுவாசம் அழகாய்க் கடத்தப்படுவதைப் பாருங்கள்! விசுவாசத்திற்கு நாம் முற்றுப்புள்ளிகளாயிராமல் இடைக்கோடுகளாய் இருக்கவேண்டும். விசுவாசிகளின் தந்தையாகிய ஆபிரகாமைக் குறித்து தேவன், "அவன் தன் பிள்ளைகளுக்கும் தன் குடும்பத்தினரனைவருக்கும் கர்த்தருடைய வழியைக் காத்து நடக்கக் கட்டளையிடுவான் என்று அறிந்திருக்கிறேன்" என்றார் (ஆதி 18:19). விசுவாசியான தாய் தந்தை ஒவ்வொருவரையும் குறித்து தேவன் இவ்விதமே சாட்சியிடவேண்டும்.

ஈ) தேவன் இரட்சகராயிருப்பதினால் அவரது இரட்சிப்பின் படை நிற்காமல் விரைந்து முன்செல்லும். "விசுவாசத்தினாலே இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டை விட்டுப் புறப்படுவார்களென்பதைப் பற்றி யோசேப்பு விசுவாசத்தினாலே தான் இறக்கும்போது பேசி, தன் எலும்புகளைக் குறித்துக் கட்டளை கொடுத்தான்" (வச 22). தேவன் தமது திட்டத்தை நிறைவேற்றுவாரென்று எத்தனை உறுதி! யோசேப்பின் விசுவாசம் தொலைநோக்குள்ளதாயிருந்தது! உலகத்தை நற்செய்திமயமாக்குதலைக் குறித்து நாமும் அவ்விதமே எதிர்பார்க்கவேண்டும். என்ன நடந்தாலும் சரி, "இறையரசின் இந்தச் சுவிசேஷம் பூவுலகெங்குமுள்ள எல்லா மக்களினங்களுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்!" (மத் 24:14).

தேவனே இரட்சகர். அவர் நம்மையும் நம் குடும்பத்தையும் இரட்சிக்கிறார். விசுவாசியாத உலகை எச்சரிக்கும் ஜாமக்காரர் நாம். நமது செய்தியும் சாட்சியும் அடுத்துவரும் தலைமுறையினர்களுக்கு கடத்தப்படவேண்டும். நம்மூலம் தேவன் நடப்பிக்கும் நற்செய்தித் திட்டம் கடைசி மனிதன் சந்திக்கப்படும்வரை நிற்கப்போவதில்லை. இவ்வித விசுவாசம் தேவனது இதயத்தைக் குளிரப்பண்ணும்.

3. தேவனே சுகமளிப்பவர் என விசுவாசித்தல்

இன்று நம் உடலைச் சுகப்படுத்தவும் (வச 11), நாளை நம்மை உயிரோடெழுப்பவும் (வச 12,19) விசுவாசம் தேவனை நோக்கியிருக்கும். தேவன் உயிருள்ளவர், வல்லவர், குணமாக்கச் சித்தமுள்ளவர். நமது நலமே அவரது மகிழ்ச்சி. குணமாக்கும் விசுவாசம் அறிக்கையிடுவது என்ன?

அ) தேவன் நமது உடலுக்கும் ஆண்டவர் என அது அறிக்கையிடுகிறது. “விசுவாசத்தினாலே சாராளும்... கருத்தரிக்கப் பலமடைந்தாள்” (வச 11). அவள் மக்களினங்களின் தாயாவாள் என்று தேவன் சொன்னபோது சாராளுக்கு வயது தொண்ணூறு! (ஆதி 17:16,17). கர்த்தர்மீது அவள் கொண்டிருந்த விசுவாசம் அவளது மலட்டுத்தன்மையைக் குணமாக்கி அவளது கர்ப்பத்தைக் கருத்தரிக்கப் பலப்படுத்தியது. தேவன் நமது ஆன்மாவிற்கு மட்டுமல்ல, உடலுக்கும் ஆண்டவர் (1 கொரி 6:13). அதாவது, அவர் நமது உறுப்புகள் யாவற்றையும் ஆட்கொண்டு பராமரிக்கிறார்.

ஆ) அவரது குணமாக்கும் வாக்குகள் தவறுவதில்லை. “வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்று சாராள் எண்ணினாள்” (வச 11). தனது நிலையை நோக்காமல் தேவனது வல்லமையை நோக்கினாள். “நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்” என்பது தேவன் தம் மக்களுக்களித்த வெளிப்பாட்டு வாக்கு (யாத் 15:26). யேகோவா ரப்பா! “அவர் உறுதியற்றவராய்ச் சிலுவையில் அறையப்பட்டிருந்தும், தேவனுடைய வல்லமையினால் பிழைத்திருக்கிறார்; அப்படி நாங்களும் அவருக்குள் உறுதியற்றவர்களாயிருந்தும், உங்களிடமாய் விளங்கிய தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம்” (2 கொரி 13:4).

இ) தேவனால் கூடாதது ஒன்றுமில்லை என்று சுகத்திற்கான விசுவாசம் ஒத்துக்கொள்ளும். “இயேசுவை உயிரோடு எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை உயிரோடு எழுப்பினவர்... சாவுக்குரிய உங்கள் உடல்களையும் உயிர்ப்பிப்பார்” (ரோ 8:11). ஈசாக்கைக் குறித்து, “இறந்தோரையும் உயிரோடு எழுப்ப தேவன் வல்லவர்” என்று சொல்லப்பட்டுள்ளது (வச 19). நமக்குள்ளிருக்கும் ஆவியானவர் இன்று நம்மைத் தாங்கி, நாளை நம்மை எழுப்ப வல்லவராயிருக்கிறார். மண்பாண்டங்களுக்குள் குடிகொண்டிருக்க அவரைப் பெற்றுக்கொண்ட நாம் எத்தனை பாக்கியமுள்ளவர்கள்!

தேவனே சுகமளிக்கிறவர். நமது ஆன்மா மட்டுமல்ல, உடலைக் குறித்தும் அவருக்கு அக்கறையுண்டு. அவரது குணமாக்கும் வாக்குகள் நிச்சயமானவை. அவரது வல்லமைக்குக் கட்டுப்படாத வியாதியொன்று இல்லை. உயிர்ப்பிக்கும் தமது ஆவியை நமக்களித்திருக்கிறார். இந்த விசுவாசமே அவரை அகமகிழச் செய்யும்.

4. *தேவனே ஆண்டவர் என விசுவாசித்தல்*

விசுவாசம் தேவனை ஆண்டவராக அல்லது கர்த்தராக ஏற்றுக் கொள்ளும். அவரே நமது ஆராதனைக்கும் (வச 4), அடிபணிதலுக்கும்

(வச 17) தகுதியானவர். நமது வாழ்வில் முக்கியத்துவமும் முதலிடமும் அவருக்கே அளிக்கப்படவேண்டும். தேவனது கர்த்தத்துவத்தில் விசுவாசம் வைப்பது நம்மை நால்வகை செயல்பாட்டிற்குள் நடத்தும்.

அ) தேவனே நமது ஆண்டவரென்போமானால் நமது உசிதத்தால் அவரைக் கனப்படுத்துவோம். ''விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்'' (வச 4). காயீன் ''நிலத்தின் கனிகளைக்'' கொண்டுவந்தான். ஆபேலோ தன் மந்தையின் ''தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும்'' சிலவற்றைக் கொண்டுவந்தான் (ஆதி 4:3,4). தேவன் நமக்களித்த தருணம், தாலந்து, தனம் ஆகிய ஈவுகளின் உக்கிராணக்காரர் நாம். தேவன் நமது உசிதங்களைப் பெறத் தகுதியானவர்.

ஆ) இவ்வித விசுவாசம் மாட்சிமையான தேவனுக்குமுன் தன்னைப் பூச்சியாகக் கருதி கிறிஸ்துவின் இரத்தத்தின் மேன்மையினால் மட்டுமே நிற்க நம்மை நடத்தும். காயீனின் காணிக்கையில் பலியில்லை. ஆபேலின் பலியும், மரணமும் நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியான கிறிஸ்துவின் மாதிரியாகும் (எபி 12:24). ''பரிசுத்த தலத்தில் நுழைவதற்கு இயேசுவானவரது இரத்தத்தினாலே நமக்கு உண்டான தைரியமே'' விசுவாசம் (எபி 10:19,20). தேவனே நமது ஆண்டவரென்று விசுவாசிப்போமென்றால் நமது ஒன்றுமில்லாமையை ஒத்துக்கொண்டு *''இயேசு போதுமே''* என்று குதூகலமாய்ப் பாடுவோம்.

இ) அடுத்து வருவது தேவனது ஞானம். மனித அறிவு தேவ ஞானத்திற்குமுன் கால் தூசி பெறாது. அவர் ஆண்டவர்! அவரோடு வாதாடுபவன் யார்? தனது ஒரே பேரான குமாரனைப் பலியிடும்படி தேவன் எப்படி ஆபிரகாமைக் கேட்கலாம் என்போமோ? (வச 17). தேவன் ஆண்டவரானால் நமது குருவி மூளை இவ்விதக் குறுக்குக் கேள்விகளைக் கேட்பது தகாது! ''என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல... மண்ணுலகிலிருந்து வானங்கள் எவ்வளவு உயர்ந்திருக்கின்றனவோ, அப்படியே உங்கள் வழிகளைவிட என் வழிகள் உயர்ந்திருக்கின்றன'' என்று கர்த்தர் சொல்லவில்லையோ? (ஏசா 55:8,9). அவர் சொல்வதோ, கேட்பதோ நமக்குப் புரியாத புதிராயிருந்தாலும் அவர் ஆண்டவராயிருப்பதால் வெறுமனே ''ஆமா, ஆமா'' என அவர் சொல்வதற்கெல்லாம் தாளம் போடுவோம்.

ஈ) ஆசீர்வாதத்தையல்ல, ஆசீர்வதிப்பவரையே ஆராதிப்போம். ஆபிரகாமும் சாராளும் தங்கள் முதிர்காலப் பாலகனோடு மனமொன்றிப்

போயிருந்திருப்பர். தேவனோ தாம் கொடுத்ததைத் திரும்பக் கேட்டார். நாம் பெற்ற ஆசீர்வாதங்களை அவரது பாதத்தில் படைப்போம். நமது கிரீடங்களை அவரது பாதங்களில் வைத்துவிடுவோம். தேவனது ஆசீர்வாதங்களில் மகிழ்ந்திருந்தாலும் அவை நமது விக்கிரகங்கள் ஆகிவிடாதபடிக் கவனமாயிருப்போம். "பரலோகத்தில் உம்மையல்லாமல் எனக்கு யார் உண்டு? பூலோகத்தில் உம்மைத் தவிர எனக்கு வேறே விருப்பமில்லை" என்ற தாவீதின் தவனத்தைப் பாருங்கள்! (சங் 73:25).

தேவனே ஆண்டவர். நமது உசிதங்களுக்குத் தகுதியானவர் அவரே. கிறிஸ்துவின் இரத்தத்திற்குள் அடைக்கலமாகி அவர் முன் பணிகிறோம். அவரது வழிகளை முற்றும் விளங்கிக்கொள்வது சாத்தியமல்ல. அவரது ஆசிகள் நமது பார்வையை அவர் முகத்தினின்று திருப்பிவிடக் கூடாது. இதுவே தேவன் தேடும் விசுவாசம்.

5. *தேவனே தேற்றரவாளன் என விசுவாசித்தல்*

தேவன் விரும்பும் விசுவாசம் ஆறுதல் பெற பிரதானமாக அவரையே நோக்கும். இக்காலப் பாடுகளையும் (வச 23-29,34,35), வருங்கால மகிமையையும் (வச 5) சீராய்க் காண இது உதவும். எவ்வித பயமுமின்றி ஆறுதலின் தேவன் மேல் அது நம்பிக்கையாயிருக்கும். இப்படிப்பட்ட விசுவாசம் கருத்துள்ள பல பாடங்களை நமக்குப் புகட்டுகிறது.

அ) தேவனே மெய்யாய் ஆறுதலளிக்கிறவர் என்று நம்பும் விசுவாசம் பாடுகளைத் தேவத் திட்டத்தின் பங்காய் ஏற்றுக்கொள்ளும். "வேறு சிலர் வாதிக்கப்பட்டார்கள், வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டு களையும் காவலையும் அநுபவித்தார்கள், கல்லெறியப்பட்டார்கள், வாளால் அறுக்கப்பட்டார்கள்... உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித் தார்கள்" (வச 35-37). பாடுகள் எனும் புதிருக்குப் பதிலளிக்கிறான் பவுல்: "கிறிஸ்துவை விசுவாசிக்கிறதற்கு மட்டுமல்ல, அவருக்காய்ப் பாடுபடவும் உங்களுக்கு அருள் கொடுக்கப்பட்டிருக்கிறது" (பிலி 1:29). விசுவாசி களுக்கு வேறொரு பெயர் வேண்டுமா? "பாடுபடுவோர்!"

ஆ) கடினமான சூழ்நிலைகளிலிருந்து தப்ப முயல்வதைத் தவிர்த்து அவரது கிருபையைத் தழுவுதலையே நாம் தெரிந்துகொள்ளவேண்டும். "வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலை பெறச் சம்மதியாமல் வாதிக்கப்பட்டார்கள்" (வச 35). கடல் கொந்தளிக்கும் போது நாம் பதறி அங்குமிங்கும் ஓடக்கூடாது. "அவர் அறிவார்!" என்ற

திடநம்பிக்கையோடு நாம் அமரிக்கையாயிருக்கவேண்டும். நாம் விடுதலை பெற விரும்பி வழி தேடக்கூடாதென்பதல்ல, "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" என்ற அவரது பதிலையும் மனப்பூர்வமாய் ஏற்றுக்கொள்ளத் தெரியவேண்டும் (2 கொரி 12:9). இவ்வண்ணமே ஆறுதலளிப்பவர் மீதுள்ள விசுவாசத்தின் ஆறுதலை நாம் அனுபவிக்க முடியும்.

இ) மெய்யான ஆறுதல் தேவனிடமிருந்து மட்டுமே வரும் என்று புரிந்துகொள்ளுதல் அவசியம். உலகமோ நமது நண்பரோ அதைத் தர இயலாது. "விசுவாசத்தினாலே மோசே... அநித்தியமான பாவ இன்பங்களை அனுபவிப்பதைவிட தேவனுடைய மக்களோடே துன்பத்தை அனுபவிப்பதையே தெரிந்துகொண்டு, இனிவரும் பலன்மேல் நோக்கமாயிருந்து, எகிப்தின் செல்வங்களைவிட கிறிஸ்துவின் பொருட்டு வரும் இகழ்ச்சியை அதிக பாக்கியமென்று எண்ணினான்" (வச 24-26). ஆண்டவர் தரும் ஆறுதல் அநாதியானது; எகிப்து தரும் களிப்பு அநித்தியமானது. நமது தேவன் "சகலவிதமான" ஆறுதலின் தேவன், "சகல" உபத்திரவங்களிலும் ஆறுதல் செய்கிறவர் (2 கொரி 1:3,4). பிதா சகலவிதமான ஆறுதலின் தேவன், அவரது குமாரன் முதலாவது தேற்றரவாளன், பரிசுத்தாவியானவர் வேறொரு தேற்றரவாளன்! முப்புரித் தேற்றம்!

ஈ) பாடுகளைப் பொறுமையாய்ச் சகித்தல் பெரும் பலனைத் தரும். "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோ 8:1). அப்போஸ்தலன் இங்கு உயிர்த்தெழுதலின் மகிமையைக் குறித்துப் பேசுகிறான். கிறிஸ்துவின் வருகையில் உயிரோடுள்ள பரிசுத்தவான்கள் மறுரூபமடைவர், மரித்த பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுவர் (வச 5). "ஆயிரம் நாளைப் பார்க்கிலும் உமது பிரகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல்லது" எனத் தேவனிடம் அங்கலாய்க்கிறான் தாவீது (சங் 84:10). இன்று இவ்வுலகில் நாம் படும் பாடுகளுக்கு ஈடாக தேவ சமுக நித்திய மகிழ்ச்சியில் ஒரு நாள் போதுமே. "அங்கே" நாம் என்றென்றுமாய் வாழுவோம் என்ற நினைவே ஆறுதல்!

தேவனே தேற்றுகிறவர். தமது அனந்த ஞானத்தில் தம் பிள்ளைகளுக்குப் பாடுகளை அனுமதிக்கிறார். அவரது கிருபை எந்தச் சூழலுக்கும் போதுமானது. உலகம் தரும் ஆறுதல் பறந்தோடிவிடும். நிலையான ஆறுதல் தேவனிடமிருந்தே கிட்டும். "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" (2 கொரி 4:17). இதுவே தேவன் ஆசிக்கும் விசுவாசம்.

6. தேவனே வெற்றிவேந்தர் என விசுவாசித்தல்

தேவன் விரும்பும் விசுவாசம் வெற்றி சிறக்கும் விசுவாசம். தேவன் நம்முன் வெற்றி வீரராகச் செல்கிறார் என அது நம்பும். எச்சூழலிலும் பாதுகாப்புக்கும் (வச 31), வெற்றிக்கும் (வச 30, 31) அது தேவன் மீது நம்பிக்கையாயிருக்கும். "சாத்தியம்" என்பதே அதன் கோட்பாடு. இவ்வித சாதக விசுவாசம் மூவகை அறிவுக்குள் நம்மை நடத்தும்.

அ) நம்மைச் சுற்றியுள்ள ஆபத்துகளிலெல்லாம் நம்மைக் காப்பதெப்படியென்று தேவன் அறிவார். "விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுகாரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படியாதவர்களோடேகூடச் சேதமாகாதிருந்தாள்" (வச 31). "கர்த்தர் தேவ பக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்க... அறிந்திருக்கிறார்" என்றான் பேதுரு (2 பேது 2:9). கிறிஸ்துவின் இரத்தத்தின் சின்னமான சிவப்புக் கயிற்றால் ராகாப் காப்பாற்றப்பட்டாள். சத்துரு கிறிஸ்துவின் இரத்தத்தைக் கண்டு நடுங்குகிறான். அவரது இரத்தத்தால் நாம் மூடப்பட்டிருப்போமானால் பயமேன் ?

வல்லமை உண்டு, உண்டு, அற்புத வல்லமை;
இயேசுவின் இரத்தத்தால்;
வல்லமை உண்டு, உண்டு, அற்புத வல்லமை;
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்.

ஆ) நரலோகின் வாசல்கள் சபையை மேற்கொள்ள முடியாது. "விசுவாசத்தினாலே எரிகோ நகரின் மதில்கள் ஏழு நாள் சுற்றிவரப்பட்டு விழுந்தன" (வச 30). யேகோவாவின் சேனை முழக்கத்திற்குமுன் எதிரியின் கோட்டை தகர்ந்தது. சபையே தாக்கும் விசை! பரிசுத்தரின் பரிவாரத்திற்குமுன் பாதாளமே பதறும். "என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை" என உறுதி கூறினார் இயேசு. " வெளிப்படுத்தல் புத்தகத்தின் செய்தி என்ன ?" என வினவினார் ஞாயிறு பள்ளி ஆசிரியர். பளிச்சென்று பதிலுரைத்தான் மாணவன், "அதிலென்ன சார் சந்தேகம் ? இயேசு ஜெயிக்கிறார் !"

இ) எல்லா அரசுகளும் மேற்கொள்ளப்படும். "விசுவாசத்தினாலே இராஜ்யங்களை ஜெயித்தார்கள்" (வச 33). உலகில் எல்லா இராஜ்யங்களும் கிறிஸ்துவின் சாம்ராஜ்யத்திற்குமுன் பணிய வேண்டும். தானியேல் புத்தகத்தின் தலையாயத் தீர்க்கதரிசனமிது: " வானத்தின் கீழெங்குமுள்ள இராஜ்யங்களின் ராஜரிகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமான

வருடைய பரிசுத்தவான்களாகிய மக்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்'' (தானி 7:27). வல்லரசு நாடுகள் என்கிறோம். ஆனால் உன்னத வல்லமையைக் குறித்துக் கேள்விப்பட்டதுண்டோ ? நாம் அதின் பங்குதாரராய் இருக்கிறோம், இருப்போம்! ஆகா!

தேவனே ஜெய வீரர். நம்மைச் சூழ்ந்திருக்கும் பயமுறுத்தும் சக்திகளினின்று அவர் நம்மை விடுவிக்கிறார். உலகிலுள்ள அனைத்து அரசுகளும் கிறிஸ்துவின் அரசுக்குமுன் பணியவேண்டும். உலகத்திலிருக்கிறவனைவிட நம்மிலிருப்பவர் பெரியவர். மார்தட்டி முன்செல்லும் சபையைக் கைதட்டி நிறுத்துபவன் யார்? வெற்றி நமதே! இவ்வித விசுவாசத்தையே தேவன் விரும்புகிறார்.

முடிவுரை

பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தர் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கடுத்த "வாக்குகளையே" பிரதானமாக விசுவாசித்தனர் (வச 13,33,39). மேசியாவைக் குறித்த வாக்குகள் ஆதியாகமம் 3:15இலிருந்து துவங்கின. அவர்கள் இரட்சகர், சுகமளிப்பவர், ஆண்டவர், தேற்றரவாளன், வெற்றி வேந்தர் எனும் மேசியாவை எதிர்பார்த்து நின்றனர். ஆனால் அவர்களல்ல, நாமே இவ்வாக்குகளின் நிறைவேறுதலைக் கண்டு களிக்கிறோம்! "அவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சி பெற்றும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற் போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு சிறந்ததொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்தார்'' (வச 39,40). நமது சிலாக்கியம்தான் என்ன, பொறுப்புதான் என்ன! இந்த ஆறுவித விசுவாசத்தை அனுதினமும் அப்பியாசித்து தேவ சாட்சியைப் பெற்றிடுவோம். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு இது தான் ஆயத்தம். "கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்து தாமதமாயிரார்" (2 பேதுரு 3:3,9,13).

கிறிஸ்தவ ஓட்டப்பந்தயம்

இந்த அத்தியாயம் "ஆகையால்" என்று துவங்குவதிலிருந்து, இது விசுவாசத்தைக் குறித்த பதினோராம் அத்தியாயத்தோடு இணைந்தது என அறியலாம். கிறிஸ்தவ வாழ்வு விசுவாச ஓட்டம்தான். இந்த அத்தியாயத்தில் கிறிஸ்தவ ஓட்டத்தின் ஏழு தடைகள், ஏழு உதவிகள், ஏழு பரிசுகளைக் காணலாம்.

அ) தடைகள்

1. பாரங்கள்

"பாரமான யாவற்றையும்... தள்ளிவிட்டு... நமக்குக் குறிப்பிட்டுள்ள பந்தயத்தில் மனவுறுதியோடு ஓடுவோமாக" (வச 1).

ஒட்டத்தில் நம்மைக் கீழே தள்ளுபவை உடலுக்கடுத்த காரியங்களைக் குறித்த தேவையற்ற, தேவைக்கு மிஞ்சின கவலைகளாகும். விதைக்கிறவன் உவமையை விளக்கும்போது இயேசு, "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தை கேட்கிறவனாயிருந்தும், உலகக் கவலையும் செல்வத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப்போடுகிற

தினால், அவன் கனியற்றுப் போவான்'' என்றார் (மத் 13:22). மற்றொரு இடத்தில் இயேசு, "என்னத்தை உண்போம்... குடிப்போம்... உடுப்போம்... என்று கவலைப்படாதிருங்கள்... முதலாவது இறையரசையும் அவரது நீதியையும் தேடுங்கள்'' என்றார் (மத் 6:31-33). நமக்கு எதிர்காலம் வைத்திருப்பது **என்ன** என்று நாம் அறியத் தேவையில்லை; நமது எதிர்காலத்தை வைத்திருப்பவர் **யார்** என்று அறிவோமானால் அதுவே போதுமானது. நமது காலங்கள் தேவனது கரத்தில் உள்ளன! பவுலோடு ஓடின ஒருவன் தேமா. ஆனால் அவன் "இந்த உலகத்தின்மேல் ஆசை" வைத்ததினால் ஓட்டத்தின் இடையில் நின்றுவிட்டான் (2 தீமோ 4:10). அதே அத்தியாயத்தில், "ஓட்டத்தை முடித்தேன்'' எனப் பவுல் சாட்சி பகருகிறான். பணம் நல்ல வேலைக்காரன், ஆனால் பொல்லா எஜமான்! எச்சரிக்கை! உலகப் பொருட்கள் நமக்கு செத்தவன் வாயில் வெற்றிலை பாக்குபோல் இருக்கவேண்டும்! "மண்ணுலகிலுள்ளவைகளையல்ல, விண்ணுலகிலுள்ளவைகளையே நாடுங்கள்... ஏனென்றால் நீங்கள் செத்துவிட்டீர்கள்'' (கொலோ 3:1-3).

2. நெருங்கி நிற்கும் பாவம்

"நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு...'' (வச 1).

இங்கே "பாவங்கள்'' அல்ல, "பாவம்'' என்றே குறிக்கப்பட்டுள்ளது. இது அவிசுவாசமென்னும் பாவமன்றி வேறென்ன? இதுவே பாவங்களில் பெரும் பாவம். நித்திய தண்டனைக்குள் மனிதனைத் தள்ள இதுவல்லவோ இறுதியில் காரணமாகிறது? தன் நற்செய்திப் புத்தகத்திலும் நிருபத்திலும் யோவான் இதை அழகாய் விவரிக்கிறான். "அவர் (பரிசுத்தாவியானவர்) வந்து பாவத்தைக் குறித்தும்... உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார். அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக் குறித்தும்...'' (யோ 16:8,9). கிறிஸ்துவை விசுவாசிக்க மறுப்பதே பாவங்களில் பிரதான பாவம். பிறரின் எந்தப் பாவத்தின் மன்னிப்பிற்காகவும் நாம் வேண்டுதல் செய்யலாம்; ஆனால் கிறிஸ்துவை விசுவாசியாததை எவருக்கும் மன்னிக்கும்படி நாம் வேண்ட முடியாது. ஏனெனில் இது "மரணத்திற்கேதுவான'' பாவம் (1 யோ 5:16,17). இஸ்ரவேல் மக்களில் எத்தனை எத்தனையோ குற்றங்குறைகள் இருந்தும் தேவன் அவர்கள் அவிசுவாசத்தையே பிரதானமாகச் சுட்டிக்காட்டுகிறார். "அவிசுவாசத்தினாலே அவர்கள் அதில் நுழையக்கூடாமற்போனார்களென்று பார்க்கிறோம்'' (எபி 3:19). அவிசுவாசமென்னும் பாவத்தை வேறுபிரித்துக்காட்டும் சங்கீதம் 106:7,8,12,13 வசனங்களையும் பாருங்கள். "சீக்கிரமாய் அவருடைய

செயல்களை மறந்து" சந்தேகங்களுக்கும் கேள்விகளுக்கும் இடங் கொடுத்தார்கள். நமது முதல் பெற்றோரின் முதல் பாவமே அவிசுவாசம்தான். தேவனுடைய வார்த்தையை நம்பாது பிசாசின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டார்கள். எல்லாப் பாவங்களுமே தேவன் மீதும் அவரது வார்த்தை மீதும் எழும் அவ நம்பிக்கையிலிருந்தே துளிர்விடுகின்றன. கிறிஸ்தவ ஓட்டம் அவிசுவாசத்தினால் தடைபடுகிறது.

3. அவமானமும், பகைமையும்

"அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்த... இயேசுவை நோக்கி" (வச 1,2).

கிறிஸ்தவக் கூட்டத்திற்குக் கைதட்டுமா உலகம்? நம்மைச் சூழ்ந்துள்ள உலகின் நிந்தைக்கும் கேலிக்கும் நிச்சயமாய்த் தப்போம். "நாங்கள் உலகத்துக்கும் தூதருக்கும் மனிதருக்கும் வேடிக்கையானோம். நாங்கள் கிறிஸ்துவிற்காகப் பைத்தியக்காரர்... வலிமையற்றோர்... மதிப்பற்றோர்... இந்நாள் வரைக்கும் உலகத்தின் குப்பையைப் போலவும் எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவுமானோம்" என்று பவுல் சரியாகச் சொன்னான் (1 கொரி 4:9,10,13)., நம்மைப் புரிந்துகொள்ள முடியாத தினாலேயே உலகம் நம்மைப் பகடி பண்ணுகிறது. நாம் "விநோதமான வர்கள்." உலகத்தின் வேடிக்கைப் பொருளாவது கிறிஸ்தவனின் பங்கு. சிலுவை என்பது தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுதல், கேலி போன்றவை ஆகும். அது கட்டாயம் வந்து சேரும். "தன் சிலுவையைச் சுமந்துகொண்டு எனக்குப் பின்செல்லாதவன் எனக்குச் சீடனாயிருக்கமாட்டான்" என்றார் இயேசு (லூக் 14:27). இச்சிலுவை நமது சத்தத்தைஅடக்காமல் சாட்சிக்கு இன்னும் விசையேற்றவேண்டும். "விபசாரமும் பாவமுமுள்ள இத் தலை முறையில்" நாம் கிறிஸ்துவைக் குறித்தும் அவரது வார்த்தைகளைக் குறித்தும் வெட்கப்படக் கூடாது. வேதாகமப் பேருண்மைகளைப் பறை சாற்றும்போதெல்லாம் பவுலின் சாட்சி, "கிறிஸ்துவின் நற்செய்தியைக் குறித்து நான் வெட்கப்படமாட்டேன்" என்பதே (ரோ 1:16).

4. சோர்பும், சலிப்பும்

"நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு... அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்... நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி" (வச 3,12).

இளைப்பும் அதைத் தொடர்ந்து வரும் சோர்பும் கிறிஸ்தவ ஓட்டத்தில் தவிர்க்க முடியாதவை. இதற்குமேல் முடியாது என்று ஒருபோதும் சொல்லக்கூடாது. பழைய ஏற்பாட்டிலேயே எலியா தனிப் பிறவிதான். பெண்களிடம் பிறந்தவர்களில் பெரியவன் என்று இயேசுவால் சாட்சி பெற்ற யோவான் ஸ்நானகனும் "எலியாவின் ஆவியும் வல்லமையும்" கொண்டவன் எனப்பட்டான். இந்த எலியாவைக்கூட சோர்பும் சலிப்பும் விட்டுவைக்க வில்லை. அவன் சாவை வேண்டினான்! "போதும் ஆண்டவரே" என்று புலம்பினான்! (1 இரா 19:4-7). தேவன் நம்மைக் குற்றஞ்சாட்டுகிறவரல்ல, உயிர்ப்பித்து உற்சாகப்படுத்துகிறவர். தமது தூதன் மூலம் அப்பமும் தண்ணீரும் எலியாவிற்கு அனுப்பினார். அப்பமானது தேவ வார்த்தையையும், தண்ணீர் அவரது ஆவியையும் குறிக்கும். இவற்றினால் நமக்குப் புத்து ணர்வு தருகிறார். அவரது வார்த்தை நம்மைப் பலப்படுத்துகிறது, ஆவி புதுப்பிக்கிறது. பந்தயத்தில் ஓடுகிறவர்களுக்கு குளுகோசும் சோடாவும் கொடுப்பார்களே, அதுபோல! தேவ மக்களோடு ஐக்கியங்கொள்ளும் நேரம் பரலோக மன்னாவும் மாரியும் பொழியும் நேரம் போன்றது. கர்த்தருக்குக் காத்திருக்கும்போது அவர் வலிமை தருகிறார். அப்பொழுது, கழுகுகளைப் போலச் செட்டைகளை அடித்து எழும்புவோம்; ஓடினாலும் இளைப்படையோம், நடந்தாலும் சோர்படையோம் (ஏசா 40:29-31). பறத்தல், ஓடுதல், நடத்தல்! இவை யாவும் முன்செல்லுவதைக் குறிக்கின்றன. ஆனால் பறப்பதுதான் பாதுகாவலானது. பறக்கும் பருந்து ஊரும் பாம்பைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை!

5. உடைந்த உறவுகள்

"எல்லாரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களா யிருக்கவும் நாடுங்கள்; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. ஒருவனும் தேவனுடைய கிருபையை இழந்துபோகாத படிக்கும் யாதொரு கசப்பான வேர் முளைத்தெழும்பிக் கலக்கமுண்டாக்கு கிறதினால் அநேகர் தீட்டுப்படாதபடிக்கும்... எச்சரிக்கையாயிருங்கள்" (வச 14,15).

பந்தயத்தில் நம்முடன் ஓடுகிறவர்களையும் நாம் கவனிக்க ஒரு படிப்பினை இது! ஓட்டத்தின் சட்டதிட்டங்களென்ன? அம்பயர் யோவேல் அழகாய் உரைக்கிறார்: "அவைகள் பராக்கிரமசாலிகளைப்போல ஓடும்... வரிசைகள் பிசகாமல், ஒவ்வொன்றும் தன் தன் அணியிலே செல்லும். ஒன்றை ஒன்று நெருக்காது; ஒவ்வொன்றும் தன் தன் பாதையிலே செல்லும்" (2:7,8). ஒருவரையொருவர் இடித்து முன்சென்று நின்றால் ஆண்டவர் கை குலுக்குவாரோ? ஒருவரோடொருவர் சமாதானமும் பரிசுத்தமுமின்றி

முடிவு கோட்டை அடைந்தால் அங்கே ஆண்டவர் நம்மைக் கைதட்டி வரவேற்கமாட்டார். நமது குறையைக் காணாதபடி அன்பின்மை நம் கண்களை மங்கச் செய்யும். "தன் சகோதரனைப் பகைக்கிறவன் இருளிலே இருந்து இருளிலே நடக்கிறான்; இருளானது அவன் கண்களைக் குருடாக்கின படியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான்" (1 யோ 2:11). உறவுகளிலுள்ள நமது கசப்பு பிறரையும் பாதிக்கும், கறைப் படுத்தும். கிறிஸ்தவ ஓட்டம் ஒரு குழு ஓட்டமாகும். "நான்" அல்ல, "நாம்." "உமது காரணமாய் எல்லாரும் இடறலடைந்தாலும், **நான்** ஒருபோதும் இடறலடையேன்" என்ற பேதுருவுக்கு நடந்ததை நாம் அறிவோமே.

6. சிற்றின்பங்கள்

"ஒருவனும் வேசிக்கள்ளனாகவும் ஒருவேளை ஆகாரத்துக்காகக் தன் முதற்பேற்றுரிமையை விற்றுப்போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவ னாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்" (வச 16,17).

எந்தவொரு ஓட்டத்திலும் கட்டுப்பாடு அவசியம். "பந்தயத்திற்குப் போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் தன்னடக்கமாயிருப்பார்கள். அவர்கள் காய்ந்துபோகும் கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய் கிறார்கள். நாமோ அழிவில்லாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். —என் உடலை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்றான் பவுல் (1 கொரி 9:25-27). உடலுக்கடுத்த இச்சை நமது ஆன்மீக வாழ்வைப் பலமிழக்கச் செய்து தசைகளைத் தளரச் செய்கின்றது. சிம்சோன் வல்லவனாயிருந்தும் தெலீலாளின் மடியில் வலுவிழந்தானே. வேசித்தன மென்னும் அக்கினிப் பொறியோடு விளையாடுபவர்களுக்குச் சீரான எச்சரிக்கையிது. இந்தப் பாவத்தோடு நாம் போராடக்கூடாது, அதைவிட்டு ஓடவேண்டும் (1 கொரி 6:18; 2 தீமோ 2:22). கானானுக்குப் போகும் வழியில் இஸ்ரவேலரில் இருபத்து மூன்றாயிரம் பேர் ஒரே நாளில் இப் பாவத்தினால் விழுந்துபோய் ஓட்டத்தை முடிக்க இயலாது போனார்கள்.

7. கீழ்ப்படியாமை

"பேசுகிறவருக்கு நீங்கள் செவிசாய்க்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்" (வச 25).

தேவன் எழுதிவைத்துள்ள சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் கிறிஸ்தவ ஓட்டத்தில் வெற்றியில்லை. நாம் ஓடும்போதே தேவன் "பரத் திலிருந்து" வழிநடத்துகிறார். அவரது சத்தம் நாம் வலது இடது புறம்

சாயாதபடி நம்மைக் காக்கிறது. தேவனது கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமற் போவோமானால் நமது ஓட்டப் பாதையில் வெளிச்சம் இராது. “வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்கவேண்டும். இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால் அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை” (ஏசா 8:20). திருவசனம் என்பது வேதமும் சாட்சி ஆகமமும் கொண்டது— அதாவது போதனைகளும் எடுத்துக்காட்டுகளும் நிறைந்தது. தேவனது வார்த்தைக்கு விருப்போடு கீழ்ப்படிவோமானால் பாதையில் இடறமாட்டோம் (சங் 119:165). நாம் எத்தனை கெட்டிக்காரராயிருந்தாலும் சட்டத்தை மீறுவோமானால் தள்ளப்படுவோமே. “விளையாட்டு வீரர் எவரும் விதி முறைகளுக்கு உட்படாது விளையாடினால் வெற்றிவாகை சூடமுடியாது” (2 தீமோ 2:5). ரோம மற்றும் கிரேக்க விளையாட்டுகளிலிருந்து பவுல் நமக்குச் சேகரித்தளித்துள்ள கிறிஸ்தவப் பாடங்கள் இவை.

கிறிஸ்தவ ஓட்டத்தின் தடைகளைத் தாண்டிவிட்டோம். இப்பொழுது ஓட்டத்தை வெற்றியாய் முடிக்க நமக்குள்ள உதவிகளைச் சற்றே நோக்குவோம்.

ஆ) உதவிகள்

1. உற்சாகமூட்டும் சாட்சிகள்

“மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க” (வச 1).

கிறிஸ்தவ ஓட்டத்தைத் தொடர் ஓட்டத்திற்கு ஒப்பிடலாம். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் முதல் பாதியை ஓடினார்களென்றும் நாம் இறுதிப் பாதியை ஓடி முடிக்கவேண்டும் என்று சொல்லலாம். அவர்கள் தங்கள் பங்கை நன்றாய் முடித்தனர்! “முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்” (11:2). “பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆவிகள்” இப்போது நமக்குச் சாட்சிகள் (வச 23). நமது ஓட்டத்தைத் துடிப்புடன் கவனிக்கின்றனர். தங்கள் ஓட்டக்காரர் ஓடும்போது தங்கள் நாட்டுக் கொடியை ஆட்டி நிற்பரே, அதுபோல்தான். “பரலோகத்தில் பேரெழுதியிருக்கிற முதற்பேறானவர்களின் சர்வ சங்கமாகிய சபையாகிய” விண்ணரசைச் சேர்ந்தவர்கள் நாம். தேவனது சீரணி அரங்கத்தின் விசுவாச வீரரைக் குறித்து வாசிக்கும்போதெல்லாம் இப்படிப்பட்ட ஆவியே நம்மைப் பற்றியிருக்கவேண்டும். கிறிஸ்து இவ்வுலகிலிருந்த நாட்களில் மோசேயும் எலியாவும் மகிமையில் தோன்றி அவர் எருசலேமில் நிறைவேற்றப்போகிற பாடுகளைக் குறித்துப் பேசினதாக வாசிக்கிறோம் (லூக் 9:30,31). இன்றும்

நாம் வேதத்திலுள்ள பரிசுத்தரின் சரிதைகளைத் தியானிக்கும்போது தேவன் அவ்விதமே நம்மை ஊக்குவிக்கிறார். அவர்களது பாதை சுலபமாயிருக்கவில்லை. உபத்திரவங்களும், பாடுகளும், சோதனைகளும் அவர்களது தவிர்க்கமுடியா பங்காயிருந்தன. ஆனாலும் அவர்கள் மேற்கொண்டனர். அவர்களது தேவனே நமது தேவன். நாமும் வெற்றி கொள்வோம். ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபின் தேவன் நம்மோடிருக்கிறார்!

2. இயேசுவின் முன்மாதிரி

"விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி... அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்" (வச 2,3).

இயேசு கிறிஸ்துவே நமது தலைவரும் பயிற்சியாளருமாயிருக்கிறார். அவர் நடந்ததுபோல (ஓடினதுபோல) நாமும் நடப்போம் (ஓடுவோம்). "சீடன் தன் குருவுக்கு மேற்பட்டவனல்ல: தேறினவன் எவனும் தன் குருவைப் போலிருப்பான்" (லூக் 6:40). நாம் அவரைப் போலாவதற்காகக் கிறிஸ்து நம்மைப் போலானார். அவர்தாமே முதலில் ஓடியிருப்பதால் நமது ஓட்டத்தில் நாம் சந்திக்கும் சகல பிரச்னைகளையும் அவர் நன்கறிவார். "நமது பலவீனங்களைக் குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக் கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவ மில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்" (4:15). ஒவ்வொரு சூழலிலும் இயேசு எவ்விதம் நடந்துகொண்டார், என்ன பேசினார் என்று கற்கும்படி நான்கு நற்செய்திப் புத்தகங்களையும் தியானிப்பதில் நேரம் செலவழிக்கவேண்டும். அவர் பூரணமான மட்டுமல்ல, போதுமான எடுத்துக்காட்டானவர்! அவர் வெற்றியாய் ஓட்டத்தை முடித்து வீரமாய் அதைச் சிலுவையில் பறைசாற்றினார் (யோ 19:30).

3. தேவனது தண்டிப்பு

வசனங்கள் 5இலிருந்து 11 வரை தேவன் தம் பிள்ளைகளைத் தண்டித்துத் திருத்துவதைக் குறித்துப் பேசுகின்றன.

பந்தயக்காரரின் தவறுகளைப் பயிற்சியாளர் பாராமுகமாய் இருப் பதில்லை. சில வேளை அவரது திருத்தம் கடுமையாகவே இருக்கும். அது பயிற்சியாளரின் சிரத்தையையும் அவர் பந்தயக்காரரின் முன் னேற்றத்தில் காட்டும் அக்கறையையுமே காட்டுகிறது. தேவனது பிரம்பு நமது நன்மைக்காகவே பயன்படுத்தப்படுகிறது. முதலாவதாக, அது அவர் நம்மீது கொண்டுள்ள அன்பையும் கரிசனையையும் காட்டுகிறது (வச 6).

மேலும் தண்டித்தலானது நமது தந்தை-மகன் உறவை உறுதிப்படுத்துகிறது (வச 7,8). சிட்சையின் நோக்கம் சீர்திருத்தமே (வச 9). நமது வாழ்வின் பதரை எல்லாம் சுட்டெரிக்கும் பட்சிக்கும் அக்கினியாய் அவர் இருக்கிறார் (வச 29). சிட்சையின் பலன் அவரது பரிசுத்தத்தில் நமக்குக் கிடைக்கும் பங்கு (வச 10). நடைமுறை நீதி வாழ்வில் வளர்ச்சி (வச 11). மொத்தத்தில் சிட்சை நம்மைச் சீராய் ஓடச் செய்கிறது! எனவே நாம் சோர்ந்துபோகாமலும் அவரது கண்டிப்பையும் தண்டிப்பையும் அற்பமாய் எண்ணாமலும் இருக்க வேண்டும் (வச 5). திட்டிவிட்டாரா? அது திட்டமான திருத்தமேயன்றி வேறல்ல!

4. பரிசுத்தரின் பரிவாரம்

"நீங்கள் சீயோன் மலையினிடத்திற்கும் உயிருள்ள தேவனுடைய நகரத்திற்கும்... முதற்பேரானவர்களின் சர்வசங்கமாகிய சபையினிடத்திற்கும்... வந்து சேர்ந்தீர்கள்" (வச 22,23).

நாம் தனியே இல்லை என்பது எத்தனை ஊக்கம்! பல சமயங்களில் "நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்!" எனும் எலியாவின் மனப்பான்மை நமக்கு வந்துவிடுகிறது. "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையுடைய ஏழாயிரம்பேரை" கண்டுகொள்ள தேவன் நமக்குக் கிருபை அருள்வாராக (2 இரா 19:10,18). நமது "சேனையிலுள்ள" வீரர் எண்ணிலடங்காதோர். நமது "உடல்" பல உறுப்புகளை உடையது. நமது "மந்தையில்" நிறைய ஆடுகள் உண்டு. நாம் பல கற்களாலான "கட்டிடம்." நமது "குடும்பத்தில்" பல குழந்தைகள் உண்டு. பரிசுத்தவான் ஒருவன் தன்னை இந்தப் பரிவாரத்திலிருந்து பிரித்துக்கொள்வது பெரும் தவறாகும். உபதேச வேறுபாடுகள் நம்மைப் பிரிக்கக்கூடுமானால் நாம் கிறிஸ்துவில் ஐக்கியமுள்ளவர்களல்லவே. கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? நாம் தனியே சமாளிக்க முடியாது. ஒருவருக்கொருவர் தேவை. கிறிஸ்தவ வாழ்வில் சுயாதீனம் என்பது சகச்சார்புதானேயன்றி சுயேட்சை அல்ல. நம் எல்லாருக்குமே பலவீனங்களும் அறிவுக் குறைவும் உண்டு. நமது சகோதர சகோதரிகளே அவற்றைச் சரிசெய்வர். "மனத்தளர்ச்சியுள்ளவர்களுக்கு ஊக்கமூட்டுங்கள்; வலுவற்றோருக்கு உதவுங்கள்" (1 தெச 5:14).

5. கிறிஸ்துவின் இரத்தம்

"ஆபேலினுடைய இரத்தம் பேசியதைவிட நன்மையானவைகளைப் பேசுகிற இரத்தமாகிய தெளிக்கப்படும் இரத்தத்தினிடத்திற்கும் வந்து சேர்ந்தீர்கள்" (வச 24).

தேவ மக்களின் தோல்வியே பிசாசின் இலக்கு. அவர்களை எப்படியும் கீழே தள்ள அவன் பல்வேறு முயற்சிகளைக் கையாளுகிறான். ஆனால் இயேசுவின் இரத்தத்தில் நமக்குப் பாதுகாவலுண்டு. அவரது இரத்தத்தினாலேயே பிசாசை வெல்லுகிறோம் (வெளி 12:11). நாம் ஓட்டத்தில் வலுவிழந்துவிடாதபடி புதுப் பலமளித்து உயிரூட்டுவது இயேசுவின் இரத்தமே. "நீங்கள் மனுமகனுடைய சதையை உண்ணாமலும், அவருடைய இரத்தத்தைக் குடியாமலும் இருந்தால் உங்களுக்கு வாழ்வில்லை என்று உறுதியாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்... என் சதை உண்மையான உணவு, என் இரத்தம் உண்மையான பானம்" என்றார் இயேசு (யோ 6:53-55). இளைக்கப்பண்ணும் இவ்வோட்டத்தில் இயேசுவின் இரத்தத்தை நாம் அவ்வப்போது நினைவுபடுத்தி அதின் ஆசீர்வாதங்களைச் சுதந்தரித்துக்கொள்ளுதலே ஊட்டச் சத்தாகும்.

6. தேவ வாக்குகள்

"வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்" (வச 26).

வழியில் வீசும் புயல்களையும் பயமுறுத்தும் சக்திகளையும் நாம் தைரியமாய்ச் சந்திப்போம். கிறிஸ்து நம் படகில் இருக்கிறார் என்பதினால் படகு அலைக்கழிக்கப்படாது என்ற நிச்சயமில்லை. ஆனால் நாம் மூழ்கிப் போகாமல் அக்கரை சேர்வோம் என்பது திண்ணம். சீடர்கள் பயந்து அலறினபோது இயேசு, "உங்கள் விசுவாசம் எங்கே" —காற்றிலா எனது வாக்கிலா ? என்றார் (லூக் 8:22-25). புறப்படும்பொழுது இயேசு, "அக்கரைக்குப் போவோம் வாருங்கள்" என்றார். அக்கரை என்றுதானே சொன்னார், அடித்தரை என்று சொல்லவில்லையே! "உங்களில் நற்செயலைத் தொடங்கினவர் அதை இயேசு கிறிஸ்துவின் நாள்வரை முடிய நடத்தி வருவார்" என்று பவுல் நிச்சயமாய்ச் சொன்னான் (பிலி 1:6). இந்த நம்பிக்கையை நாம் ஒரு விநாடியும் இழக்க இயலாது. அவர் நமது ஓட்டத்தைத் துவக்குகிறவர் மட்டுமல்ல, முடிக்கிறவருமாமே!

7. தேவ கிருபை

"பயத்தோடும் பக்தியோடும் தேவனுக்குப் பிரியமாய் ஆராதனை செய்யும்படி கிருபையைப் பற்றிக்கொள்வோமாக" (வச 28).

கிறிஸ்தவ ஓட்டம் கிருபையில் துவங்கி கிருபையில் தொடர்ந்து கிருபையில் முடிகிறது. எல்லாம் கிருபையினாலேயே. தேவன் தினமும் புதிய, போதுமான கிருபையைத் தருகிறார். அது காலைதோறும் புதியது (புல 3:22,23). ஓட்டப் பாதையில் தைக்கும் ஒவ்வொரு முள்ளிற்கும் அவரது

கிருபை போதுமானது. அவர் முடிவு வரை நம்மை நடத்துவார். பயங்கரமான ஓர் இரவில், தனது இருபத்து மூன்றாம் வயதில், ஜான் நீயூட்டன் மூழ்கும் படகொன்றில் மரண வாசலில் நின்றார். இரவெல்லாம் மரண பயத்தினால் பீடிக்கப்பட்டவராய் தம் வாழ்வை கிறிஸ்துவிற்கு அர்ப்பணித்து மனந் திரும்பினார். அற்புதமாய்ப் படகு கரை சேர்ந்தது. சீக்கிரம் ஊழியத்தில் கால் வைத்தார். அப்பொழுதுதான் *"Amazing Grace"* என்ற புகழ்வாய்ந்த பாடலை இயற்றினார்.

ஆபத்து, அலைகள் ஆவேசமாய்
மோதியும் அடியேன் தப்பி வந்தேன்;
இம்மட்டும் காத்தது உம் கிருபை,
இனியும் நடத்தும் அக்கிருபை

என்பது அப்பாடலில் ஒரு கவி.

கிறிஸ்தவ ஓட்டத்தைக் குறித்துப் பேசும்பொழுது பவுல், "நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்" என்றான் (1 கொரி 9:24). ஆம், தேவன் அளித்துள்ள உதவிகளால் நாம் தடைகளைத் தாண்டி தொடர்ந்து ஓடுவோமானால் பரலோகம் நமக்காகப் பரிசுகளுடன் காத்திருக்கும்.

இ) பரிசுகள்

1. நாம் அக்கரை சேரும்பொழுது அங்கே நமது விசுவாசத்தை முடிக்கிறவராகிய இயேசு கிறிஸ்துவை, தேவ ஆட்டுக்குட்டியை, முகமுக மாய்க் காண்போம் (வச 2). நமது ஓட்டத்தைத் துவக்கிய அவர் இப்போது நம்மை வரவேற்க விரித்த கரங்களுடன் அங்கே காத்திருப்பார்.

2. நாம் எஜமானுடைய மகிழ்வுக்குள் நுழைவோம் (வச 2). ஓட்டத்தின் முடிவு நித்திய மகிழ்ச்சி. இனி கண்ணீரில்லை, கவலையில்லை, மரண மில்லை. மகிழ்ச்சி, மகிழ்ச்சி, என்றுமே மகிழ்ச்சி!

3. தேவனுடைய சிங்காசனத்தின் வலது பக்கத்தில் இயேசு வீற்றிருக்கிறார் (வச 2). அப்படியே நாமும் அவரது சிங்காசனத்தில் வீற்றிருப்போம் (வெளி 3:21). நமது நித்தியப் பணி ஆராதனையாகவே இருக்கும். ஜெபமில்லை, பிரசங்கமில்லை, தொழுகை மட்டுமே!

4. புனிதமாகுதல் நமக்குப் பூரணமாகும். தேவனது பரிசுத்தத்தில் முழுமையாய்ப் பங்குபெறுவோம் (வச 10). கிறிஸ்துவைப் போலவே மறுரூபமாவோம், பாவத்தின் பிரசன்னத்திலிருந்தே மீட்கப்பட்டுவிடுவோம்.

5. காணக்கூடாத தேவனைக் கண்ணாரக் கண்டு களிப்போம் (வச 14). யாரும் அண்டமுடியாத ஒளியிலே இருக்கிறவர் நம்மோடு தங்கி யிருப்பார். நாம் அவரது மக்களாயிருப்போம், அவர் நமது தேவனாயிருப்பார் (வெளி 21:3).

6. ஆசீர்வாதங்களிலேயே "ஆசீர்வாதமான" தேவப் பிள்ளைகளின் பிறப்புரிமையை முழுமையாய் அனுபவிப்போம் (வச 16,17). "தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவு மில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனிதனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை. நமக்கோ தேவன் அவைகளைத் தம் ஆவியினாலே வெளிப்படுத்தினார்" (1 கொரி 2:9,10). இன்று வெளிப்படுத்தப்பட்டவைகள் நாளை நமது அனுபவமாகும்.

7. இறுதியாக, அசையாத இறையரசில் நாம் ஆசாரியரும் இராஜாக்களுமாய் என்றென்றுமாய் தேவனைச் சேவிப்போம் (வச 28). உலக ஓட்டப்பந்தயங்களிலெல்லாம் மக்களுக்குப் பணமோ பதக்கமோ கிடைக்கும். நாமோ கிறிஸ்தவ ஓட்டத்தில் ஓர் "இராஜ்யத்தையே" பெற்றுக்கொள்ளப்போகிறோம்!

எபிரெயர் அத்தியாயம் பதின்மூன்று

சகோதர அன்பு

அரசியலில் புகழ்பெற்ற ரோமரையும், தர்க்க ஞானிகளான கிரேக்கரையும் (கொரிந்தியர்), மார்க்க பக்தியுள்ள எபிரெயரையும் புதிய ஏற்பாட்டில் காணப்படும் மூவகை உலகின் பிரதிநிதிகள் எனலாம். எனவே இம்மூன்று வகையினருக்கும் எழுதப்பட்ட நிருபங்களைப் பிரதிநிதித்துவ நிருபங்கள் என அழைக்கலாம். இம்மூன்று நிருபங்களிலும் பதின்மூன்றாம் அத்தியாயம் அன்பைக் குறித்துப் பேசுவது எத்தனை விந்தை: ரோமர் 13:8-10, “உன்னை நேசிப்பதுபோல அயலானையும் நேசி.” 1 கொரிந்தியர் பதின்மூன்று அன்பின் அத்தியாயம் என்பது யாமறிந்ததே. எபிரெயர் 13, “சகோதர அன்பு நிலைத்திருக்கட்டும்” என்று துவங்குகிறது.

எபிரெயர் புத்தகத்தைத் *“திறந்த வானங்களின்”* புத்தகம் என்றழைப்பது சாலப் பொருந்தும். அதின் முதல் பன்னிரெண்டு அத்தியாயங்கள் நாம் தேவனோடு கொள்ளும் உறவைக் குறித்தவை. ஆனால் சக மனிதரோடு சரியான உறவின்றி நமது கிறிஸ்தவ வாழ்வு முற்றுப்பெறாது. சிலுவையிலுள்ள நெடுமரம் தேவனோடுள்ள நமது உறவையும், குறுக்குமரம் மனிதரோடுள்ள நமது உறவையும் குறிக்கிறது. பதின்மூன்றாம் அத்தியாயம் குறிப்பாக மனிதரிடத்தில் காட்டவேண்டிய அன்பைக் குறித்துப் பேசுகிறது.

நமது சகோதர அன்பை வெளிப்படுத்த வேண்டிய ஏழு வகையினரை இங்கு சந்திக்கிறோம்.

1. அன்னியர்

"அன்னியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு" (வச 2).

இவ்வத்தியாயத்தில் சகோதர அன்பின் முதல் வெளிப்பாடே அன்னியரிடம்தான். அதாவது **விருந்தோம்பல்.** இதைக் குறித்த நியாயப்பிரமாணத்தின் போதனையும் தெளிவு: "யாதொரு அன்னியன் உங்கள் நாட்டில் உங்களோடே தங்கினால், அவனுக்குத் தீங்கிழைக்க வேண்டாம். உங்களிடம் தங்கியிருக்கிற அன்னியனைச் சுதேசி போல எண்ணி, நீங்கள் உங்களை நேசிப்பது போல அவனையும் நேசியுங்கள்" (லேவி 19:33,34). அப்போஸ்தலரும் தங்கள் கடிதங்களில் இதைத் திரும்பத் திரும்ப வலியுறுத்தினர். ரோ 12:9,13, "உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக... அன்னியரை உபசரிக்க நாடுங்கள்." 1 தீமோ 3:2, "கண்காணியானவன்... அன்னியரை உபசரிக்கிறவனுமாய் இருக்கவேண்டும்." 1 பேது 4:9, "முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்." ஆம், விருந்தோம்பல் என்பது கிறிஸ்தவர்கள் முகமலர்ச்சியோடு நிறைவேற்ற வேண்டிய கடமையாகும்.

விருந்தோம்பலின் ஆசிகள் மிகுதி. அறியாமல் தேவதூதரை உபசரித்ததைக் குறித்து ஆக்கியோன் எழுதும்போது ஆபிரகாமையும் சாராளையும்தான் நினைவில் கொண்டிருந்திருக்கவேண்டும். இதை ஆதியாகமம் 18இல் காண்கிறோம். "பகலின் வெப்பமான வேளையில்" ஆபிரகாம் அன்னியர் சிலரை வரக் கண்டபோது உள்ளே ஓடி ஒளித்துக் கொள்ளாமல் வெளியே வந்து அவர்களை வரவேற்றான்! சாராள் விருந்தோம்பலில் ஆபிரகாமுக்குச் சற்றேனும் குறைந்தவளில்லை. இல்லாவிடில் உடனடியாய் அதுவும் அவ்வளவு நல்ல விருந்தை ஆயத்தம்பண்ண விழைந்திருப்பாளோ? இம்மூன்று அன்னியரில் இருவர் தேவ தூதரென்றும் மற்றவர் நமது ஆண்டவரே என்றும் நாம் அறிகிறோம். உபசரிக்கும் பழக்கமற்றிருப்பின் ஆபிரகாம் தம்பதியினர் எத்தனை அருமையான வாய்ப்பை இழந்திருப்பர்! தேவ தூதரைப் பார்க்க விரும்புவோர் அந்நியரை வருந்தியழைத்து நேர்த்தியான விருந்து கொடுத்துப் பார்க்கலாமே!

வெள்ளாடுகளையும் செம்மறியாடுகளையும் பிரிப்பது பற்றிப் பேசுகை யில் இயேசு, வலப்பக்கம் அவர் அனுப்பியவைகளான செம்மறியாடுகள் சுயநலமற்ற விருந்தோம்பற்காரர் எனச் சுட்டிக்காட்டினார். "பசியாயிருந் தேன், எனக்கு ஆகாரம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன், என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அன்னியனாயிருந்தேன், என்னைச் சேர்த்துக் கொண்டீர்கள்; மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத் 25:30-34). நமது நண்பருக்கு விருந்தளிப்பது பெரிய காரியமல்ல. அதை யார்தான் செய்யமாட்டார்? அதில் பாராட்ட என்ன இருக்கிறது? நமது அழைப்போ அன்னியரை உபசரிக்கவே. நமது உபதேசப் பட்டியலில் இதையும் சேர்த்துக்கொள்வோமா?

2. சிறைவாசிகள்

"கட்டப்பட்டிருக்கிறவர்களோடே நீங்களும் கட்டப்பட்டவர்கள்போல் அவர்களை நினைத்துக்கொள்ளுங்கள்; நீங்களும் உடலில்தானி ருக்கிறவர்களென்று அறிந்து, தீங்கனுபவிக்கிறவர்களை நினைத்துக் கொள்ளுங்கள்" (வச 3).

இங்கே சகோதர அன்பு கைதிகளுக்குக் காட்டப்படும் **அனுதாபமாக** வெளிப்படுகிறது. கிறிஸ்துவின் விடுவிக்கும் ஊழியம் தீர்க்கதரிசனத்தில் இவ்விதம் வரையப்பட்டுள்ளது: "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார்... சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் கட்டுண்டவர்களுக்குக் கட்டவிழ்த்தலையும் கூறவும் அவர் என்னை அனுப்பினார்" (ஏசா 61:1). இப்பகுதி ஆன்மீக இரட்சிப்பையே முக்கியமாகக் கூறினாலும் சமூகத்திலுள்ள அடிமைத்தனங்களிலிருந்து மக்கள் விடுதலை பெறுதலையும் அது குறிக்காமலில்லை.

அநியாயமாய்ச் சிறைபடுதல் அன்றாடகச் சம்பவம். வேதத்திலும் பல எடுத்துக்காட்டுகள் உண்டு. யோசேப்பும் யோவான் ஸ்நானகனும் சிறைப்பிடிப்பிற்கு முறையே பழைய, புதிய ஏற்பாடுகளில் முதல் எடுத்துக் காட்டுகள் (ஆதி 39:20; மத் 4:12). யோசேப்பு கிறிஸ்துவுக்கு முன்ன டையாளம், யோவான் முன்னோடி. வெளியே இருப்பவரைவிட சிறைவாசி கள் மோசமானவர்கள் என்று சொல்லவே முடியாது. சிறைவாசிகள் அகப் பட்ட திருடர், மற்றவர் அகப்படாத திருடர், அவ்வளவுதான்! சபையிலும் சமுதாயத்திலும் பலவித திருடருண்டு. தேவனுக்குச் சேர வேண்டியதைத் திருடியவர், வரிசெலுத்தத் தவறி அரசை ஏமாற்றுவோர், கறுப்புப்

பணக்காரர், இப்படிப் பலர். வெறுமனே ஒருவரைப் "பகைத்தாலே" அதைக் கொலைக் குற்றமாக வேதம் கணிக்கிறது (1 யோ 3:15). எனவே சிறைகளிலல்ல, வெளியேயே திருடரும் கொலைகாரரும் அதிகம் எனலாம். பணம் பத்தும் செய்யுமல்லவா? எனவே பணக்காரர் தப்பிவிடுகின்றனர். சமுதாயத்தில் எளியவர்தான் மாட்டிக்கொள்வர். எனவேதான் நாம் சிறைவாசிகளுக்கு எல்லாவகையிலும் அனுதாபம் காட்டவேண்டும். தேவன் அநியாயத்தைச் சகிக்கமாட்டார் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தேவையா? அப்போஸ்தலர் நடபடிகளைப் புரட்டிப் பாருங்கள். தேவன் தம் மக்களை எத்தனை முறை சிறையிலிருந்து அற்புதமாய் விடுவித்திருக்கிறார்! (அப் 5:18-20; 12:4-8; 16:23-26).

சிறைவாசிகளுக்கும் சமுதாயத்தில் தள்ளப்பட்டோருக்கும் உத்தமமாய் உதவுவோரை விண்ணரசன் தடபுடலாய் வரவேற்பார்: "வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற அரசைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்... காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள்" (மத் 25:34-36). சார்லஸ் கால்சன் போன்று நல்ல சிறை ஊழியங்களைத் துவக்கினவர்களுக்காகக் கர்த்தரைத் துதிப்போம். உங்கள் ஊரிலும் அண்மையிலுமுள்ள நெருக்கப்பட்டோருக்காக நீங்கள் ஏதாவதொன்று செய்தே தீரவேண்டும். செத்துக்கொண்டிருந்த கள்ளனுக்கு ஊழியம் செய்த இயேசுவை நினைத்துக்கொள்ளுங்கள்!

3. வாழ்க்கைத் துணை

"மணவாழ்வு யாவருக்குள்ளும் மதிப்புள்ளதாகவும், மணவறைப் படுக்கை மாசுறாமலும் இருக்கட்டும்; விபசாரக்காரரையும் வேசிக் கள்ளரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" (வச 4).

குடும்ப வாழ்வில் சகோதர அன்பு பிரதானமாக ஒருவருக்கொருவருள்ள **உண்மையாக** அல்லது **உத்தமமாக** வெளிப்படுகிறது. மகிழ்ச்சியான குடும்பத்திற்கு முதல் சாவி அன்பு. பணம் வீட்டைக் கட்டலாம்; ஆனால் அன்புதான் குடும்பத்தைக் கட்டும்.

கணவனின் உத்தமம் அன்பு; மனைவியின் உத்தமம் கீழ்ப்படிதல். "கணவன்மாரே, உங்கள் மனைவிகளை நேசியுங்கள்... மனைவிமாரே, கர்த்தருக்குக் கீழ்படிகிறதுபோல, உங்கள் சொந்தக் கணவருக்குக் கீழ்ப்படியுங்கள்" (எபே 5:25,22). இருவருக்கும் முன்மாதிரி கிறிஸ்து தம் சபையோடு கொண்டிருக்கும் உறவே. உண்மை அன்பு என்பது உடலுற

வோடு முடிவதில்லை. அது தன்னையே வாழ்க்கைத் துணைக்கு முற்றிலுமாய் அர்ப்பணித்தலாம். மற்றெல்லாவற்றையும்விட தம்பதியர் ஒருவரது சகவாசத்தை ஒருவர் ஆசிக்காவிடில் அது அபாயம். தேவனே குணமாக்குகிறவர், காயங்களை ஆற்றுபவர், திரும்பக் கட்டுபவர். நாம் இழந்த யாவற்றையும் திரும்பத்தர வல்லவர். அவரிடம் திரும்பிக் கிறிஸ்துவை மையமாக வைத்துக் குடும்ப வாழ்வைக் கட்டியெழுப்புவோம்.

1 கொரிந்தியர் 13:4-7ஐ மங்கள மணவாழ்விற்கு மந்திரம் எனலாம். "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது;... அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது... சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும். அன்பு ஒருக்காலும் ஒழியாது." ஒவ்வொரு வாரயிறுதி அல்லது மாதக் கடைசியில் கணவனும் மனைவியுமாக இப்பகுதியை வாசித்துத் தங்களையே சரிபார்த்துக்கொள்ளுவது நல்லது.

"விபசாரம் செய்யாதிருப்பாயாக... பிறனுடைய மனைவியை இச்சியாதிருப்பாயாக" (யாத் 20:14,17) என்ற பிரமாணத்தை மலைப் பிரசங்கத்தில் இயேசு நடைமுறையில் விளக்கினார்: "ஒரு பெண்ணை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரம் செய்தாயிற்று" (மத் 5:28). பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கதரிசியும் விபசாரத்தை அடித்துப் பேசியிருக்கிறான்: "ஒருவனும் தன் இளவயதின் மனைவிக்குத் துரோகம் பண்ணாதபடிக்கு, உங்கள் ஆவியைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்" (மல் 2:14-16). அப்படியே புதிய ஏற்பாட்டின் துவக்கப் பக்கங்களிலேயே இப்பாவத்திற்கு விரோதமாக யோவான் ஸ்நானகன் புயலென வீசுகிறான் (மத் 14:3,4). இப்பாவத்தின் பயங்கரத்தைக் குறித்து இன்னும் விளக்கம் வேண்டுமோ? தம்பதியரின் பரஸ்பர அன்பானது நம்பிக்கைத் துரோகத்திற்கு வழியே இல்லாது செய்துவிடவேண்டும்.

4. எதிர்ப்போர்

"நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன், மனிதன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" (வச 5,6).

பகை, போட்டி, இன்னும் எல்லாத் தீமைக்கும் பண ஆசையே வேராயுள்ளது. "போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த

ஆதாயம்'' (1 தீமோ 6:6-11). இப்பண்பே நமது ஆவியை, முக்கியமாக பிறரோடுள்ள உறவில், மென்மையும் மிருதுவுமாகக் காத்துக்கொள்கிறது.

ஈசாக்கு நல்லதோர் எடுத்துக்காட்டு. அவனது வேலைக்காரர் கிணறுகள் தோண்டத் தோண்ட கேராரூர் மேய்ப்பர் அக்கிணறுகளுக்காகச் சண்டையிட்டனர். ஈசாக்கோ எதிர்த்துப் போராடவேயில்லை. இடம்பெயர்ந்து சென்று வேறே கிணறு வெட்டினான். எப்படி அவன் இத்தனை பரந்த மனதுடனிருந்தான்? "நான் உன்னுடனேகூட இருப்பேன்'' என்ற தேவ வாக்கை அப்படியே நம்பினான் (ஆதி 26:15-25). அதைத்தான் எபிரெயர் நிருப ஆக்கியோனும் இங்கே நமக்குக் கற்பிக்கிறான். "அதினாலே நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனிதன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே.'' எனவே எதிரிகளிடம் நமது சகோதர அன்பு, நாம் தேவனிடம் கொண்டுள்ள நம்பிக்கையினால் **தைரியமாக** வெளிப்படுகிறது.

எதிர்ப்புகள் நடுவில் நம்மை அமைதியும் அமரிக்கையுமாய்க் காப்பது தேவன் மீதும் அவரது வாக்குகள் மீதும் நமக்குள்ள நம்பிக்கையே. விசுவாசித்தால் பதற மாட்டோம். ஏசாயா 54:15,17ஐப் பாருங்கள்: "இதோ, உனக்கு விரோதமாய்க் கூட்டங்கூடினால், அது என்னாலே கூடுகிற கூட்டமல்ல; ....உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதே போகும்... இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்திரம்.'' தமது பிதாவின் கைகளில் தாம் இருந்ததை இயேசு விசுவாசித்தபடியால் தம்மைச் சிலுவையிலறைந்தோரைக் குறித்துக் கசப்படையாமல் அவர்களுக்காய் ஜெபித்தார் (லூக் 23:24).

5. தேவ ஊழியர்

வசனங்கள் 7-9, 17-19, 22-24 தேவ ஊழியரிடம் நாம் காட்டவேண்டிய சகோதர அன்பைக் குறித்துப் பேசுகின்றன. நாம் அவர்களை நால்வகையில் கனப்படுத்தவேண்டுமாம்.

முதலாவது, அவர்களது பக்தியுள்ள முன்மாதிரியைப் **பின்பற்ற** வேண்டும். "தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து, அவர்களுடைய நடக்கையின் முடிவை நன்றாய்ச் சிந்தித்து, அவர்களுடைய விசுவாசத்தைப் பின்பற்றுங்கள்'' (வச 7). இதையடுத்து உடனடியாய் ஆக்கியோன், "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்'' என்ற தங்க வசனத்தை எழுதியுள்ளான் (வச 8). பொதுவாய் இவ்வசனத்தைச் சுகமளிக்கும் விடுதலைக் கூட்டங்களில் பயன்படுத்துவர். சரிதான், ஆனால் உபதேசங்

களைக் குறித்த பகுதியிலேயே இவ்வசனம் உள்ளது. "பலவிதமான நூதன போதனைகளால் கவரப்பட்டு அலையாதிருங்கள்" (வச 9). இயேசு கிறிஸ்து மாறாதவராயிருப்பதுபோல நாமும் கற்பிக்கப்பட்ட ஆரோக்கியமான உபதேசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும். பிரசங்கிகள் பலர் ஆண்டுதோறும் உபதேசங்களை மாற்றிக்கொள்கின்றனர். அதைப் "புதிய வெளிப்பாடுகள்" என்று அழைத்துவிடுவர். எச்சரிக்கை! தடுமாற்றமின்றி உறுதியாய் நடப்போரைப் பின்பற்றுங்கள். நிருப ஆக்கியோன் உணவு களைக் குறித்ததோர் உபதேசத்தை எடுத்துக்காட்டாகக் கூறுகிறான்! (வச 9). உணவுகள், நாட்கள், உடைகளைக் குறித்த சட்டதிட்டங்களைத் திணிக்கிறார்களா? விழித்துக்கொள்ளுங்கள். "கிருபையினாலே இருதயம் உறுதிப்படவேண்டும்." அதுவே காரியம். எப்பக்கமும் மிதமிஞ்சிவிடா திருங்கள்.

இரண்டாவது, நாம் நமது ஆன்மீகத் தலைவர்களுக்குக் **கீழ்ப்படிய** வேண்டும். இது உள்ளூர்ச் சபை மூப்பரைக் குறிக்கிறது. "உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்திரவாதம்பண்ணு கிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால் அவர்கள் துக்கத்தோடு அல்ல, மனமகிழ்வுடன் அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள்; அவர்கள் துக்கத்துடன் அப்படிச் செய்தால் அது உங்க ளுக்குப் பயனளிக்காதே" (வச 17). நீங்கள் கணக்கொப்புவிக்கவேண்டிய தலைவர் உங்களுக்குண்டா? உங்களைக் கேள்வி கேட்கும் உரிமை யாருக்காவது உண்டா? இல்லாவிடில் உங்கள் நிலை ஆபத்தானது. உங்களை "விழிப்புடன்" காக்கிறவர் ஒருவருமில்லையே. நீங்கள் மேய்ப்பனில்லாத ஆடு. நொடிப்பொழுதில் ஓநாய்களால் பட்சிக்கப்பட்டுப் போவீர்கள். நாம் வாழ்வது சுயேட்சை நிறைந்த காலம். சபை வாழ்விற்கோ அது பாதகம். அதே வேளை தலைவர்களும் சபையினரின் எல்லா விவகாரங்களிலும் தலையிடுவதைத் தவிர்த்து அவர்கள் ஆரோக்கியமாக வளர்ந்து முதிர்ச்சியடைய போதுமான விடுதலையும் தரவேண்டும்.

மூன்றாவது, நாம் ஊழியருக்காக **ஜெபிக்க**வேண்டும். "எங்களுக்காக வேண்டிக்கொள்ளுங்கள், நாங்கள் நல்மனச்சாட்சியுள்ளவர்களாய் எல்லாவற்றிலும் யோக்கியமாய் நடக்க விரும்புகிறோமென்று நிச்சயத்தி ருக்கிறோம்" (வச 18). ஊழியர் தேவ தூதரல்லவே. அவர்களும் எல்லா மனிதரைப் போல சோதனைக்குட்படக்கூடியவர்தானே. ஊழியரின் ஊழியத்திற்காய் ஜெபிப்பதற்கு மேலாக அன்னாரது வாழ்க்கை நேர்மையும், உண்மையும், நன்னடத்தையுள்ளதுமாயிருக்க ஜெபிக்கவேண்டும். இன்றைய ஆன்மீக உலகில் இப்பண்புகளெல்லாம் குதிரைக் கொம்பாகிவிட்டபடியால் பெரும்பாலானோர் பிரசங்கிகள் மீதுள்ள தங்கள் நம்பிக்கையை இழக்கத் துவங்கிவிட்டனர். ஆனால் நாம் குற்றஞ்சாட்டுவதை நிறுத்தி ஜெபிக்கத் துவங்கவேண்டும்.

இறுதியாக, நாம் தலைவர்களை மதிக்கவேண்டும். "உங்களை நடத்து கிறவர்களை வாழ்த்துங்கள்" (வச 24). நமது சொற்களினால் மட்டுமல்ல, சொத்துக்களினாலும் ஊழியரைக் கனம்பண்ணவேண்டும். "நன்றாய்க் கவனித்து நடத்துகிற மூப்பர்களை, சிறப்பாக திருவசனத்திலும் உபதேசத்திலும் உழைப்பவர்களை, இரட்டை மதிப்பிற்குத் தகுதியுள்ளோராக எண்ணவேண்டும். போரடிக்கிற மாட்டை வாய் கட்டாதே என்றும், வேலையாள் தன் கூலிக்குத் தகுதியாயிருக்கிறான் என்றும் வேத வாக்கியம் சொல்லுகிறதே" (1 தீமோ 5:17,18). மருத்துவரின் ஆலோசனை கேட்க அவர் கேட்கும் பணத்தை மறுக்காமல் எண்ணிக் கொடுக்கிறோமே. ஆன்மீக ஆலோசனை கேட்டு ஆத்துமாவில் குணமடைய ஊழியரிடம் செல்லும்போது மட்டும் ஏன் கஞ்சத்தனம்? முக்கியமானது எது — உடலா, உள்ளமா?

6. கிறிஸ்து

இதோ, நமது அண்ணனாகிய இயேசுவின்மீது சகோதர பாசத்தைக் கொட்ட நமக்கோர் அழைப்பு! அவரோடு நம்மை **அடையாளப்படுத்திக் கொள்ள** ஓர் அறைகூவல்!

அவர் "தமது சொந்த இரத்தத்தை" நமக்காகச் சிந்தினபடியால் முதலாவதாக நம்மிலுள்ள எல்லாவற்றினாலும் அவரை நேசிக்கக் கடன் பட்டிருக்கிறோம் (வச 12). ஒருவன் தன் நண்பருக்காகத் தன் உயிரைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை என்றார் இயேசு (யோ 15:13,14). இயேசு நம்மை வேலைக்காரர் என்றழைக்காமல் நண்பர் என்கிறார். அவர் நமக்காகச் சிலுவை ஏறினதினால் தமது அன்பின் உச்சத்தை வெளிப்படுத்தினார். இப்போது நமது அன்பை எதிர்பார்த்து நிற்கிறார். அவர் பரமேறுமுன் தம் சீடனிடம் கேட்ட இறுதிக் கேள்வி: "நீ என்னை நேசிக்கிறாயா?" என்பதே (யோ 21:15-17). அடுத்தடுத்து மும் முறையாக அதையே கேட்டார். எவ்வளவாய் நமது அன்பிற்காக ஏங்குகிறார் பாருங்கள்!

அடுத்து, சுயவெறுப்பும் சிலுவை சுமத்தலும் வருகிறது. "நாம் அவருக்கு ஏற்பட்ட இகழ்ச்சியில் பங்குகொண்டு, பாளையத்துக்கு வெளியே அவரிடம் செல்வோம்" (வச 13). இது இரட்சிப்பிற்கோ, ஆசீர்வாதத்திற்கோ அல்ல, அவரது பாடுகள் மற்றும் நிந்தைகளில் பங்குபெற அழைப்பு. "ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றட்டும்" (மாற் 8:34). தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுதல், ஏமாற்றம், வேதனை, துன்புறுதல்,

அநியாயம், அவமானம், நிந்தை, உதவியின்மை, பயங்கரம், இருள், புகழின்மை போன்றவையே சிலுவை என்பது. முடிவோ மகிமையான உயிர்த்தெழுதல்! சீடனாகத் தன்னைப் பதிந்துகொண்டவனெவனும் சிலுவைக்குத் தப்பியோட எத்தனிக்காது அதை எதிர்நோக்கட்டும்!

என் மீட்பர் சென்ற பாதையில்
செல்ல ஆயத்தமா?
கொல்கதா மலைப் பாதையில்
பங்கைப் பெறுவாயா?

என்று இன்று பாடனுபவிக்க அழைப்பு வருமானால்

சிலுவையை நான் விடேன்
சிலுவையை நான் விடேன்

என்று ஆணித்தரமாய், அழுத்தந்திருத்தமாய் பதிலுரைக்க ஆயத்தமா?

இன்றையப் பாடுகளில் நமது வாய் முறுமுறுப்பினாலும், சலிப்பினாலுமல்ல, துதியினால் நிரம்பியிருக்கவேண்டும். "நிலையான நகர் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். ஆகையால், அவருடைய நாமத்தைத் துதிக்கும் உதடுகளின் கனியாகிய துதிப் பலியை அவர் மூலம் எப்போதும் தேவனுக்குச் செலுத்துவோமாக" (வச 14,15). ஒருவரை உயிருக்குயிராய் நேசிப்போமானால் அவருக்காய் மகிழ்வுடன் எந்த இழப்பையும் துன்பத்தையும் சகிப்போமல்லவா? அண்ணன் இயேசுவுக்காய்ப் பாடுபடுவது பாக்கியமன்றோ?

7. எளியவர்

"நன்மை செய்யவும் தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார்" (வச 16).

இங்கு சகோதர அன்பாய் வெளிப்படுவது **தர்மம்**. "நன்மை செய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்குக் கிடைக்கும் வாய்ப்பின்படி, யாவருக்கும், குறிப்பாய் விசுவாசக் குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்வோமாக" (கலா 6:9,10). எந்தத் தருணத்தையும் நழுவவிடாது நமது செல்வத்தை இல்லாதோரோடு பகிர்ந்துகொள்வதோடல்லாது அச்செயலில் சலிப்படையாமலும் இருக்கவேண்டும். தேவன் சலிக்காமல் நமக்குக் கொடுக்கிறார்; நாமும் சலிக்காமல் வாங்கிக்கொள்ளுகிறோம். அப்படி

யானால் பிறருக்குப் பகிர்வதில் நாம் மட்டும் எப்படிச் சலிப்படையலாம்? நேசிக்காமல் கொடுக்கலாம்; ஆனால் கொடுக்காமல் நேசிக்க முடியாது என்றார் ஏமி கார்மைக்கல் அம்மையார்.

நாம் கிரமமாய்க் கொடுக்கத் துவங்கி தியாகமாய்க் கொடுக்கும் நிலைக்கு வளரவேண்டும். தேவனுக்கென்று நமது வருமானத்தில் பத்தில் ஒன்று பிரித்து வைப்பதுபோல் ஏழைகளுக்கென்றும் பத்தில் ஒன்று ஒதுக்கி வைக்கலாம். இரு ஏற்பாடுகளும் ஏழைக்குக் கொடுப்பதைக் குறித்து ஏராளம் போதித்தாலும் பிரசங்க பீடங்களில் இச்செய்திக்குப் பஞ்சம்தான். "ஏழைகள் எப்பொழுதும் உங்களிடத்திலிருக்கிறார்கள்" என்றார் இயேசு. "நாட்டில் எளியவர்கள் இல்லாதிருப்பதில்லை; ஆகையால் உன் நாட்டில் தேவையுள்ளவனும் எளியவனுமாகிய உன் சகோதரனுக்கு உன் கையைத் திறக்கவேண்டும் என்று நான் உனக்குக் கட்டளையிடுகிறேன்" (உபா 15:11) என்று திருச்சட்டத்தில் தேவன் கூறியுள்ளார். தேவப் பணிக்கு நாம் கொடுக்கும்போது தேவனுக்குக் "காணிக்கை" கொடுக்கிறோம்; ஏழைகளுக்குக் கொடுக்கும்போதோ தேவனுக்குக் "கடன்" கொடுக்கிறோம்! (நீதி 19:17). அதாவது இரண்டுமே பரம வங்கியில் நமது கணக்கில்தான் சேருகிறது! தேவன் ஒருவருக்கும் கடன்பட்டவரல்ல என்பதை மறந்துவிடக்கூடாது.

சுகம் பெறுவதற்கோர் சூத்திரம் உண்டு: "எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றவர்; துன்ப நாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்... படுக்கையில் அவன் நோயுற்றுக் கிடக்கையில் ஆண்டவர் அவனுக்குத் துணை செய்வார்; நோய் நீங்கிப் படுக்கையினின்று அவன் எழும்பும்படிச் செய்வார்" (சங் 41:1-3). ஜெபம், மருந்து, ஊசி, பத்தியம்— சலித்துப்போய்விட்டீர்களா? தருமம் செய்து பாருங்களேன்!

முடிவுரை

இவ்வத்தியாயத்தின் இறுதியில் இரு ஆசீர்வாத உரைகளுண்டு (வச 20,21,25). அவை இந்நிருபத்தை அலங்காரமாய் முடிக்கின்றன. "நித்திய உடன்படிக்கையின் இரத்தத்தினாலே ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை இறந்தோரிடமிருந்து எழுப்பிய சமாதானத்தின் தேவன், இயேசு கிறிஸ்துவைக் கொண்டு தமக்குப் பிரியமானதை உங்களில் நடப்பித்து, நீங்கள் தம்முடைய சித்தத்தின்படி செய்ய உங்களைச் சகலவித நற்செயலிலும் தேறினவர்களாக்குவாராக; அவருக்கு என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்." "கிருபையானது உங்களனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்."

ஆசிரியரது பிற நூல்கள்—

- அறிவூட்டும் அகவுணர்வுகள்
- அழகிய பாதங்கள்
- ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி ?
- இரட்சிக்கப்படுவது எப்படி ?
- உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்
- ஊழியரும் மக்களும்
- ஐந்தப்பம் இரு மீன்
- கண் திறக்கும் கட்டுரைகள்
- காட்டுத் தேன்
- சமநிலைக் கிறிஸ்தவன்
- சிறு நரிகள்
- திரும்பிய மனிதன்
- தெளிவான பதில்கள் (தொகுப்பு ஒன்று)
- தெளிவான பதில்கள் (தொகுப்பு இரண்டு)
- பொற்பழங்கள்
- நெஞ்சில் நெருப்பு
- மாணவ மணிகளுக்கு...

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்கள் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Youth Mission
Church Colony
Vellore 632 006
India

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

எழுப்புதலுக்கும் நற்செய்திப் பணிக்கும் அர்ப்பணிக்கப்பட்டு 1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத ஓர் ஊழியம்.

- ❐ எழுப்புதல் முகாம்கள், வேத பாடங்கள், பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.
- ❐ பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு ஜெபக் குழுக்கள் உருவாக்குதல்.
- ❐ முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின் குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள், மருத்துவ மனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.
- ❐ ஏறத்தாழ 260 முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம், ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத், கேரளம், தமிழ்நாடு, மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களிலுள்ள கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும் சபைகள் நிறுவுதல்.
- ❐ அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, தமிழ், தெலுங்கு, மராத்தி, மலையாளம் ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை மற்றும் புத்தகங்கள், பிரதிகள் வெளியிடுதல்.
- ❐ மருத்துவப் பணி, நிவாரணப் பணி, எழுத்தறிவு கற்பித்தல் போன்றவை மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

இவ்வியக்கத்திற்காய் ஜெபியுங்கள்!
இயக்கத்தின் ஊழியங்களில் பங்குபெறுங்கள்!
பொருளுதவி கொடுத்து ஆதரியுங்கள்!

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 0416-242943, 248943
E-Mail: bym@vsnl.com

இயேசு கிறிஸ்து

விண்ணகத்தில் அமர்ந்திருந்து

தமது மூலம் கடவுளிடம்

சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்து

அவர்களை முழுமையாய்

இரட்சிக்க வல்லவராய் இருக்கிறார்!

(எபிரெயர் 7:25; 8:1)

கட்டிடப் பொறியியலரான ஆசிரியரும் குழந்தை நல மருத்துவரான அவரது மனைவி லில்லியனும் ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் மிஷனரிகளாய்த் தங்கள் நேரம் முழுவதையும் எழுப்புதல் பணியிலும் மிஷனரி ஊழியத்திலும் செலவிடுகின்றனர். பல புத்தகங்கள் எழுதியுள்ள இவர்கள் *“ஆசீர்வாதம்”* எனும் இயக்கத்தின் மாதப் பத்திரிகையின் எழுத்தாசிரியர்களாய் இருக்கின்றனர். இவர்களது ஒரே மகள் இவாஞ்சலின் கிறிஸ்தவ ஆலோசனை ஊழியம் செய்கிறாள்.